விடுதலைக்கு விலங்கு



ம.பி. சேவியர் எம்.ஏ. எம்.எட்.

விடுதலைக்கு விலங்கு

ம.பி. சேவியர், எம்.எ;எம்.எட்

சேவியர் பதிப்பகம்
'சேவியர் இல்லம்'
மாடத்தட்டுவிளை
வில்லுக்குறி - 629 180

நூற் குறிப்பு

நூல்	:	**விடுதலைக்கு விலங்கு**
வெளியீடு	:	10-10-2003
ஆசிரியர்	:	**ம.பி. சேவியர்,** எம்.எ;எம்.எட்,
வெளியிட்டோர்	:	சேவியர் பதிப்பகம்
		சேவியர் இல்லம்
		மாடத்தட்டுவிளை
		வில்லுக்குறி - 629 180
காகிதம்	:	13.2Kg சேசாய்யீ
பக்கங்கள்	:	98
அச்சும் அமைப்பும்	:	அசிசி ஆப்செட்
		அசிசி வளாகம்
		நாகர்கோவில் - 629 001
விலை	:	25/-

மதத்தீவிரவாத
நெருப்பில்
திட்டமிட்டுக் கொல்லப்பட்ட
அப்பாவி மக்களுக்கும்
அடிமட்ட மக்கள் வாழ்வு மலர
அன்றாடம் நெருப்பாற்றில் நீந்தும்
அருட்தந்தையர்க்கும்
அருட்கன்னியர்க்கும்
அர்ப்பணம்

அணிந்துரை

இலக்கியம் காலத்தின் கண்ணாடி - காலத்தைப் பிரதிபலித்துக் காட்டுவது. அண்மைக் காலங்களில் பத்திரிகைகளில் வரும் செய்திக்கட்டுரைகள் புத்தகங்கள் பெரும்பாலும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பாசிசம்! பாசிசம்! பாசிசம்!

பாசிசம் என்றால் ஏதோ இந்து மதவெறி போலத் தோன்றுகிறது. பாசிசம் என்பது முதலாளித்துவத்தின் கொடூரமான சர்வாதிகாரம் ஆகும்.

முதலாளித்துவம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஜெர்மனியில் முன்னிறுத்தியது இனவெறி. இந்தியாவில் மதவெறியாக நீக்கமற நிறைந்து நிற்கிறது. எல்லாத் துறைகளிலும் மேலாதிக்கம் கோலோச்சுகிறது. நீதித்துறையிலும் கூட...

இதனால் மக்கள் போராட்டங்கள் நீர்த்துப் போய்விடுகின்றது. ஜனநாயகம் சந்திப்பது தோல்வி! தோல்வி! தோல்வி!

அதே நேரத்தில் உலகமயம், தாராளமயம், தனியார்மயம் போன்ற மயங்கள் சக்கைப் போடுபோடுகிறது.

இதனால் இன்று உண்மையான நாட்டுப் பற்றுள்ள நல்லவர்கள் கதிகலங்கிப் போய்நிற்கிறார்கள். கண்ணிய சீற்றம் கொண்டு சீறி நிற்கிறார்கள். 1947-இல் பெற்ற விடுதலை இன்று விலங்குக்குள்ளாகி போனதே என்று கலங்கிப்போய் கண்ணீர்வடிக்கிறார்கள். தண்ணீர் விட்டோ வளர்த்தோம் இறைவா கண்ணீர்விட்டு அல்லவா வளர்த்தோம் கருகத் திருவுளமோ என்று நெஞ்சு பொறுக்காமல் குமுறுகிறார்கள்.

கண்ணிய சீற்றத்தோடு நெஞ்சுக்குமுறி வெடித்திருக்கிறார் ஆசிரியர் ம.பி. சேவியர் அவர்கள். நம்மையறியாமல் நம்மாலேயே நமக்கு விலங்கு போட்டது யார் என்று அடையாளப்படுத்தியிருக்கிறார். கைக்கு விலங்கு பூட்டியவரைவிட ஆன்மாவுக்கு விலங்கு பூட்டியவன் ஆபத்தானவன்.

விடுதலைக்குப் பூட்டப்பட்ட விலங்குகளை விளக்கமாகத் தருகிறார். ஏராளமாகப் படித்திருக்கிறார். வரலாற்று எதார்த்தங்களை விமர்சத்தோடு விளக்கியிருக்கிறார். ஏராளமான நிகழ்வுகளை அழகாகத் தொகுதிருக்கிறார். வாசிக்க வாசிக்க விறுவிறுப்பாக உள்ளது. கண்ணிய சீற்றம் தருகிறது. வாசிக்கத் தொடங்கினால் வாசித்து முடிக்காமல் மூடத்தோணாது. வாசியுங்கள்!

சுதந்திர இந்தியாவில் வாழ வேண்டியவர்கள் இந்துக்களல்ல இசுலாமியரல்ல கிறிஸ்தவருமல்ல. மனிதர்கள் வாழ வேண்டும் மனிதர்கள் ஆள வேண்டும் என்பது ஆசிரியரின் அவா.

மனித முயற்சிகளெல்லாம் வீழ்ச்சியடையும்போது தெய்வம் குறுக்கிடும் என்பது வரலாறு. ஒருபுறம் பாரவோன்கள் மறுபுறம் செங்கடல்கள். மக்கள் என்ன செய்வார்கள்! பாரவோன்கள் வீழ்வார்கள், செங்கடல் வழிகாட்டும்.

நம்பிக்கையுடன்,
அருள்பணி. பிரான்சிஸ் சேவியர் ஜெ.
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்.
கோட்டாறு மறைமாவட்டம்

பக்கங்களைப் புரட்டும் முன்....

“நாமிருக்கும் நாடு நமதென்பபறிவோம் - இது
நமக்கே யுரிமையா மென்பதறிந்தோம் - இந்தப்
பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம்”

என்று சுதந்திர பள்ளு பாடினார் பாரதி அன்று.

- ஆனால் இன்று விடுதலை இந்தியாவை
வகுப்புவாதம் - மதஅடிப்படைவாதம் - பிரிவினைவாதம்
என்ற விலங்குகள் ஆக்கிரமித்துள்ளன.
இவ்விலங்குகளை மாட்டி
சமூக - அரசியல் - பொருளாதார நிலைகளில்
ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளுககுத் தீர்வு காணாது
அரசு நாற்காலியைத் தக்கவைத்துக்கொள்ள
மக்களைக் கும்பகாணர்களாக்கி அவர்கள் உணர்வுகளைத்
தூண்டிவிட்டு அதில் குளிர் காயலாம் எனத்
திட்டம் தீட்டி செயல்படுகிறது ஆளும் வர்க்கமும்
அவர்களுக்குத் துணை நிற்கும் சமயவகுப்புவாத அமைப்புகளும்.

- இவ்வமைப்புக்கள் தன் நோக்கத்தை நிறைவேற்ற
இந்திய விடுதலைக்கு முன்னும் - பின்னும் - இன்றும்
பொய் பிரச்சாரங்கள் செய்தும் - வதந்திகளைப் பரப்பியும்
குழப்பங்கள் - கலவரங்கள் - கொலைகள் -
திட்டமிட்டு நடத்திவருகின்றனர் என்பதை
தலைவர்கள் - விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் -
ஆதாரங்களோடு நமக்குத் தெரிவிக்கின்றன.

- இவர்களில் நல்லவர்கள் என்பதே கிடையாது.
இவர்களும் இவர்கள் அமைப்புகளும்
இடத்துக்கு இடம் நிறம் மாறிகள்.
காமராஜர் சொல்லியது போல
“ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்”
என்பதை இந்திய மக்களும் குறிப்பாக
சிறுபான்மையினருக்கும் - திராவிட இந்துக்களுக்கும்
தெரிவிக்கும் நோக்கில் எழுதப்பட்டதே இந்நூல்.

- நிலவுகின்ற வர்க்க சாதி பேதங்களை மூடிமறைத்துவிட்டு இந்து என்ற போலியான மதப் போர்வையைப் போர்த்தி சாதிய படிநிலை அமைப்பை நியாயப்படுத்தி நிரந்தரமாக்கிட மேற்கொள்ளும் முயற்சியாளர்களின் முகமூடிகளைத் திறந்து காட்டுவதே இந்நூல்.

- எனவே இந்நூலின் கருத்துக்கள் அடிமட்ட மக்களிடமும் அடிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களிடமும் சென்று சேர்ந்து முகமூடிக் கும்பலின் பிடியிலிருந்து பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து திட்டமிட்டுப் போடப்பட்ட விலங்குகளை உடைப்போம்.

- இவ்விலங்கொடிக்க உதவிடும் எம் எழுத்துப்பணிக்கு உதவியாய் - உறுதுணையாய் இருக்கும் அனைத்து உறவுகளுக்கும் - நட்புகளுக்கும் நன்றிகள் - நல்வாழ்த்துக்கள்.

- ஆக்கியக் கருத்துக்களை அச்சாக்கி அழகுற வடிவமைத்த *அசிசி ஆப்செட்* அனைத்துத் தொழிலாளத் தோழர்களுக்கும் - என்றும் என்பணியைத் தட்டிக்கொடுப்பதோடு நல்லதொரு அணிந்துரை அளித்தவரும் - என்பெயரைத் தன்பெயராய் கொண்டவரும் - கோட்டாறு மறைமாவட்டப் பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளருமான *அருட்பணி J. பிரான்சிஸ் சேவியர்* அவர்களுக்கும் என் இதயத்து நன்றிகள்

- என் எழுத்துப் பணிக்கும் ஏனைய வட்டாரப் பணிகளுக்கும் துணையும் தூண்டுதலும் தந்து நிற்கும் முளகுமூடு வட்டார முதல்வர் *அருட்பணி. இயேசுரத்தினம்* அவர்களுக்கும், என் முயற்சிகளுக்கு எப்போதும் ஊக்கமும் உறுதுணையும் தரும் என் இல்லக்கிழத்தி *திருமதி. N. மேரி சரோஜா*வுக்கும் - என் அடிமனத்துடிப்பின் ஆழ்ந்த நன்றிகள்.

அன்புடன்
ம.பி. சேவியர்

வாயில்கள்

பக்கம்

1. பொய்மை வாய்மையாகிறது 1

2. பன்முகத்தன்மை பாழ்படுகிறது 11

3. மதசார்பின்மை மாசுபடுகிறது 17

4. கல்வி காவியாகிறது 29

5. ஆரிய மொழிக்கு அரியணை 38

6. இந்திய கலாச்சாரம் 51

7. திரைமறைவு தீவிரவாதம் 61

8. புதிய பாசிஸ்டுகள் 70

9. மதமாற்ற விடுதலை 82

10. விலங்கொடிப்போம் 91

1 பொய்மை வாய்மையாகிறது

2003 பெப்ருவரி 26
இந்திய குடியரசு தலைவர்
அப்துல் கலாம் அவர்கள்
நம் நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில்
இந்திய விடுதலைக்காக வீரத்தியாகங்கள்
செய்த தலைவர்கள் படங்கள்
வைக்கப் பட்டிருந்த இடத்தில்
எதிர்கட்சிகளின் எதிர்ப்புக்களுக்கிடையில்
ஒரு படத்தைத் திறந்து வைத்தார்

- அந்தப் படம் யாருடைய படம்?
  அந்தப் படத்திற்கு அப்படியொரு எதிர்ப்பேன்?
  காந்திமகான் கொலைவழக்கில்
  குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலையானவரும் -
  1910ஆம் ஆண்டு லண்டனில் கைதாகி
  கப்பலில் இந்தியாவுக்குக் கொண்டுவரும்போது
  கடலில் குதித்துத் தப்பியவரும் -
  அந்தமான் சிறையிலிருந்து விடுதலையாக
  ஆங்கில அரசிடம் மன்னிப்புக் கடிதமும்,
  கருணை மனுவும் அளித்தவரும் -
  'இந்துத்துவம்' என்ற விசவிதையை
  இந்திய மண்ணில் ஊன்றியவரும் -
  'இந்துமகா சபை' என்ற அமைப்பைச்
  சித்பவன் பார்ப்பனர்களுக்காகவே
  தொடங்கி நடத்தியவருமான
  ஒரு மதவெறியரும், சாதிவெறியருமான
  சவார்கரின் படந்தான் அது.

✪ அப்படத்தை அங்கு வைத்ததன்மூலம்
நாட்டின் விடுதலைக்காகத் தங்களை அழித்துக்கொண்ட
தியாகச் செம்மல்களுடையவும்
சமயசார்பற்ற தலைவர்களுடையவும்
படங்களை வைத்து பெருமை கொண்ட நமக்கும் -
நமது விடுதலை தியாகிகளின் தியாகத்துக்கும் -
நமது நாட்டின் சமயசார்பற்ற தன்மைக்கும் -
களங்கம் ஏற்படும் விதத்தில்
நாடாளுமன்ற மண்டபத்திற்குப்
பெருங்கறையை ஏற்படுத்திவிட்டது
வாஜ்பாயின் கூட்டணி அரசு.

✪ இந்தச் சவார்கர் மட்டுந்தான்
மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவராவென்றால்
இல்லை. இப்படத்தைத் திறக்கக்
காரணமாய் இருந்தவரும் -
தன்னை ஆர்.எஸ்.எஸ். தொண்டனெனக்
கூறிக்கொள்வதில் பெருமைப்படுவதாகக்
கூறிவரும் பாரதப்பிரதமர் வாஜ்பாயும்
மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்தான்.

✪ 1942ஆம் ஆண்டு
'வெள்ளையனே வெளியேறு' போராட்டம்
தொடர்பாக ஏற்பட்ட 'பண்டேஸ்வர்' சம்பவம்
காரணமாய் கைது செய்யப்பட்டுச்
சிறையில் அடைக்கப்பட்டார் வாஜ்பாய்.
அங்கு தன்னுடைய புரட்சி நண்பர்கள் பெயர்களைச்
சொல்லிக் கொடுத்ததோடு மன்னிப்புக் கடிதமும்
எழுதிக் கொடுத்து வெளியே வந்தாரென்று
அவருடைய சகோதரர் பிரேம் பீகார் லால் வாஜ்பாய்
மத்திய பிரதேச அரசு நடத்திய
'சந்தேஷ்' என்ற பத்திரிகையில்
ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதாக.
1974ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று வெளியான
'பிளிட்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டு
இவ்வழக்கின் முழுவிபரத்தையும் வெளியிட்டு
இவர்கள் தேசபக்தியைத் திரையிட்டுள்ளது.

- முன்னாள் குடியரசு தலைவர்
  கே. ஆர். நாராயணன் அவர்கள் தட்டிக்கழித்த
  இந்தப் படத்திறப்பு விழாவை
  இன்று இஸ்லாமியராகிய அப்துல் கலாமைக்
  கொண்டு திறக்கவைத்து இஸ்லாமியர்
  ஆர்.எஸ்.எஸ். ஐயும் அதன் தலைவர்களையும்
  போற்றுகிறார்கள் என்ற பொய்ச்சரடுவிடவும்
  தயங்கமாட்டார்கள்.

- இப்படியொரு தந்திரம்
  நம்தேசபிதா காந்தியடிகளிடமே நடந்துள்ளது.
  1934-ஆம் ஆண்டு 'வார்தா'வில்
  ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம் நடந்தது
  அப்பயிற்சி முகாமைப் பார்வையிட
  காந்தியடிகளை ஹெட்கேவர் அழைத்தார்
  அம்முகாமைப் பார்வையிட சென்று
  "ஹிட்லரின் நாசிப்படையும்
  இதேபோல்தான் சேவை செய்ததென்பதை
  மறந்துவிடவேண்டாம்"
  என்று ஹிட்லர், முசோலினி போன்ற பாசிசப் படைகளுடன்
  ஆர்.எஸ்.எஸ்.ஐ ஒப்பிட்டுக் கூறிய காந்தியடிகளைத்
  தங்கள் பிரச்சார சாதனங்கள் மூலம்
  "ஆர்.எஸ்.எஸ். சேவையைக் காந்தியடிகள்
  நேரில் பார்த்து பாராட்டினார்"
  எனப் பொய் பிரச்சாரம் செய்தனர்.
  இச்சம்பவத்தைப் 'பியாரிலால்' தான் எழுதிய
  காந்தியடிகளின் சுயசரித புத்தகம்
  440-வது பக்கத்தில் கூறுகிறார்.

- இது போன்று
  1928-இல் நேதாஜியை
  ஹெட்கேவர் சந்திக்கப் போனதாகவும்
  அப்போது நேதாஜி
  "இந்து ராஷ்டிரம் அமைக்கும்
  உங்கள் பணியினால் மட்டுமே
  இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்"
  என்று கூறியதாக ஆர்.எஸ்.எஸ்.இன்
  (The man and his mission) நூல் கூறுகிறது.

✪ அதேவேளையில் ஹெட்கேவரின் சுயசரிதையில்
(பிஷிகார் எழுதியது - பக் 58-59)
"1928-இல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குச்
சென்றிருந்த ஹெட்கேவர் கல்கத்தா மேயரான
சுபாசுடன் பேசியதாகவும்,
அவர் 'இந்து ராஷ்டிரத்தை வரவேற்பதாகவும்,
இந்து சமூகம் செத்துவிட்டதாகவும்,
அதனால் இதன் அடிப்படையில் செயல்பட
முடியுமென்று அவர் நம்பவில்லை"
என்று கூறியதாகவும் எழுதப்பட்டுள்ளது.
என்னே முரண்படு!

✪ ஆனால்
இது ஒரு பொய்பிரச்சாரம் என்பதை
ஆர்.எஸ்.எஸ்.இன் முதல் செயலாளர்
ஜி.எம். ஹுட்டர் வேறுவிதமாகக் கூறுகிறார்.
இவர்தான் போஸ் சார்பில் ஹெட்கேவரிடம்
தூதுபோனவர். அவர் சொல்கிறார்,
"நாசிக்கில் நான் ஹெட்கேவரைச்சந்தித்தபோது
சில இளைஞர்களோடு ஜோக் அடித்து
மகிழ்ச்சியாய் பேசிக்கொண்டிருந்தார்.
நேதாஜி போஸ் உங்களைச் சந்திக்க விரும்புகிறார்
என்று நான் சொன்னபோது அதற்குச் சம்மதிக்க
ஹெட்கேவர் மறுத்து என்னால் பேசமுடியாது
அந்த அளவுக்கு உடல் நலமில்லை என்றார்.
நான் வெளியே வந்ததும் மீண்டும் அவ்விளைஞருடன்
ஜோக் அடித்து பேசிக் கொண்டிருந்தார்"
என்று (இல்லஸ்டிரேட் வீக்லி அக். 7, 1979) எழுதுகிறார்.
இப்படி இச்சம்பவம்பற்றி பலமுரண்பாடுகள்.

✪ 1948-ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ்.
தடைசெய்யப்பட்டிருந்தபோது
இந்த ஏமாற்றுப் பேர்வழிகளைப் பற்றி
நன்கு தெரிந்திருந்த நேருமகானைச் சந்தித்து
அந்தத் தடையை நீக்க கோல்வாக்கர்
முயன்றதை அறிந்த நேருமகான்
"இந்தியப் பாராளுமன்றத்தின் கொள்கையையும்
அமைய இருக்கும் அரசியல் சட்டத்தையும்

எதிர்ப்பதுதான் உங்கள் உண்மையான கொள்கை.
எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி
உங்கள் அமைப்பின் நடவடிக்கைகள்
தேசவிரோதமானவை –
சூழச்சியானவை –
வன்முறையானவை"
என்று ஒரு கடிதம் கோல்வாக்கருக்கு நேருமகான் எழுதுகிறார்.
இது எத்துணை உண்மையாக இன்றும்
அவர்கள் பேச்சிலும் - செயலிலும் நீக்கமற
நிறைந்திருப்பதை நாம் காணமுடியும்.

- இவர்கள் பித்தலாட்டங்களால்
உள்ளம் புழுங்கிப் போனவரும் -
இரண்டாவது சுதந்திரப் போரின் தந்தையுமான
ஜெயபிரகாஷ் நாராயணன்
1979 ஏப்ரல் 8ஆம் நாள்
அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு
எழுதிய கடிதத்தைத் 'தினமான்' என்ற
பத்திரிகை வெளியிட்டது.
அக்கடிதத்தில் அவர் எழுதிய வாசகங்களை
அகற்றிட ஆர்.எஸ்.எஸ். காரர்கள்
எவ்வளவு முயன்றும் பணியாத ஜெயபிரகாஷ்
"நீங்கள் இந்த நாட்டின் பிரதமர்
ஆர்.எஸ்.எஸ்.இன் வகுப்பு வெறியை
மாற்ற வேண்டியது உங்கள் கடமை
அதைச் செய்யாவிட்டால் நாட்டின் சிந்தனையாளர்
அனைவரும் இணைந்து ஆர்.எஸ்.எஸ்.ஐ
எதிர்த்து போராடவேண்டிய நிலைவரும்" என்று
இந்த வகுப்பு வெறியர்களைப் பற்றி எழுதினார்.

- அதுபோல் இவர்கள் எந்த அளவு
பிராமண ஆதிக்கத்தை நிலைநாட்ட துணிந்தவர்கள் என்பதை
1979ஆம் ஆண்டு மார்ச் 25 அன்று வெளியான
'சண்டே' பத்திரிகைக்கு ராஜ் நாராயணன்
அளித்த பேட்டியைப் பார்த்தால் தெரியும்
இதோ அந்தப் பேட்டி
"கடந்த 40 ஆண்டுகளாய் ஆர்.எஸ்.எஸ்.
அமைப்பை நான் துல்லியமாக கவனித்துவருகிறேன்.
1940ஆம் ஆண்டு
காந்தியாரைத் தாக்கி பேசினார்கள் –

1942ஆம் ஆண்டுக்குப் பிறகு
காங்கிரசைத் தாக்கி பேசினார்கள் –
தொடர்ந்து ஆங்கில ஏகாதிபத்திய
உளவாளிகளாகச் செயல்பட்டனர் –
அவர்களுக்கென ஒரு கொள்கையுண்டு
ஆங்கிலேயர் பேஷ்வா பிராமணரிடமிருந்துதான்
ஆட்சியைப் பிடித்தனர்
எனவே அவர்கள் இந்தியாவைவிட்டு
வெளியேறும்போது மீண்டும் ஆட்சியைப்
பேஷ்வா பிராமணரிடமே திருப்பித்தரவேண்டும்
என்பதே அவர்கள் கொள்கை.
ஆனால் பேஷ்வா பிராமணர்கள் ராஷ்டிரம்
என்று சொன்னால் மக்கள் ஆதரவைப் பெறமுடியாது.
எனவேதான் அவர்கள் 'பார்ப்பன ராஷ்டிரம்' என்பதை மாற்றி
"இந்துராஷ்டிரம்" எனச்சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.
என்று ஆர்.எஸ்.எஸ்.காரரின் இந்துராஷ்டிர பொய்மையைத்
தெளிவாக தோலுரித்துக் காட்டியுள்ளார்.

- இவ்வாறு காந்தியார் முதல் ஜெயபிரகாஷ் வரை
ஏமாற்ற நினைத்து ஏமாந்த கூட்டந்தான் ஆர்.எஸ்.எஸ்.
இவர்கள் எந்த அளவு பித்தலாட்டமும்
பொய்பிரச்சாரமும் செய்பவர்களென்றால்
"தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ் வளரவேண்டுமென
பலதிராவிடர் கழகத்தினரே ஆதரவும் – நிதியும்
அளித்து வருகிறார்கள்" என தங்களின்
அதிகார ஏடான 'ஆர்கனைசர்' - இல்
1982-இல் எழுதியதைத் திராவிடக் கழக
தலைவர் எதிர்த்தபோது பதில் கூறாதவர்.

- 'இந்து ராஷ்டிரம்' என்பது
பார்ப்பன ராஷ்டிரந்தான் என்பதை
இன்றும்பல திராவிட இந்துக்களான
பிற்படுத்தப்பட்ட - தலித் இந்துக்கள்
புரியாமல் இருப்பதுதான் வேதனைக்குரியது
இரண்டும் ஒன்றே என்பதை ஆர்.எஸ்.எஸ்.இன் குரு
கோல்வார்க்கர் ஒரு சம்பவம் வழிவிளக்குகிறார்.
தென்னாட்டில் ஓர் ஆங்கில அதிகாரி இருந்தார்
அவருக்கு உதவியாளராக அம்மாநிலத்தைச்
சேர்ந்த ஒருவர் இருந்தார்.

அவர் நாயிடு வகுப்பைச் சார்ந்தவர்
அந்த ஆங்கில அதிகாரியின் பியூனாக
ஒரு பிராமணர் இருந்தார்.
ஒருநாள் பிராமண பியூன் பின்தொடர
அதிகாரி வீதியில் நடந்து சென்றார்.
அப்போது அந்த நாயிடு வகுப்பைச்சார்ந்த
உதவியாளர் ஆங்கில அதிகாரியைக் கண்டு
கைகுலுக்கினார். ஆனால் பிராமணப் பியூனின்
காலைத் தொட்டுக் கும்பிட்டார்.
இதைப் பார்த்து வியப்படைந்த ஆங்கில அதிகாரி
"நான் உன்னுடைய பெரிய அதிகாரி
என்னிடம் கைகுலுக்கினாய் என் பியூனின்
காலைத் தொட்டுக் கும்பிட்டாயே இது ஏன்?" என்றார்.
அதற்கு அந்த உதவியாளர்
"நீங்கள் பெரிய அதிகாரியாக இருக்கலாம்
ஆனால் நீங்கள் மிலேச்சர்
அவர் பியூனாக இருக்கலாம்
ஆனால் நாங்கள் வணங்கும் பிராமண சமூகத்தினர்
அவரைத் தொழவேண்டியது என் கடமை"
என்று பதில் சொன்னார். இது தான் இந்துதர்மம்
என்று கூறிமுடிக்கிறார்.
(Bunch of thoughts - page 138-139)

- இதிலிருந்து இந்து ராஷ்டிரம் அல்லது இந்து தர்மம் என்பது பார்ப்பனர்களுக்கு அடிபணிந்த வர்ணாசிரம தர்மத்தில் வாழ்வதுதான் என்று பச்சையாய் - பகிரங்கமாக புரிகிறது. இதுதான் இந்துத்துவாவடிவில் இன்று இந்தியாவில் வலம் வருவது.

- இந்த இந்து ராஷ்டிரம் என்ற இந்துத்துவா இந்தியாவில் இருக்கும் பிராமணரல்லாத எல்லா இந்துக்களையும் பிராமணருக்கு அடிபணியவைத்து அவர்களுக்கு அடிமைகளாக - எடுபிடிகளாக வாழ்ந்திடவைக்கும் ஒரு வர்ணாசிர தர்மம் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

- எனவேதான் இவர்கள் இவ்மைப்பிலோ அரசியலிலோ தலைமையை எக்காரணம் கொண்டும் பிராமணரல்லாத இந்துக்களிடம் கொடுப்பதில்லை

- இந்துபிராமண உணர்வுடைய இவர்கள்
"நாங்கள் முஸ்லீம்களுக்கும் – கிறிஸ்தவர்களுக்கும்
விரோதிகளில்லை" என்று நடத்தும் நாடகமும்
எவ்வளவு பொய் என்பதைப்
"பாரததேசம் என்பது இந்துக்களின் தேசம்
ராஷ்டிரம் என்பது இந்துக்கள் ராஷ்டிரம்
இந்துக்களின் சக்தி மட்டுமே
இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்
எனவே இந்து இளைஞர்களை ஒன்று திரட்டவேண்டும்
என்ற இவர்களின் கூற்று நிரூபித்துவிடுகிறது."
(Thoman and his mission - Page 25)

- அதுமட்டுமல்ல இவர்களைப் பற்றியும்
இவர்கள் தேசியத்தைப்பற்றியும்
நேருமகான் தன்நூலில்
"இவர்கள் சுயநலமும் – தீவிரமான குறுகிய
புத்தியும் கொண்டவர்கள்.
தேசியம் என்ற பெயரில் இதை மறைக்கப்பார்க்கும் கூட்டம்
இந்து முதலாளிகளும் – மன்னர்களும் –
மேல்தட்டு நடுத்தரவாதிகளும் கொண்ட
ஒருவகுப்புவாதிகளின் கூட்டம் இது" என்றும்
(Selected works of Javaharlal Neharu Vol 6 Page 156)
"இந்தப் பிற்போக்கு வகுப்புவாதக்கூட்டம்
தேசியம் என்ற போர்வையில்
தங்கள் வகுப்பு வெறியை மறைத்து
இந்து நிலக்கிழார்களையும்
இந்து மன்னர்களையும் பாதுகாப்பவர்கள்" என்றும்
(Banarus University Speech on 12.11.1933)
நேருமகான் கூறும் கூற்றுகள் அன்றும் இன்றும்
உண்மை என்பதை அவர்கள் சொல்லும் செயலும்
நிரூபித்து காட்டுவதைக் காணலாம்.

- இன்னும் இவர்கள் தங்களைத்
தேசத் தொண்டர்கள் என்றும்
அவசர நிலையை அடியோடு எதிர்த்தவரென்றும்
இந்திராக் காந்தியைத் தீரத்தோடு எதிர்த்தவரென்றும்
மார்புதட்டும் இந்தப் பொய்யர்களின்

முகத்திரையை ஜனதா கட்சித் தலைவர்களில்
ஒருவரான மதுலிமாயி எழுதிய
கட்டுரை படம் பிடித்துகாட்டுகிறது
(Secular Democracy 1979 March)

- "அவசரநிலை எதிர்ப்புப் போர்க்களத்தில்
முன்னணி ஆர்.எஸ்.எஸ்-காரர் கூறுவதில்
கொஞ்சம்கூட உண்மையில்லை.
ஆர்.எஸ்.எஸ். தடைசெய்யப்பட்டது என்ற
அறிவிப்பைப் பார்த்து நடுநடுங்கி
மிசாவின் கீழ்கைது செய்யப்பட்ட ஏராளமான
ஆர்.எஸ்.எஸ்.காரர் மன்னிப்புக் கடிதங்களைச்
சிறை அதிகாரிகளிடம் அளித்தனர்"
"இந்திராவின் தேர்தல் செல்லாது என
அலகபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து
உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து
நாடாளுமன்றத்தில் சட்டத்தைத் திருத்தி
இந்திரா வென்றபோது இந்திராவுக்குப்
பாராட்டுச் செய்தி அனுப்பியவர்தான்
ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரஸ்".
"பொதுத்துறை நிறுவனங்களுக்கெதிராக
சஞ்சைகாந்தி கருத்துக்களைத் தெரிவித்தபோது
அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு
சஞ்சை காந்தியைப் புகழ்ந்ததோடு
எங்களுக்கும் ஜெயபிரகாஸ் நாராயணனின்
முழுப்புரட்சி இயக்கத்துக்கும்
தொடர்பில்லை என்றவர்கள் இவர்கள்"

- இதற்கெல்லாம் மேலாக
இந்திரா தேர்தல் செல்லும் என உச்ச நீதிமன்றம்
தீர்ப்பு வழங்கியதும் -
10-11-1975ஆம் தேதியிட்டு ஒரு கடிதத்தை
இவர்கள் தலைவர் தேவரஸ் எழுதுகிறார்.
அதில் "உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள்
உங்கள் தேர்தல் செல்லும் என்று அறிவித்ததற்காக
என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்"
என்று இந்திராவையும் அத்தீர்ப்பையும் பாராட்டினார்.

- இப்படியெல்லாம் அந்தர்பல்டி அடித்தவர்கள்
ஜனதா கட்சி ஆட்சிக்கும் -
இந்திராவின் ஆட்சிமாற்றத்துக்கும்
தாங்களே காரண கர்த்தாக்களென
கதையளக்கிறார்கள்.

- இப்படிப்பட்ட போலி தேசியத்திற்கும் -
வகுப்பு வாதத்திற்கும் -
பிராமணிய ராஷ்டிரத்துக்கும் -
ஆர்.எஸ்.எஸ். என்ற ஓர் அமைப்பை
கட்டிக்காத்தவருள் ஒருவரான சவார்கருக்கு
நாடாளுமன்ற மண்டபத்தில் படமென்றால்
மதசார்பற்ற நாட்டுக்கும்
நாட்டுமக்களுக்கும் வெட்கக் கேடில்லவா?

2 பன்முகத்தன்மை பாழ்படுகிறது

அண்மையில் சென்னை குசலாம்பாள்
கல்யாண மண்டபத்தில் நடந்த
அகில இந்திய விஸ்வ இந்து பரிச்சத்தின்
துணைத்தலைவர் வேதாந்தம் அவர்களின்
71-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவைக்
கொண்டாடியபோது அக்கூட்டத்தில் பேசிய
செயல்தலைவர் அசோக்சிங்கால்
"இந்தியாவை இந்துநாடு
என்று அறிவிக்க நாடாளுமன்றத்தில்
தீர்மானம் கொண்டு வரவேண்டும்" எனப்பேசினார்.

- இதே கருத்தில்தான்
2000 ஜனவரியில் சண்முகானந்தா ஹாலில்
பேசியபோதும் –
"இந்துக்களுக்கு மட்டுமே
நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்க
உரிமை உண்டு" எனப் பேசினர்.

- எப்படி ஒரு துணைக்கண்டத்தில்
பல்வேறு மொழிகள் - இனங்கள்
மதங்கள் - பண்பாடுகள் - பழக்கவழக்கங்கள்
இருக்குமோ அதுபோல் இந்தியாவும்
பல்வேறு மதங்களையும் -
பல்வேறு இன மக்களையும் -
பல்வேறு வகையான பழக்க வழக்கங்களையும்
பல்வேறு விதமான பண்பாடுகளையும்-
பன்நெடுங்காலங்களாக கொண்டுள்ளதால்

இந்தியாவும் ஒரு துணைக்கண்டமே தவிர
ஒரே கலாச்சாரத்தையும் - பண்பாட்டையும் -
பழக்கவழக்கங்களையும் கொண்ட ஒரு நாடல்ல.

- எனவேதான் சமூகவியல் அறிஞர்
கஞ்சாஇலையா (Kancha Illaiah)
"இந்தியா ஒருபோதும் ஒரேமக்கள் திரளாக
ஒரே பண்பாட்டோடு இருந்ததில்லை" என்கிறார்

- "இந்தியா என்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்று
இது அரசுகளால் மேலிருந்து உருவாக்கப்பட்டதே தவிர
மக்களால் உருவாக்கப்பட்டதல்ல" என்கிறார்
அருந்ததிராய் என்பவர் (The end of Imagination)

- காரணம்
சிந்து சமவெளி பகுதி வழி ஊடுருவி வந்தாலும்
இந்தியாவின் பல பாகங்களில் குடியேறினாலும்
மிகுதியானவர் சிந்து பகுதியில் தங்கிவிட்டதால்
சிந்துக்கள் எனப்பட்டு இந்துக்கள் ஆயினர்.
அதனால்தான் "இந்துமதம்
மதநம்பிக்கையைச் சேர்ந்ததல்ல
இடத்தை வைத்து ஏற்பட்டமதம் எனப்படுகிறது.
ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்ததையே
அது அர்த்தப் படுத்துகிறது"
என்று நமது முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் ராதாகிருஷ்ணன் (The Hindu View of Life)
கூறியுள்ளார்.

- சிந்து நதிப்பகுதியில் வாழ்ந்த
பூர்வீக மக்களை விரட்டியடித்துவிட்டு
அப்பகுதியை இருப்பிடமாகக் கொண்ட
ஆரியரைக் குறிக்கும் சொல்லே இந்தானதால்
"இந்துமதம் என்பதற்குப்பதில் 'ஆரியமதம்'
என்று அழைக்கப்பட்டிருந்தால் அதுவே
மிகப் பொருத்தமாயிருக்கும்" என்று
காந்திமகான் (Hidu Dharma the Glory and the Abuses)
குறிப்பிட்டுள்ளார்.

- நேருபெருமானும்
  "இந்துமதம் என்று குறிப்பிட்டுச் சொல்வது
  பிற்காலத்தில் ஏற்பட்ட ஒருபெயரே"
  என்று 'த டிஸ்கவரி ஆப் இந்தியா'
  என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

- இவற்றை உணர்ந்த காஞ்சிகாமகோடி
  சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரியார்
  "நமக்குள் சைவர், வைணவர் என வேறாக இருந்தாலும்
  வெள்ளைக்காரன் நமக்கு 'இந்துக்கள்'
  என்ற பொதுப் பெயரைத்தந்ததால்
  நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர்
  நம்மைக் காப்பாற்றிற்று" என்கிறார். (தெய்வத்தின் குரல்)

- இந்து சமயம் பல சமய வழிபாடுகளின்
  கூட்டு நிலையாக ஒருமித்து காட்டும் வேளையில்
  பார்ப்பனராஷ்டிரமான - ஆரியராஷ்டிரத்தை
  இந்து ராஷ்டிரம் என்ற பெயரில் கொண்டுவரத்
  துடிக்கும் வர்ணாசிரம வெறியர்கள்
  பார்ப்பன - பானியா - மார்வாடிகள்
  என்ற வணிக வர்க்கத்தினரின் துணையோடு
  பன்முகப் பார்வையுள்ள இந்தியத் துணைக்கண்டத்தை
  ஒரே தேசியம் - ஒரே பண்பாடு - ஒரே மக்கள் -
  ஒரே மொழி என்ற ஒரு முகத்தில் கொண்டுவரத்
  தொன்றுதொட்டே திட்டமிட்டு செயல்படுகின்றனர்.

- இவர்களின் மூதாதையர்
  முதலில் திராவிட மக்களின் ஒரு பகுதியினருக்கு
  மதகுருக்களாக மாறி தங்கள் ஆதிக்கத்தை
  அவர்களிடம் ஏற்படுத்திக் கொண்டனர்
  சின்னஞ்சிறு அரசர்களுக்கும் -
  அவர்கள் சமஸ்தானங்களுக்கும் -
  ஜமீன்தார்களுக்கும் -
  பூசாரிகளாக மாறினர்
  (Dr. U.V. Swaminatha Iyar - Pattirrupattu)

- படிப்படியாக இந்தப் பார்ப்பன இந்துக்கள்
  அரசவைப் புலவர்களாகவும்
  அரசர்களுக்கு ஆலோசனைக்கூறும்

குருக்களாகவும் - ஆசிரியர்களாகவும்
அதிகாரப் பீடங்களை அபகரித்துக் கொண்டனர்.
இவ்வாறு அதிகாரப் பீடங்களைப் பிடித்திட
அவர்களது சிவப்புநிறமும் - கற்றிருந்த கல்வியும்
அவர்களுக்குப் பெரிதும் உதவியது.
(Nilakanda Sastri - Development of Religion in South India).

- இரண்டாவது தந்திரமாக இவர்கள்
வர்ணாசிரம தர்மத்தைக் கையாண்டனர்.
மாஷாம் கூறுவதுபோல திராவிடர்களிடமோ - தமிழ் இலக்கியத்திலேயோ
இல்லாத சாதி முறை எப்போது பிராமணர்களின்
செல்வாக்கு தமிழகத்தில் ஏற்படத்தொடங்கியதோ
அப்போது அவர்களிடம் இருந்த சாதி முறைகளை
வட இந்தியாவில் இருந்ததைவிட தென் இந்தியாவில்
மிகவும் கண்டிப்புடன் திணிக்கத் தொடங்கினர்.
(Basham - The wonder that was India)
இந்தச்சாதிய முறை என்ற
வர்ணாசிர தர்மத்தைத் தெய்வத்தின் பெயரால்
திராவிடரிடம் திணித்தனர்.

  - தங்கள் தலைமைத்துவத்தையும்
  ஆதிக்கத்தையும் தக்கவைத்துக்கொள்ள
  சாதியத்தைப் பயன்படுத்திக் கொண்ட
  இந்த வர்ணாசிரமக்காரர்கள்
  வெண்தாடிவேந்தன் ஈ.வே.ரா. பெரியார்
  போன்ற சமூக சீர்த்திருத்த வாதிகளின்
  சமூக விழிப்புணர்வு பிரச்சாரங்களாலும் -
  காமராஜர் போன்றவரின் இலவசக் கல்வியாலும் -
  அரசியல் சட்டம் வழிபெற்ற இடஒதுக்கீடுகளாலும்
  தங்கள் தலைமைத்துவம் பறிபோவதை
  உணர்ந்ததால்தான் வி.பி.சிங் கொண்டுவந்த
  மண்டல் கமிஷனைக் கண்டு
  பொங்கி எழுந்தனர் - தேர் இழுத்தனர்.

- சாதியால் பிரிந்திருப்பவர்களை
மதவெறியூட்டி தாங்கள் இழந்துவரும்
அரசியல் - ஆட்சி - நிர்வாகம் போன்றவற்றில்
தங்கள் அதிகாரங்களைப் பழங்காலம்போல்

தக்கவைக்கவே இந்த ஒரு முகத்தன்மை கோஷம். இதற்காகவே ஆர்.எஸ்.எஸ்.-ம் அதன் துணை அமைப்புகளும் நாட்டில் இருக்கும் பன்முகத்தன்மையை வன்முறையால் அழித்திடத் துடிக்கின்றனர்.

- பிராமணரின் வைதீக தர்மத்திலிருந்து
  முற்றிலும் மாறுபட்ட
  இயற்கை வழிபாட்டுடன் கூடிய
  பலதெய்வ வணக்கமுடைய திராவிடரிடம்
  சாதி அமைப்பைப் புகுத்தினர்.
  ã ª ù Q ™ "இந்தச் சாதிய அமைப்பு என்ற
  அடித்தளம் சாய்ந்தால் இந்துசமயம் இல்லாதுபோகும்"
  (Madra Mail 1980 March 30)
  என்ற காஞ்சிகாமகோடிபீடம் சங்கராச்சாரியாரின்
  கூற்றுக்கிணங்கி ஒரு காலத்தில்
  நல்ல பாரம்பரியங்களும், மனித சுதந்திரமும்,
  சமதர்மமும், வேலைசெய்வதில் பெருமித எண்ணமும் கொண்ட
  திராவிடர்களைத் தீண்டதகாதவராக்கிவிட்டனர்.

- தீண்ட தகாதவர்களாக்கப்பட்ட திராவிடர்களுக்குப்
  புத்த-சைன மதங்கள் புகலிடமளித்தன.
  அதனால் "பிராமணரின் தூண்டுதலால்
  பௌத்தரும் சைனரும் துன்புறுத்தப்பட்டனர். (போரேல்)
  'புத்த–சைன சமய கோவில்கள்
  பிராமண இந்துக் கோவில்களாக மாற்றப்பட்டன"
  (Chidamparam Pillai - Right of Temple Entry)

- "பல்லவ அரசில் ராஜகுருவாக இருந்த
  புத்த மதத்தைச் சேர்ந்த
  வள்ளுவர்களைத் தள்ளச் செய்து
  அந்த இடத்தைப் பிராமணர் பிடித்துக்கொண்டனர்"
  (Manickam - Slavery in the Tamil Country)
  "இவர்களைத் தீண்டத்தகாத பறையர்களாக
  பிராமணர்கள் ஆக்கிவிட்டனர்"
  (Thurston - Castes and Tribes of South India)

- இப்படித்தான் ஏனையத் திராவிட
  மதக்குருக்களும் அகற்றப்பட்டு
  அந்த இடங்களில் பிராமண மதக்குருக்கள்

அமர்த்தப்பட்டனர். திராவிட அரசர்கள்
ஆதரவைப் பெற்று ஏராளமான
பசுக்களையும் - நிலங்களையும் - கிராமங்களையும்
தானமாகப் பெற்றனர்.

- ✪ பன்முகத் தன்மையினைப் பேணினால் மறுபடியும் திராவிட மதக்குருக்கள் ஆதிக்கம்வந்து பிராமண மதக்குருக்கள் தக்கவைத்திருக்கும் தலைமத்துவம் போய்விடும் என்பதற்காக இந்து ராஷ்டிரம் என்ற பெயரில் ஒரு முகத்தன்மையை நிலைநாட்டத்துடிக்கின்றனர்.

- ✪ பன்முகத்தன்மை வழிபாட்டிலும் சமயச் சடங்குகளிலும் ஆதிக்கம் செலுத்தினால் வழிபாட்டு மொழியும் - சன்னிதான பூசைகளும் - திராவிட இந்துக்களுக்கும் சொந்தமாகிவிடும். இதைத் தடுக்கவே ஒரே மொழி (சமஸ்கிருதம்) என்ற ஒருமுகத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்ளவே இவர்கள் இந்து ராஷ்டிரம் பேசுகின்றனர்.

3 மதசார்பின்மை மாசு படுகிறது

பன்னெடுங்காலமாக பாரத மண்ணில்
நிலைபெற்று இருந்துவருவதும் -
அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு
உலக நாடுகளாலும் உயர்வாக எண்ணப்பட்டுவருவதுமான -
மதசார்பின்மைக்கு மாசு ஏற்படும் வகையில்
1992 டிசம்பர் 6ஆம் நாள்
உலகில் நான்காவது இராணுவம் எனப்போற்றப்படும்
இந்திய இராணுவம் புடைசூழ நிற்க
மதசார்பற்ற நாட்டில் மதச் சின்னமாக நின்ற
பாபர் மசூதி இடிக்கப்பட்டது.
அன்று இடிக்கப்பட்டது மசூதியல்ல
ஆண்டாண்டுகாலமாக கட்டிக்காத்துவந்த
மதசுதந்திரமும் - மதசார்பின்மையும்
சேர்த்ததல்லவா இடிக்கப்பட்டது.

- இதில் ஒரு மாபெரும் வேடிக்கை என்னவென்றால்
அரசியல் சட்டத்தின் கீழ் உறுதிமொழி எடுத்து
ஆட்சிக் கட்டில் ஏறியவர்கள் அந்த அரசியல் சட்டம்
சொல்லும் மதசார்பின்மையைப்
போலி மதசார்பின்மை என்று பேசுவதுதான்.
அதோடு மதசார்பின்மை சுட்டிக்காட்டிய
சகிப்புத் தன்மையை வளர்க்கவும் -
அதை உலகெங்கும் பறைசாற்றவும் செய்யும்
பாரத பிரதமர் இந்த மதசார்பின்மையின்
விரோதிகளைத் தன் மந்திரிசபையில்
உறுப்பினர்களாய் வைத்திருப்பதும்.
இத்தகையோரோடு விருந்துண்ணுவதும்
வினோதமும் - வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சுவதுமாகும்.

✪ இதைவிடவெல்லாம் மேலாக
இன்று இந்த அரசாங்கத்தின்
ஆபத்தான தாக்குதல் என்னவென்றால்
இந்தியாவின் மதசார்பற்ற அரசியல் அமைப்பைச்
சகிப்புத்தன்மையற்ற - அடாவடித்தனமான
இந்து ராஷ்டிரமாக மாற்றிட
ஆர்.எஸ்.எஸ்.ம் அதன் துணை அமைப்புகளும்
வகுத்துவரும் செயல்திட்டங்களை
நிறைவேற்றிட ஓயாது முயற்சிப்பதே ஆகும்.

✪ இன்றுள்ள மதசார்பற்ற ஜனநாயககுடியரசு
கோட்பாட்டு முறையைச் சிதைக்க முடியாவிட்டாலும்
முடிந்தவரை பலவீனப்படுத்தி
மக்களிடையே மதக்காட்புணர்வை உருவாக்கி
அந்தக் குழப்பச் சூழலுக்கிடையே
இந்து ராஷ்டிரத்தை நிறுவிட ஆர்.எஸ்.எஸ்-இன்
அரசியல் அமைப்பான பி.ஜே.பி. முயல்கிறது.

✪ அதற்காக வகுப்புவாத எண்ணங்கொண்டோரை
நீதித்துறை - நிர்வாகத்துறை - காவல்துறை -
பாதுகாப்புத்துறை - கல்வித்துறை ஆகியவற்றில்
முக்கிய பொறுப்புகளில் நியமித்துள்ளனர்.
இவற்றால் இந்திய அரசியல் பலவீனப்படத் தொடங்கியுள்ளது.
இவ்வரசியல் பலவீனத்தை மறைத்திட
தொலைத்தொடர்பு சாதனங்களையும் -
பிரசார் பாரதி போன்ற அரசு தொடர்பு சாதனங்களையும்
தனது பிரச்சார பீரங்கிகளாக பயன்படுத்தி செயல்படுத்தி
ஹிட்லரின் பிரச்சார பீரங்கியான
கோயபல்ஸை மிஞ்சிவிட்டார்கள்.

✪ இந்த வகுப்புவாதத்தைச்
சுதந்திரத்துக்கு முன்னும் - பின்னும்
திட்டமிட்டு வளர்த்து வருபவர்களே ஆர்.எஸ்.எஸ். காரர்கள்.
ஹெட்கேவர் *'இந்துயிசமே எங்கள் தேசியம்'*
(Hinduism is Nationatlism)
என்ற பிரகடனத்துடன்
முஸ்லீம்களை எதிர்க்கவும் –
பார்ப்பனரைப் பாதுகாக்கவும்
ஆர்.எஸ்.எஸ் தொடங்கப்பட்டதாக

'கேஷன் சங்க் நிர்மதா' என்ற இந்தி நூலில் கூறுகிறார்
இதிலிருந்து அவர்கள் கூறும் தேசியம்
பிராமண தேசியம் என்பது தெளிவாகிறதல்லவா?

- இந்த வகுப்புவாதத்தை வளர்க்க
இவர்கள் வன்முறையைத் திட்டமிட்டு நடத்துகின்றனர்.
வதந்திகளைப் பரப்ப வெட்கப்படமாட்டார்கள்
பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட அஞ்சமாட்டார்கள்.
மனித உயிர்களின் பலிகளைக்கண்டு பதைக்கமாட்டார்கள்.
கெஞ்சினால் மிஞ்சுவர் - மிஞ்சினால் கெஞ்சுவர்.
முன்பு கூறியபடி தங்கள் அமைப்புக்குப்
பெருந்தலைவர்கள் ஆதரவிருப்பதாக
அப்பட்டமான பொய் பிரச்சாரம் செய்து
அப்பாவி மக்களை நம்பவைப்பர்.

    - இவர்கள் வன்முறைகள் மீது
    நம்பிக்கைக் கொண்டவர் என்பதற்கு
    ஆர்.எஸ்.எஸ். அமைப்பாளர்கள் ஐவரில் ஒருவரான
    டாக்டர் பி. எஸ். மூஞ்சி அவர்கள்
    "இந்து ராஷ்டிரத்தை வன்முறை மூலம்
    ஏற்படுத்தவேண்டும்" எனக் கூறிய வாக்குமூலமே சான்று.
    அதுதான் அவர்கள் நாகரிகம் என்பதை அவர்கள்
    இந்திய சுதந்திரப் போராட்டகாலத்திலும்
    சுதந்திர இந்தியாவிலும் - இன்றும்
    தங்கள் செயல்களால் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்.

- இவர்கள் வன்முறைகளைத் திட்டமிட்டு நடத்துபவர்
என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம்.
4-9-1927ஆம் ஆண்டு, அதாவது ஆர்.எஸ்.எஸ்.
ஆரம்பிக்கப்பட்டு இரண்டாண்டுகளுக்குள்
நாக்பூரில் ஒரு மதகலவரத்தை உருவாக்கினர்
என்பதை அவர்கள் வெளியிட்ட 'பிஷிகார்'
என்ற நூலில் இதைப் பெருமையாக வெளிப்படுத்தியுள்ளனர்.
இதனை மேலும் உறுதிபடுத்தும் விதமாக ஹெட்கேவர் 1940ஆம் ஆண்டு
தான் தலைமைப் பதவி ஏற்றபோது
"அரசியலை இந்துமயமாக்கு
இந்துக்களை இராணுவமயமாக்கு"
எனக் கூறிய வார்த்தைகள் அமைகின்றன.

- இந்தியாவில் நடந்த வகுப்புக் கலவரங்கள்பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு புள்ளிவிபரங்களோடு ஒரு கட்டுரையை 24-8-81 அன்று வெளியிட்டது.
  அதில் "இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் இந்தியாவில் சுமார் 5000 வகுப்புக்கலவரங்கள் நடந்தேறியுள்ளன. அதில் 1700 பேர் மாண்டுள்ளனர். இந்த அனைத்துக் கலவரங்களிலும் ஆர்.எஸ்.எஸ். சம்மந்தப்பட்டுள்ளது" என்கிறது.

- அதுபோல்
  காந்தியார் கொலைவழக்கை விசாரித்த 'கபூர் கமிஷன்' விசாரணையின்போது சாட்சியமளித்த பம்பாய் புலனாய்வுதுறை சீனியர் அதிகாரி "சுதந்திரம் பெற்ற இரு மாதங்களில் மட்டும் ஆர்.எஸ்.எஸ்.காரர்மீது 600 முதல் 700 கொலை, கொள்ளை, சூறையாடல், கலவரம் போன்ற வழக்குகள் தொடரப்பட்டதாகக் கூறியுள்ளார்.
  அதே விசாரணை அறிக்கையில் பூனா மாவட்ட போலீஸ் அதிகாரி "பூனா மாவட்டத்தில் நடைபெற்ற இந்து முஸ்லீம் கலவரங்களுக்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ். காரர்களே காரணம்" என்கிறார்.

- இப்படிப்பட்ட வகுப்புக்கலவரங்கள் குறிப்பாக பிலாண்டி, ஜஸ்கோவான் போன்ற பகுதிகளில் நடைபெற்றபோது இன்றைய பாரத பிரதமர் வாஜ்பாய் அவர்கள் "நீங்கள் என்ன காரணத்தைக் கூறினாலும் சரி நமது முஸ்லீம்கள் மேலும் மேலும் தீவிரவாதிகளாக மாறிவருகிறார்கள். அதன் விளைவாக இந்துக்கள் போர் வீரர்களாக ஆகிவருகிறார்கள்.
  இந்துக்களைப் போர் வீரர்களாக்குவது முஸ்லீம்கள் தான்" என்று ஒரே செயலைச் செய்த இந்துக்களைப் போர் வீரர் என்றும் முஸ்லீம்களைத் தீவிரவாதிகள் என்றும் பேசுவதைப் பாருங்கள் இப்படிப்பேசியது 19-5-1970.

- இதனைப் பின்பற்றியே இன்று நடக்கும்
தீவிரவாத செயல்கள் முஸ்லீம் மதவெறியர்களால் நடந்தால்
அதை தீவிரவாதமென்றும்
அச்செயலைச் செய்தவர்களைத் தீவிரவாதிகளென்றும்
கூறும் ஆர்.எஸ்.எஸ்.-ம் அதன் துணை அமைப்புகளும்
தீவிரவாத செயல்கள் இந்து மதவெறியர்களால் நடந்தால்
அதை தேசப்பற்றுச் செயல்கள் என்றும்
அச்செயல்களைப் புரிபவர்களைத் "தேசபக்தர்கள்".
என்றும் திசைதிருப்பும் அவர்கள் போக்கு
இன்றும் தொடர்வதை நாம் காணலாம்.

  - 1948 பெப்ருவரி 2 அன்று
இந்திய அரசு முதல் முறையாக
ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தடைசெய்தபோது
அவர்களின் நடத்தையைக் கணித்து
அவர்களது சுயரூபத்தை வெளிப்படுத்தி
ஓர் உத்தரவை வெளியிட்டது.
அவ்வுத்தரவு அவ்வமைப்பின் வன்முறை
பாதையையும் எண்ணத்தையும் படம் பிடித்துக்காட்டும்

- இதோ அந்த உத்தரவு
"விருபத்தகாத மேலும் ஆபத்தான
நடவடிக்கைகளை ஆர்.எஸ்.எஸ். காரர்கள்
மேற்கொண்டுவருகிறார்கள்.
நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவர்கள்
கொள்ளை–வழிப்பறி–கொலை போன்ற
வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
இவர்கள் சட்டவிரோதமாக ஆயுதங்களைச்
சேகரித்து வைத்திருக்கின்றனர்.
இரகசிய சுற்றறிக்கைகளை அனுப்புகின்றனர்.
அந்தச் சுற்றறிக்கைகளில் வன்முறைகளை நடத்தவும் –
வெடிமருந்து – துப்பாக்கி இவைகளைத் தயாரிக்கவும்
அரசு – இராணுவம் – போலீஸ் ஆகியவற்றை
எதிர்த்து போராடவும் தூண்டுகின்றனர்"

  - இவ்வாறு தடை உத்தரவு வாசகங்களே
இந்த வன்முறைக் கும்பலைக் கோடிட்டுக் காட்டுகின்றன.
அவர்கள் அன்று மட்டுமா இப்படி - இல்லை

இன்றும் வன்முறை செயல்களில் ஈடுபடுவதோடு
வன்முறைகளைச் செய்திட சுற்றறிக்கைகளை
வெளியிட்டும் கொண்டிருக்கிறார்கள்

- இவர்களின் வன்முறைகளுக்கு ஆசிவழங்குவதுபோல் அவற்றை நியாயப்படுத்தி - அதன் தலைவர் "நமது சமுதாயத்தைக் குணப்படுத்த வன்முறையை ஒரு மருத்துவரின் அறுவை கத்தியாக உபயோகிக்கவேண்டும்" என்று ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு ஒரு கோட்பாடாக இதனைக் கடைபிடிக்கச் சொல்லியுள்ளார்.

  - வகுப்புக் கலவரங்களில் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை பிரச்சாரங்கள் செய்த பின்னர் (துண்டு பிரசுரங்கள் - மாநாடுகள் வழி) ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதைத்தான் தங்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளதாக வகுப்புக் கலவரங்கள் பற்றிய விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் அனேகம் கூறுகின்றன.

- அவற்றில் ஒரு சில

1969-	அகமதாபாத் கலவரம்
-	ஜெக்மோகன் ரெட்டி கமிஷன் அறிக்கை
1970-	பிவாண்டி கலவரம்
	ஸ்ரீமதன் கமிஷன் அறிக்கை
1971-	ஜாம்செட்பூர் கலவரம்
-	வித்தாயத் தோல் கமிஷன் அறிக்கை
1971-	தலச்சேரி கலவரம்
-	ஜிதேந்திரா கமிஷன் அறிக்கை
1982-	மண்டைக்காடு கலவரம்
-	வேணுகோபால் கமிஷன் அறிக்கை
1992-	மும்பாய் கலவரங்கள்
1993-	ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் அறிக்கை

இவை அனைத்துக் கலவரங்களும் ஆர்.எஸ்.எஸ். இன் கைங்கரியங்களின் அரங்கேற்றமே என்பது கமிஷன் முடிவு.

- இவர்கள் சட்டபூர்வமான ஆதாரங்கள்
  எதுவும் கிடைக்காத வகையில்
  புதுப்புது அமைப்புக்களைப் புதுப்புது பெயர்களில்
  இடத்துக்கேற்ப அமைத்து - அறிக்கைகள்விட்டு
  கலவரங்கள் நடத்துவார்கள்.

- அகமதாபாத் மற்றும் குஜராத்தில்
  1974ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரங்கள்பற்றி
  விசாரணை நடத்திய 'ஜெகன்மோகன் ரெட்டி கமிஷன்'
  'இந்து தர்ம ராக்ஷா' என்ற அமைப்பைத் தொடங்கி
  அகமதாபாத் கலவரத்தையும் -
  'ராஷ்டிரிய உத்சவ மண்டலம்' என்ற அமைப்பைத் தொடங்கி
  மராட்டிய மாநில பிவாண்டி கலவரத்தையும் -
  அதே மாநிலத்தில் 'ஸ்ரீராம் தாரூம் மண்டல்' என்ற அமைப்பை உருவாக்கி
  ஜாஸகோவனில் கலவரத்தையும் -
  நிறைவேற்றியவர்கள் இவர்கள்
  இதே முறையைப் பின்பற்றி குமரியில்
  'இந்துமுன்னணி' 'இந்து தேசம்' அமைத்து
  குமரியில் கலவரத்தைச் செய்தார்கள்

- 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு 13-ஆம் நாள்
  முஸ்லீம்களுக்கும் - போலீசாருக்கும் ஏற்பட்ட
  குஜராத் மோதலில் ஆர்.எஸ்.எஸ். புகுந்து
  அதனை இந்து முஸ்லீம் கலரவரமாக்கியது.
  அதனைப் பின்பற்றியே
  1981-இல் குமரியில் நாயர் (குறுப்பு) கிருஷ்ணவகையினர்
  கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.
  மண்டைக்காட்டில் போலீசாருக்கும் மீனவர்க்கும்
  ஏற்பட்ட மோதலை இந்து - கிறிஸ்தவர் கலவரமாக்கியது
  இப்படி அனேக சான்றுகள் கூறலாம்.

- இப்படி வகுப்புக் கலவரங்கள்
  ஒரு தொடர்கதையாக இருக்கவேண்டும்
  என்பதை மனதில் கொண்டு
  அண்மையில் இவ்வமைப்பு வெறியினர்
  411/RO 3003 11/RSS/:003 என்ற எண்ணிட்ட
  சுற்றறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்பி;
  அதில் 32 செயல்பாட்டு வழிமுறைகளைக் கூறி;
  வாசித்த பின் அதனை அழித்துவிடவும் பணித்துள்ளனர்.

அதோடு இவை பழைய கடமைகளோடு
சேர்த்துசெய்யவேண்டிய புதிய கடமைகளாகும்
என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

✪ அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டு ஆர்.எஸ்.எஸ். காரர்கள் எப்படிப்பட்ட வகுப்புவாதிகள் - எப்படிப்பட்ட கொலைகாரர்கள் - எவ்வளவு பெரிய தீவிரவாதிகள் - எத்தகைய பாஸிஸ்டுகள் என்பதை அறிந்துகொள்ள உதவுகிறோம்.

* அக்கடிதத்தில் முதலாவது எண்ணிட்டுக் கூறியிருப்பது -
* "நாம இதுவரையிலும் திரட்டிவந்த சுடுகருவிகளையும் - வெடிமருந்துகளையும் திரட்டுவதில் வேகம் காட்டவேண்டும்" (1) என்பதாகும் இதனைத் தொடர்ந்து இக்கலகக்காரர்கள்
* "முகமதியர் - அம்பேத்கார் இயக்கத்தினர் - புத்தமதத்தினருக்கு எதிரான கலவரங்களைத் தூண்டப்படுவதை வேகப்படுத்தவேண்டும். அதற்கு அவர்கள் வாழும் இடங்களிலிருந்து தொலைவில் உள்ள இடங்களில் உள்ள புதிய உள்ளூர் தொண்டர்களைக் கொண்டு அத்தகைய கலவரங்களைத் தூண்டவேண்டும்" (11)
* "கலவரங்களின்போது முகமதிய, தாழ்த்தப்பட்ட சாதிப்பெண்களைக் கூட்டாகக் கற்பழிக்கவேண்டும். அந்நேரங்களில் நண்பர் என்றும் - பழக்கமானவர் என்றும் இரக்கம் பார்க்காது சூரத்தில் எப்படி நடந்து கொண்டோமோ அப்படி நடக்கவேண்டும்". (13)
* பொதுவுடமையாளர், தாழ்த்தப்பட்டோர், சூத்திரர் ஆகியோருக்கு எதிரான தாக்குதல்களை நடத்தவேண்டும்" (20)
* "மண்டல் பரிந்துரைகளுக்கு எதிரான கிளர்ச்சியைத் தொடரவேண்டும்". (21)
* வெவ்வேறு சாதிகளுக்கிடையில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கிடையில் சாதிச்சண்டைப் பூசல்களைத் தூண்டிவிடவேண்டும்" (22)
* "இந்து எதிர்ப்பாளர்களையும் பிராமண எதிர்ப்பாளர்களையும்

கொல்வது தொடரவேண்டும்.
அவர்கள் பிள்ளைகளை முன்னர் அறிவுறுத்தியபடி
துப்புகிடைக்காத வகையில்
அப்புறப்படுத்திவிடவேண்டும்" (30)

- இப்போது சொல்லுங்கள்
நேருவின் கூற்றுபடி
இந்த இந்து ராஷ்டிரவாதிகள்
தீவிரவாதிகளா? இல்லையா?
வன்முறையாளர்களா? இல்லையா?
கலகக் காரர்களா? இல்லையா?
குழப்பவாதிகளா? இல்லையா?
கொள்ளையர்களா? இல்லையா?
சட்டவிரோதமாக சுற்றறிக்கைகள்
விடுபவர்களா? இல்லையா?

  - 1998 மார்ச் முதல் 1999 ஜனவரி 23 வரை
இத்தகைய மனித உரிமை மீறல்கள்
இத்தகையோரால் செய்யப்பட்டவை
76-ஐ தாண்டிவிட்டதாகவும்
பொருள் - உயிர் சேதங்கள்
சட்டப் பாதுகாப்போடு நடந்தேறியதாகவும்
1999 பெப்ரவரி (1-15 இந்தியா டுடே) இதழ் கூறுகிறது.

- இவர்கள் இப்படிச் செய்யும் வெறிச்செயல்களுக்கு
அவர்கள் கொடுக்கும் நற்சான்று "நாட்டுப் பற்று"
1998 செப்டம்பர் 23இல் குஜராத்தில்
பூட்டிய கன்னியர் மடத்துக் கதவுகளை உடைத்து
15 வெறியர்கூட்டம் உள்ளே சென்று
அவர்களை வன்புணர்ச்சி செய்து
அங்குள்ள பொருள்களையும் கொள்ளையடித்துச்
சென்றதாக தினமணி - இந்து பத்திரிகைகள்
வெளியிட்டச் செய்தி சூடு தணிவதற்குள்
அதே இடத்தில் "செப்டம்பர் 27 அன்று
அருட்திரு. எட்வர்ட்டைத் தாக்கியுள்ளனர்.
இவையெல்லாம் அவர்கள் அகராதியில் "நாட்டுப்பற்று"

  - இப்படிப்பட்ட சமூக விரோத செயல்களை
இரகசியமாகவும் - பரசியமாகவும் செய்துவரும்

இக்கூட்டம் தீவிரவாதிகள் இல்லையாம்
தேச பக்தர்களாம்.
இந்தத் தேச பக்தி சான்று கொடுப்பவர்கள்
யார் தெரியுமா? நம் நாட்டுப் பிரதமரும்
துணைப்பிரதமரும் - முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினரும் விஸ்வ இந்து பரிசத்
பொதுச் செயலாளருமான பிரேமும் தான்.

- ஒரீசாவில் 23.1.1999 அன்று
30 ஆண்டுகள் மருத்துவ சேவை செய்த
பாதிரியார் ஸ்டெயின்சையும் அவரது
9 வயது பிலிப், 7 வயது திமோத்தி ஆகிய இருமகன்களையும்
ஜீப்போடு கொழுத்திய நிகழ்ச்சிக்கு
பஜ்ரங்தள்க்குத் தொடர்புண்டென்று
மாவட்ட ஆட்சியாளரும் - மாஜிஸ்திரேட்டும்
கூறியபோது துணைப்பிரதமர் அத்வானி
"எனக்கு பஜ்ரங்தள்ளைப் பற்றி நன்குதெரியும்
அவர்கள் இதுபோன்ற பாதக செயல்கள் செய்யமாட்டார்கள்"
என்று அறிக்கை வெளியிட்டார்.

  - இந்தக் கிரிமினல்களுக்கு இவரும்
  இவருடைய உள்துறை அமைச்சகமும்
  காட்டும் கருணையைப் பார்க்கும்போது
  அத்வானியின் பலத்தைவைத்துதான்
  ஆர்.எஸ்.எஸ்.காரர் இம்மதவெறிசெயல்களைச்
  செய்கிறார்கள் என்ற கூற்று உண்மையோ
  என நம்மையும் நம்பவைக்கிறது.

- புத்த மதத்திற்கு எதிராக
கலவரம் தூண்ட வேண்டுமென்று
இரகசிய துண்டறிக்கை அனுப்பிவிட்டு
"புத்தமதம் இந்துமதத்தின் கிளை
எனவே இதை தனி மதமாகக் கருதக்கூடாது
புத்தர் எந்த புதிய மதத்தையும் அறிவிக்கவில்லை
இந்திய ஆரிய நாகரிகங்களின்
புராதன கோட்பாடுகளைப் புதிய அழுத்தத்துடன்
கூறுவதாகும்" என்று புத்தரின் முதல் பிரசங்கத்தின்
2500வது ஆண்டுவிழா கருத்தரங்கில்

ஆர்.எஸ்.எஸ். உறுப்பினரும் நமது துணைப்பிரதமருமான
எல். கே. அத்வானி கூறினாரென்றால்
இந்தக்கூட்டம் எவ்வளவு பெரிய ஏமாற்றுக்கூட்டம்
என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

- கலவரங்களைத் தூண்டிவிட்டு
  அக்கலவரங்களில் முகமதிய - தாழ்த்தப்பட்ட
  ஜாதிப் பெண்களைக் கற்பழிக்கச் சொல்லும்
  இந்தக் காமுகர்களை -
  அந்த நேரத்தில் பழக்கப்பட்டவர், நண்பர்கள்
  எனப் பார்க்காதீர்கள் எனக்கூறும்
  இந்த மனிதநேயமற்ற ஆரிய இந்துக்களை நம்பி
  திராவிட இந்துக்கள் (பிராமணரல்லாதோர்)
  அவர்களுக்குப் பின்னால் நின்று
  அவர்களை அரசாளவைக்கவும் -
  நீதியும் - நிர்வாகமும் நடத்தவும் வைத்துவிட்டு
  கைகட்டி நம்மூதாதையர் அடிமைகளாக
  வேலைசெய்ததுபோல் வேலை செய்ய
  நம்மையும் நம் சந்ததியையும்
  ஆளாக்கப் போகிறோமா? சிந்தியுங்கள்.

- மண்டல் கமிஷனால் அரசு பதவியில் 27%
  பின்தங்கிய நம்மவருக்கு வந்துவிடுமோ என்று
  அது வெளியான போது தீக்குளிப்பதாய்
  பின்தங்கியவரைத் தீயில் தூக்கிப்போட்டு
  எதிர்ப்பை அரசுக்குக் காட்டிய இக்கூட்டத்தைச் சார்ந்த
  ஒரு பிராமணனாவது தீக்குளித்து இறந்ததுண்டா?
  அதனால்தான் இன்றும் மண்டலுக்கு எதிராக
  கிளர்ச்சியைத் தூண்டச் சொல்லுகிறார்கள்.
  என்னே அவர்கள் சாதுரியம்!

- சூத்திரருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும்
  எதிராக தாக்குதல் நடத்தச் சொல்லும் இவர்கள்
  எந்த இந்து ராஷ்டிரத்தைக் கொண்டுவர
  நினைக்கிறார்கள்? பிராமண ராஷ்டிரத்தை தானே.
  எனவே இவர்களின் வஞ்சகபுத்தியைப் புரிந்து
  அவர்களை விட்டு ஒதுங்கிடுவோம் அல்லது ஒதுக்கிடுவோம்.
  தவறினால் முதல் வகுப்பு பாடபுத்தகத்தில்
  படித்த 4 எருதுக்களின் நிலைதான் நமக்குவரும்

எப்படி சிங்கம் எருதுகளைத் தனிமைப்படுத்தி பிரித்து
அனைத்து எருதுக்களையும் அழித்ததோ அதுபோல்
அனைவரும் அழிய வேண்டியதுதான்

✪ ஆறு பெரிய மதங்களும்
18 பெரிய மொழிகளும்
1600 சிறிய மொழிகளும்
52 வகையான மலை வாழ் மக்களையும்
கொண்டதே இந்தச் சமய சார்பற்ற இந்தியா.

✪ இந்திய முஸ்லீம் சிறுபான்மையினரின் எண்ணிக்கை
பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டின்
மொத்த ஜனத் தொகையைவிடக் கூடுதல்
இவர்கள் இறக்குமதியானவர்களல்ல
இந்த நாட்டில் 25 நூற்றாண்டுகளாக
இந்திய பாரம்பரியத்துடன் சமயசார்பற்ற
ஜனநாயக இந்தியாவில் வாழ்ந்துவருபவரே.

✪ ஐரோப்பாவில் கிறிஸ்தவமதம் வளர்வதற்கு முன்பே
இங்கு வாழ்ந்து வளர்ந்தவர்களே
இங்குள்ள கிறிஸ்தவர்களின் முன்னோடிகள் ஒரு கோடிபேர்
70 லட்சம் புத்தர்களும் இம்மண்ணின் மைந்தர்களே
இங்கே பிறந்து - வளர்ந்து - வாழ்ந்து வரும் இவர்களெல்லாம்
எப்படி அன்னியர்களாக இருக்க முடியும்?

✪ இந்த மண்ணின் மைந்தர்களை
வெளியே போகச் சொல்லும் இந்தியாவில்
மூன்றாவது வந்து குடியேறிய மங்கோலிய
இனத்தவர்களாகிய உங்களுக்கு எங்கே உரிமை?
அப்படிப் போக வேண்டிய நிலை வந்தால்
முதலில் போக வேண்டியவர்கள்
மூன்றாவது வந்து குடியேறிய நீங்களே.
என்பதைப் புரிந்து நடங்கள்.
ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டுவதா?

4 கல்வி காவியாகிறது

கல்வி ஒருவனை
விலங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு உயர்த்துகிறது.
அதனால்தான் கல்லார் களர் நிலம் என்றனர்.
இத்தகு கல்வியும் கலையும் தாழ்ந்தோர் பெற்றிட தடைவிதித்தனர்.
தடைதாண்டி கற்ற ஏகலைவன் கட்டைவிரலை வெட்டினர்
தாழ்ந்தவன் கற்பது குற்றமெனக் கொண்டதால்
கர்ணன் கற்ற கல்வி பயன்படாதபடி சபிக்கப்பட்டான்.

- இவ்வாறு
  அக்கிரகாரத்தைச் சுற்றி நின்ற கல்வியை
  அனைவரும் பெற்றிடும் வாய்ப்பைக் கொணர்ந்த
  சமணர்கள் கழுகேற்றப்பட்டனர்.
  இந்த வர்ணாசிர தர்மத்தினரால்

- ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்
  அனைவருக்கும் கல்வி என்ற நிலை ஏற்பட
  சூத்திரரும் கல்வி கற்று அரசு பணிகளில் அமர்ந்தனர்.

- இந்தக் கல்வியை எல்லோரும்பெற
  இந்தியத் துணைக் கண்ட மக்கள் தொகையில்
  2.4 விழுக்காடாக இருக்கும் சிறுபான்மை
  கிறிஸ்தவர்கள் இந்த மண்ணில்
  245 கல்லூரிகளையும் -
  3721 உயர்நிலை மேனிலைப்பள்ளிகளையும் -
  11849 தொடக்கப்பள்ளிகளையும் -
  24 தொழிற் பயிற்சி நிறுவனங்களையும் -
  1144 முறைசாராக் கல்வி நிறுவனங்களையும்
  3003 மாணவர் விடுதிகளையும் அமைத்து

ஏற்றத்தாழ்வின்றி எல்லோருக்கும் கல்வி கொடுத்து
"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற
இந்த மண்ணின் மக்களை
வர்ணாசர தர்மத்தால் அடிமைப்படுத்தும்
அவல நிலையில் இருந்து மீட்டுவருவதைப்
பொறுக்காத இந்துத்துவா கூட்டம் மீண்டும்
தங்கள் வர்ணாசிரம தர்மதத்தைக் கட்டிகாக்கவும்
திராவிட இந்துக்களைத் தங்கள் அடிமைகளாக வைக்கவும்
இன்று 20,000 வித்யாபாரதி பள்ளிகளை உருவாக்கி
ஒருலட்சம் ஆசிரியர்களைக் கொண்டு
20 லட்சம் பிஞ்சு உள்ளங்களுக்கு
மதக் காட்புணர்வுகளை ஊட்டி வருகின்றனர்.

✪ அந்த உணர்வோடு உயர்வு - தாழ்வு
என்ற நச்சுவிதையைத் திணிக்க விரும்பி
பார்ப்பன மயமான - வகுப்புவாத -
ஒரு பக்கசார்பான பாடத்திட்டங்களையும் உருவாக்கி
பாடப்புத்தகங்களையும் வெளியாக்கி
பத்தாண்டுகளாகவே விளம்பரப்படுத்தாமல்
சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில்
செயல்பட்டு வருகின்றனர்.

✪ தன் இனத்தின் மேலாண்மையை நிலைநாட்ட
நாசிக் கட்சியைத் தோற்றவித்த
ஜெர்மானிய ஆரிய கிட்லர்
அன்று எப்படிக் கல்வியைக் கருவியாக்கி
ஜெர்மானிய பிஞ்சு உள்ளங்களில்
யூத வெறுப்பை விதைத்தானோ
அதே பாணியைப் பின்பற்றி
இன்று கல்வியைக் காவியாக்கி
பிஞ்சு உள்ளங்களில் சிறுபான்மையினர் பற்றி
நஞ்சினை ஊற்றுகின்றனர்.

✪ இத்தகைய பின்னணியோடு
அமைக்கப்பட்ட கல்வி திட்டத்தைக்
குஜராத், உத்தரபிரதேசம் போன்ற
ஆர்.எஸ்.எஸ். வலுப்பெற்றுள்ள மாநிலங்களில்
நடைமுறைபடுத்தத் தொடங்கிவிட்டனர்.

- அதற்காக 1001ஆம் ஆண்டு பி.ஜே.பி.
ஆட்சியமைத்த மாநிலங்களான
மத்திய பிரதேசம் - உத்தரபிரதேசம் ஆகியவற்றின்
புத்தக குழுக்களில் அதற்குரிய அதிகாரிகளை நியமித்து
மதவாதத்திற்கும் - தங்கள் அரசியல் நிலைபாட்டிற்கும்
ஏற்றபடி இந்திய வரலாற்றை மாற்றியுள்ளனர்.

- அம்மாநில கல்லூரி நூல் நிலையங்களில்
'ஏன் இந்து தேசம்' (why Hindu Rashtra)
'நாங்கள் இராமர் கோயிலை அங்குதான் கட்டுவோம்'
(We build Ram Temple There only)
'அடிக்கல் நாட்டுதலிலிருந்து சிகரம் அமையும் வரை'
(From laying Foundation to Attaining the peak)
போன்ற மதவாத நூற்கள் பலவற்றை
வாங்கி வைத்திட ஆணை பிறப்பித்துள்ளனர்.

- மாணவர்களுக்குக் கற்றுகொடுக்கும்
வரலாற்றுப் புத்தகங்களில்
தங்கள் இந்துத்துவாவுக்கு எதிரானவை என
அவர்கள் கருதிய அனைத்து வரலாற்றுப் பக்கங்களையும்
நீக்கிவிட்டு அவர்கள் கருத்துக்களைக் கொண்ட
புதிய பக்கங்களைச் சேர்த்து வரலாற்றை மாற்றியுள்ளனர்.

- தாங்கள் அரசியல் திட்டமான
இந்து ராஷ்டிரத்திற்கேற்ப சரித்திரத்தை
மாற்றி எழுத உத்தரப்பிரதேசத்தில்
'லக்கல் மண்டல்' என்ற அமைப்பை ஏற்படுத்தி
அதன் உதவியால் இருபத்தைந்து
சரித்திரப் புத்தகங்களைத் திரித்து எழுதியுள்ளனர்.

- இத்தகையத் தவறுகளைச் சுட்டிக்காட்டியபோது
"நமது பிள்ளைகள் தேசியம் பெருமைபடத்தக்கவகையில்
சரித்திரங்களைத் திருத்தி எழுதிகொண்டிருக்கிறோம்"
என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர்
யார் தெரியுமா?
ஆரம்பப்பள்ளிகளில் சரஸ்வதிவந்தனம்
பாடப்படவேண்டுமென்ற சட்டத்தை ஏற்படுத்த
நினைத்த முன்னாள் உ.பி. கல்வி அமைச்சரே.

✪ இவ்வாறு அவர்கள் திரித்துக்கூறிய
செய்திகள் எப்படி இருக்கின்றன
என்பதை உணர்ந்து கொண்டு
இந்த இந்துத்துவா கோஷ்டிகளின்
உள்ள உணர்வுகளைக் கண்டுகொள்ள
இதோ ஒருசில சான்றுகள்

✪ வித்திய பாரதியின்
4-ஆம் வகுப்பு பாடப்புத்தகத்தில்
சிறுபான்மையினர் யார்? என்ற வினாவுக்கு
அவர்கள் கொடுத்திருக்கும் பதிலைப்பாருங்கள்.
**"கழுத்தை நெரித்து கொல்ல வேண்டிய
கொசுவும் ஈயுமே சிறுபான்மையினர்"**

✪ அதே 4-ஆம் வகுப்பு
சமஸ்கிருத மொழி புத்தகத்தின்
முதல் பாடமான கடவுள்வாழ்த்து
எப்படி இருக்கிறது என்பதைப் பாருங்கள்.
**"இறைவா!
உலகின் தலைவா!
இந்துக்களுக்குத் தொண்டாற்ற
சக்தியைத் தா
இந்துக்களுக்காக இறக்கவும்
என்னால் இயலவில்லை என்றால்
என்னை நரகத்தில் போட்டுவிடு"**

✪ இந்தக் கடவுள் வாழ்த்து
மதசார்பற்ற நாட்டில்
மதசார்பற்ற அரசு என்று சொல்லிக்கொண்டு
வெளியிட்டிருக்கும் அரசு பாடபுத்தகத்தில் தான்
இருக்கிறது. இப்போதாவது புரிகிறதா?
இந்த இந்துத்துவாக்களின் நோக்கும் போக்கும்.

✪ இதனைப் போல் 4-ஆம் வகுப்புக்குரிய
'சமஸ்கார சாதனா' என்ற புத்தகத்தில்
"சதி என்பது இராஜபுத்திரரின் மகத்தான பாரம்பரியம்
அதனை நினைத்து நாம் பெருமை கொள்ளவேண்டும்"
என்று சட்டமிட்டு தடுத்த உடன்கட்டை ஏறுதலைப்
பாராட்டி பாட புத்தகத்தில் எழுதிய
பிற்போக்குவாதிகள் தான் இந்த இந்துத்துவாக்கள்.

✪ இதுபோல்
8-ஆம் வகுப்பு 'சமூக அறிவு' புத்தகத்தில்
சீத்தாராம் கோயல் என்பவர்
கிறிஸ்துவையும், கிறிஸ்துவ சமயத்தையும் பற்றி
எழுதியிருப்பதைப் பாருங்கள் -
"ஆன்மீக அதிகாரத்தினுடையவோ
தார்மீகமான நேர்மையினுடையவோ
உருவமல்ல கிறிஸ்து
நன்றாக்க முடியாத ஒரு பழஞ்சரக்கே கிறிஸ்து
கிறிஸ்துவும் கிறிஸ்தவ மதமும்
ஆக்கிரமிப்பின் அடையாளம்"
என்று கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி
தவறாகப் பிஞ்சு உள்ளங்களில்
நஞ்சூற்றுகிறார்கள் இந்த ஆரிய இந்துக்கள்.

✪ அதுபோல்
அதே புத்தகத்தில்
"முஸ்லீம்களைக் கொல்லும் இந்துக்களைப்
பாராட்டவேண்டும்
ஆனால் அவர்களை உறங்கும்போது மட்டும்
கொல்லக்கூடாது"
என்று குழந்தைகளுக்கே கொலைவெறி
உணர்வை ஊட்டுவதைப் பாருங்கள்.

✪ மேலும்
"பாரதம் உலகின் புராதன நாடு –
மனுவும் – சத்துருக்கனும்தான்
பூமியில் உயிர் உருவாக தானம் செய்தனர்"
"ஆரிய நாகரிகந்தான் உலகில் சிறந்தது"
என்பனப் போன்ற புரட்சிச் செய்திகளையும்
பொய்ச் செய்திகளையும் வெளியிட்டுள்ளனர்.

✪ 9-ஆம் வகுப்பு பாடப்புத்தகத்தில்
"போப் ஒரு நிலப்பிரபு –
கார்டினல்களும், பங்குத் தந்தையரும்
இராஜாக்களிடமிருந்து நிலங்களைப் பறித்து வாங்கி
செல்வந்தர்களாகி சுகபோகத்தில் வாழ்கின்றனர்"
என்ற அண்ட புழுகு - ஆகாச புழுகு என
புழுகி இருப்பதைப் பாருங்கள்.

- அதே வகுப்பில் 'புதிய உலகம் நோக்கி'
  என்ற தலைப்பில் நாசிசத்தையும்
  பாசிசத்தையும் பாராட்டி
  பிஞ்சு உள்ளங்களில் பாசிசவெறியைப்
  பற்றவைக்கின்றனர்.

- அதுபோல் குஜராத், உ.பி, மாநிலப்
  பாடப் புத்தகங்களில் -
  "ஆரியர்கள் இந்தியாவிலுள்ள
  பூர்வீக குடிமக்கள் திராவிடர்கள் வந்தேறிகள்"
  என்று வலாற்றைத் திரித்துள்ளார்கள்.

  - மொகஞ்சதாராவில்
    கண்டெடுத்த திராவிடரின் காளைமாடு முத்திரையைக்
    கணிப்பொறி உதவியுடன் குதிரையாக்கி
    அங்கிருந்தது ஆரிய நாகரிகமே என
    அண்டப்புழுகு புழுகுகின்றனர்.

- இப்படி வரலாற்றை மாற்றியமைக்க
  அண்மையில் இந்துத்துவா விசுவாசிகளான
  18 வரலாற்று ஆய்வாளர்களை
  வரலாற்று ஆராய்ச்சி மற்றும்
  தொல்பொருள் துறையில் அமர்த்தியுள்ளது
  பி.ஜே.பி. நடுவண் அரசு.

  - இந்த அரசு திட்டமிட்டு
    டெல்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகம்
    "சிந்து சமவெளி நாகரிகப் பிரிவை
    சிந்து சரஸ்வதிகால நாகரிகப் பிரிவு
    எனப் பெயர் மாற்றியுள்ளது"
    என்று 1999 ஆகஸ்டு 8 நாளிட்ட
    'சண்டே றைம்ஸ்' என்ற ஏடு கூறியுள்ளது.

- இப்படித் திட்டமிட்ட திணிப்புகள்
  அண்மைகாலத்தில் அதிகரித்து வருவதாக
  நேரு பல்கலைக் கழகப் பேராசியர்
  எஸ். இரத்னாக்கர் கூறுகிறார்.
  சுருங்கச் சொல்லின் 1957-இல்
  சவாக்கர் 'அரசியலை இந்துமயமாக்கு'
  என்றது மிகவேகமாக வேலை செய்கிறது.

✪ இவற்றைவிட உ.பி. மாநில ஆரம்பப் பள்ளிகளில்
ஆசிரியர்கள் வருகைப் பதிவு எடுக்கும்போது
"உள்ளேன் ஐயா" என்பதற்குப் பதிலாக
"வந்தே மாதரம்" எனக்கூறவேண்டுமென
கல்யாண்சிங் முதல்வராகக் கொண்ட
பி.ஜே.பி. அரசு ஆணைபிறப்பித்துள்ளது.
அதுபோல் அனைவரும்
மதிய உணவுக்கு முன் "வேதகால போஜன மந்திரம்"
கட்டாயமாகச் சொல்லவேண்டும்.
சமஸ்கிருதத்தைக் கட்டாயமாகப்
பயின்று தேர்வு பெறவேண்டும்.
என்ற ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

✪ இவற்றிற்கெல்லாம் மேலாக
'அகில பாரதிய சான்ஸ்கிரிட் ஞான்'
என்ற சமஸ்கிருத தேர்வுக்குரிய புத்தகத்தில்.

* இராமஜன்ம பூமிக்காக
78–யுத்தங்கள் நடந்துள்ளன.
இதற்காக மூன்றரை லட்சம் மக்கள்
உயிர் தியாகம் செய்துள்ளனர்
* இந்து மதம் மட்டுமே தர்மம்
மற்ற மதங்கள் அனைத்தும்
பிரிவினைக்காக மட்டுமே.
* நம்முடைய மூதாதையர்
சிவன் கோவில்களை உருவாக்கி
தேசிய ஒற்றுமையைப் பாதுகாத்தனர்
* இந்திய கலாச்சாரத்தை
உருவாக்கியவன் கிருஷ்ணன்
* உருது என்பது ஒரு மொழியே அல்ல
வித்தியாசமான எழுத்துக்களைக் கொண்ட இந்தியே.
* தாமரை – காயத்திரி மந்திரம் – சொஸ்திக்
நடராஜன் – கங்கை – கீதை – சூரியன்
இவை கலாச்சாரச் சின்னங்கள்
* இராமன் பிறந்து 9 இலட்சம் ஆண்டுகள்
ஆகின்றன.
* மனிதன் முதலில் பிறந்தது திபத்தில்.
அன்று அது பாரதத்தின் பகுதி.
அங்கிருந்தே உலகெங்கும் மனிதர் பரவினர்.

* மனிதன் தோன்றி 179 கோடியே
  10 லட்சத்து 59 ஆயிரத்து 84 ஆண்டுகள்
  ஆகிவிட்டன. (அறிவியலுக்கு எதிரானது)
* வான்மீகி இராமாயணத்தைத் தழுவியே
  ஹோமர் இலியட் என்ற காப்பியத்தை
  எழுதினார்.
* பசு மனிதர்களின் தாய்
  பசுவில் தெய்வீகம் குடியிருக்கிறது.
* இயேசு இமயமலைக்கு
  வந்த பின்னரே புனிதரானார்.

✪ நல்ல உயரமும் அழகிய முகமும் கொண்டிருந்த
நேரிட்டிக் (Nordic) பிரிவைச் சார்ந்தவர்
இந்தியாவின் வடக்குப் பகுதியில் வாழ்ந்தனர்.
இவர்களே ஆரியர்கள்.
சாதாரண உயரமும் கருப்பு நிறமுமுள்ள
ஆட்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்தனர்.
இவர்கள் மெடிற்றரேனியன் வம்சம்
அல்லது திராவிடர் என அழைக்கப்படுகின்றனர்

✪ இவர்கள் நடத்தும் 'வித்யா பாரதி' என்ற பள்ளிகளில்
கிருட்டிணர் பிறப்பைக் குழந்தைகள் நாளாகவும்
வியாசர்பிறப்பை ஆசிரியர் நாளாகவும்
கொண்டாடிவருகின்றனர்.
உத்தரப்பிரதேசத்திலுள்ள 'சரசுவதி சிசுமந்திர்'
பள்ளியின் ஏழாம் வகுப்புப் பாடநூலில்
பொது அறிவுக் கேள்விகளாக
- முலாயம் சிங் யாதவை ஏன் நவீனகால
  இராவணன் என்கிறோம்?
- இராமர்கோவிலை அழித்த இடத்தில்
  மசூதியை பாபர் கட்டிய ஆண்டு எது?
- மசூதியை இடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட
  எத்தனை இந்துக்களின் உயிர்களை
  முலாயம்சிங்கின் குண்டுகள் குடித்தன?

என்ற கேள்விகளைக் கேட்டு
கல்வியில் கள்ளிப்பாலைக் கலக்கும் பணி
காவிகளின் கழிந்த 20 ஆண்டுகளாய் அரங்கேறிவருகிறது.

- பாருங்கள், வரலாற்றுண்மைகளையும் விஞ்ஞான உண்மைகளையும் திரித்தும் - மாற்றியும் உண்மைக்குப் புறம்பாகப் புத்தகங்களில் வெளியிட்டு மக்களையும் மாணவரையும் ஏமாற்றுகிறார்கள்.

- இவ்வாறு தங்கள் இந்துத்துவா கருத்துக்களைப் பிஞ்சு உள்ளங்களில் அரசு துணையுடன் புகுத்தும் இவ்வாதிக்க வாதிகளுக்கு இந்திய நாட்டில் இன்றும்
 40% கூரை வேய்ந்த மண்சுவர் பள்ளிகள்
 39% கரும்பலகை இல்லாத பள்ளிகள்
 50% குடிநீர் வசதி இல்லாத பள்ளிகள்
 80% கழிவறை வசதி இல்லாத பள்ளிகள்
 35% ஓராசிரியர் பள்ளிகள்
 இருப்பது கண்களுக்குத் தெரியாமல் போனதுதான் வேதனைக்குரிய ஒன்று. இப்பள்ளிகளை மேம்படுத்தி எல்லோருக்கும் கல்வி கொடுக்க இவ்வரசுகளோ இவ்வமைப்புகளோ முடிவெடுத்து செயல்படுத்தலாமே. படுத்தமாட்டார்கள். ஏனெனில் பின்தங்கியோரும் பஞ்சமரும் அவர்கள் அகராதியில் அடிமைகளல்லவா?

5 ஆரிய மொழிக்கு அரியணை

அறிஞர் ஒருவர் கூறினார்
"ஓர் இனத்தையோ – பண்பாட்டையோ
பாழடையச் செய்யவேண்டுமென நினைத்தால்
அவ்வினம் பேசும் மொழியை அழித்தால் போதும்"
அதனால்தான் நாசிஸ்டான ஹிட்லரும் (ஜெர்மனியில்)
பாசிஸ்டாகிய முசோலினியும் (இத்தாலியில்)
தங்கள் தாய் மொழிகளை அரியணையில் வைத்துவிட்டு
அங்குள்ள அனைத்து மொழிகளையும் அழித்தனர்.

- அதனையே பின்பற்றி
  18 தேசிய மொழிகளையும்
  1600 சிறிய மொழிகளையும் கொண்ட
  பன்முக பண்பாடுடைய இந்திய மண்ணில்
  'சமஸ்கிருதம்' ஒன்றையே 'தேவபாசை' என்று
  சொல்லிக்கொண்டு அந்த மொழியை மட்டுமே
  அனைத்து நிலைகளிலும் முன்னிலைப்படுத்தவைத்து
  அந்த மொழியை ஓதும் ஒருசில விழுக்காட்டினரான
  பிராமணரின் பண்பாடே இந்தியப் பண்பாடென்று
  தங்கள் பிரச்சார சாதனங்கள் மூலம்
  அடிமட்ட மக்களையே நம்ப வைக்கின்றனர்.

- இவர்களின் மாயையை நம்பி
  நம்நாட்டில் பல்வேறு மொழியும் -
  பல்வேறு பண்பாடுகளையும் -
  கொண்டு வாழும் பலகோடி மக்களில்
  சில இலட்சங்கள் - அதிலும் கற்றவர்கள்
  தங்கள் தாய் மொழியை - பண்பாட்டை -

பழக்கவழக்கங்களைத் திட்டமிட்டு
அழித்துவரும் ஆதிக்கச் செயல்களை
அறியாமல் இருக்கிறார்களே -
அறிந்தவர் அறிவுறுத்தாமல் இருக்கிறார்களே-
என்பதை நினைக்கும்போது தான்
மிகவும் வேதனையாக இருக்கிறது.

- இன்று உலகுக்கே தனிபண்பாட்டையும்
  நாகரிகத்தையும் பறைசாற்றிக்கொண்டிருக்கும்
  உயர்தனி செம்மொழியே தமிழ்
  இத்தமிழும் - அதன் பண்பாட்டுக்கூறுகளும்
  மதமென்ற பெயரைச் சொல்லி
  அழிவதும்-அழிக்கப்படுவதுமே வேதனை.

- "திருவாசகத்துக்கு உருகார்
  ஒருவாசகத்திற்கும் உருகார்"
  என்று பெருமை பேசப்பட்ட
  திருவாசகம் - தேவாரம் பாடப்பட்ட
  திருக்கோயில்களை எல்லாம்
  பொருள் தெரியாத சமஸ்கிருத
  'சுப்பிரபாதம்' போன்ற 'வடமொழி பாடல்கள்'
  அதிவிரையில் அபகரித்துக்கொண்டனவே.

- 'ஓம்' என்ற மனிதனை உள்ளடக்கிய
  ரீங்கார ஒலி தாங்கிய
  தமிழ் வரிவடிவம் இருந்த இடங்களை
  'ௐ' ஆரியவடிவம் அபகரித்துக்கொண்டதே.

- ஒரு காலத்தில் தமிழகத்தை ஆட்கொண்ட
  இந்த வடமொழி ஆதிக்க வெறியர்களை
  அப்புறப்படுத்தி தமிழையும் - தமிழ்ப்பண்பாட்டையும்
  காத்திட மறைமலை அடிகள் போன்றோர் இருந்தனர்.
  ஆனால் இன்று யார் இருக்கிறார்கள்?
  எனக்கேட்குமளவுக்குத் தமிழறிஞர்களும்
  மதப் போதைக்குள் மடங்கிவிட்டார்களோ?
  என எண்ணத்தோன்றுகிறது.

- இத்தகைய அமைதியும்
  ஏனோதான போக்கும் நம்மிடம் இருப்பதால்தானே

மயிற் கற்களிலும் மாற்றுமொழி
ஆட்சிசெய்திட வருகிறது
நம்மிடமிருக்கின்ற பதவி ஆசையும்
செயலற்ற மொழிபற்றும்தானே
நம்மவரைக் கொண்டு மாற்றுமொழியைப்
பள்ளிகளில் விருப்பப்பாடமாக்கலாமே
எனப் பேசவைக்கிறது சமஸ்கிருத ஆதிக்கம்.

✪ இந்தப் பார்ப்பன இந்துக்களின்
சுயநலத்தைத் திராவிட இந்துக்கள் இன்னும்
உணராமல் இருக்கிறார்களே.
சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்
சாதியின் பெயரால் தங்கள் ஆதிக்கத்தை
நிலைநாட்ட நினைத்து
ஒரு நாடார் பிராமணனுக்கு 36 எட்டுகளுக்கு அப்பாலும்
புலையர் 90 எட்டுகளுக்கு அப்பாலும் -
ஒரு நாடார் நாயருக்கு 12 எட்டுகளுக்குப்பாலும்
புலையர் 64 எட்டுகளுக்கு அப்பாலும்
நிற்கவேண்டுமென சட்டமியற்றவைத்தனர்.
(திருவிதாங்கூரில் ஒரு மக்கள் புரட்சி - R. N. இயேசுதாஸ்)

✪ கல்வி மறுக்கப்பட்டது
கடவுள் சன்னதி பூட்டப்பட்டது
தாய்மொழி தமிழை இழந்து
மலையாள மொழிக்கு
அடிமைப் படுத்தப்பட்டனர்.
நமது மூதாதையர் தங்கள் மண்ணிலேயே.

✪ அன்றைய கிறிஸ்தவ மிசினரிகளின் அர்ப்பணத்தால்
ஈழ சமுதாயத்தில் தோன்றிய நாராயண குரு-
நாடார் சமுதாயத்தில் தோன்றிய ஐயா வைகுண்டர்-
ஆகியோர் அரும்முயற்சியால் - போராட்டத்தால்-
உயர்சாதி இந்துத்துவாக்களின்
அடிமைத்தன முயற்சி முறியடிக்கப்பட்டது.

✪ அதனைத் தொடர்ந்து
கிறிஸ்தவ மிசினரிகளின் தன்னலமற்ற
மனிதநேயப் பணிகளாலும் -

கல்வி தொண்டாலும் -
பண்பாட்டு வழிநடத்தலாலும்
இழிநிலை மக்களாய் கருதப்பட்டவர்கள்
சமூக அந்தஸ்தைப் பெற்றனர்.
இதற்கு மொழிவாரி மாகாணப் பிரிவினையும்
ஒரு காரணமாய் அமைந்தது.

- ஏனெனில்
இந்தப் பார்ப்பன இந்துக்கள்
திராவிட இந்துக்களின் மொழியின் மீதோ -
கல்வியின் மீதோ - கலாச்சாரத்தின் மீதோ -
என்றும் அக்கரைக் காட்டியவர்கள் அல்லர்
அந்த மக்களின் வாழ்வில் - வளர்ச்சியில்
என்றும் முயற்சி எடுத்தவர்களும் அல்லர்
கற்றாலோ கலாச்சாரத்தைப் பெற்றாலோ
அவர்கள் அபகரித்துவைத்திருக்கும்
அரசியல் - ஆட்சி - நிர்வாகப் பொறுப்புகளில்
வந்துவிடுவார்களோ என்ற பயமே காரணம்.

- இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர்
வெறும் பேச்சு மொழியாக இருந்த
பலமொழிகளை ஆராய்ந்து அம்மொழிகளுக்கு
வரிவடிவம் கொடுத்து அவற்றை எழுத்துமொழியாக்கி
பெரும்பணி புரிந்தவர்கள் கிறிஸ்தவர்கள்
(Religious Converson in India - Banerjee)
இதனால் அனேக அடிமை இனத்தவர் உரிமை பெற்றனர்.

- எனவேதான் இந்திய மொழிகளின் வளர்ச்சி பற்றி
எழுதிய டாக்டர் கங்காதரன்
"கிறிஸ்தவர்கள் பணி இல்லையென்றால்
இந்தியாவில் பலமொழிகள் இருந்தஇடம் தெரியாது
அழிந்து போயிருக்கும். எனவே இவர்கள்
மொழிப்பணியைப் போற்றி புகழவேண்டும்" என்கிறார்.

- இந்தப் பார்ப்பன இந்துக்கள்
வர்ணாசிர தர்மத்தின்வழி தங்கள் ஆதிக்கத்தை
நிலைநாட்டும் முயற்சியில் தோல்விகண்டதால்
மத உணர்வூட்டி - சமஸ்கிருதத்தை வளர்த்து
தங்கள் ஆதிக்கத்தைத் தக்கவைக்கப்பார்க்கின்றனர்.

✪ அதனால்தான்
ஆர்.எஸ்.எஸ். இன் கொள்கை நூலான
“எண்ணத் தொகுப்பு” (Bunch of thouoghts)
என்ற நூலில் -
“மொழி பிரச்சனைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது.
சமஸ்கிருதம்தான் ஆட்சி மொழியாக வேண்டும்.
சமஸ்கிருதம் அந்த இடத்திற்கு வரும்வரை
வசதிக்காக இந்தியை ஆட்சிமொழியாக
பெற்றிருக்கவேண்டும். ஆங்கிலம்
அறவே ஒழிக்கப்படவேண்டும்” என்கின்றனர்.
இப்போது புரிந்து கொள்ளுங்கள்
இந்த இந்துத்துவாக்களின்
இந்தி ஆட்சிமொழிக் கொள்கையை.

✪ இதற்குத் துணையாக 1952 டிசம்பரில்
டாக்டர் முகர்ஜி தலைமையில் நடந்த மாநாட்டில்
“நாடு முழுவதும் சமஸ்கிருதத்தைக்
கட்டாயப் பாடமாக்கவேண்டும்.
அதே வேளையில் சமஸ்கிருத எழுத்துக்களைப்
பிரபலப்படுத்தவேண்டும்.
எல்லா இந்திய மொழிகளுக்கும் சமஸ்கிருத எழுத்துக்களையே
பொது எழுத்துக்களாக அறிவிக்கவேண்டும்”
என்று தீர்மானம் எடுத்து செயல்படுபவர்கள் இவர்கள்.

✪ இன்று இவர்கள் திராவிட இந்துக்களின்
கல்வி நலனில் அக்கறைக் கொண்டு
வித்தியாலயங்களையும் -
எக்கால் வித்தியாலயங்களையும்
உருவாக்கி உள்ளதாக நினைப்பவர்களுக்கு
“மாணவர்களின் மனநிலையையும்
நடத்தையையும் மாற்றுவது;
அவர்கள் மனதில் எங்கள் இலட்சியங்களைப்
புகுத்துவது” என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர்
அவுட்லுக் பத்திகைக்கு அளித்த பேட்டி
வித்தியாலயங்கள் உருவாவதன் நோக்கத்தை
வெள்ளிடைமலையாகக் காட்டுகிறது.

✪ இதற்காக கீழ்வரும் திட்டங்களை
ஆர்.எஸ்.எஸ். தீட்டியுள்ளது.

* வழக்கில் இல்லாத சமஸ்கிருதமொழியைக்
கட்டாயபாடமாக்குவது
* சமஸ்கிருத சுலோகங்களை
மனப்பாடம் செய்ய வற்புறுத்துவது.
வேதங்கள் - உபநிடங்களை
அடிப்படை பாடமாக்குவது.
* இந்துத்துவா (பிராமணப்பண்பாடு)
அம்சங்களைப் பாடத்திட்டத்தில் புகுத்துவது
* பாரதத்தின் பூர்வீக குடிமக்கள்
பார்ப்பனரே என நம்பவைப்பது.
இந்த முறையில் பார்ப்பனப் பண்பாட்டையும்
பார்ப்பனமொழியையும் திராவிட இந்துக்களிடம் திணித்து
அவர்களிடம் காலாகாலமாக இருந்து வருகின்ற
நல்லபல பண்பாடுகளையும் - மொழியையும்
மறக்கச் செய்வதுதான் ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டம்

✪ விஷம் என வெளிப்படையாக தெரிந்தால்
குடிக்க எவரும் துணியார்
ஆனால் சிறுக சிறுக உணவோடு கலந்து
கொடுத்தால் உட்கொள்ளாதவரே இல்லை
என்ற நிலையை உருவாக்கிவிடலாம்.
என்பதை உணர்ந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்
மதப்போர்வையில் சிறுக சிறுக தங்கள் திட்டங்களை
மற்றவரிடம் செயல்படுத்துகின்றனர்.

✪ அதற்காக அவர்கள் கைக்கொள்ளவேண்டிய
வழிமுறைகளை அவர்களுக்குக்கொடுத்த
எண் 411/RO/3003/1/RSS 003 சுற்றறிக்கை
"நமது பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட
பழங்குடி மக்களின் பிள்ளைகளை
அதிகமாக சேர்த்து நாம் காட்டும்
பிராமண இந்து நெறி முறைகளுக்கேற்ப
அவர்களுக்கு வரலாற்றைக் கற்பிக்கவேண்டும்" (எண் 10)
"பிற்படுத்தப்பட்டோரிடமும் –
தாழ்த்தப்பட்டோரிடமும் –

மூடநம்பிக்கைகளைப் பரப்பவேண்டும்.
அதற்காக சாமியார்களையும் –
சாதுக்களையும் தொடர்ந்து பயன்படுத்தவேண்டும்" (18)
வெவ்வேறு சாதிகளுக்கிடையில்
சாதிச்சண்டைகளைத் தூண்டவேண்டும்" (22)
என்பனவற்றை எடுத்துரைக்கிறது.

- ஆர்.எஸ்.எஸ்.இன் சுற்றறிக்கை போன்று
1994ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று
பாலக்காட்டில் நடைபெற்ற
'பிராமண சமாஜம்' அனுப்பிய இரகசிய கடிதத்தில்
"சூத்திரர்களை மதசார்பான நிகழ்வுகளில்
அடிக்கடி ஈடுபடுத்தவேண்டும்.
அப்போதுதான் அரசியல் உரிமைகளில்
தங்கள் கவனத்தைச் செலுத்தாமல்
எப்போதும் அடிமைகளாகவும்
பிராமண ஆதரவாளராகவும் இருப்பர்" (1)
"சமய சிறுபான்மையினர் –
பழங்குடியினர் – பிற்படுத்தப்பட்டோர்
ஆகியவரிடம் வளர்ந்துள்ள
அரசியல் விழிப்புணர்ச்சி
பிராமணத் தலைமைக்கு
அச்சுறுத்தலை உருவாக்குகிறது.
எனவே அவர்களுக்குள் குழப்பத்தையும்
மோதலையும் ஏற்படுத்தினால்தான்
தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள்" (2)
எனக் கூறியிருப்பதைப் பார்த்தால்
இவர்கள் 'இந்துக்களே ஒன்றுசேருங்கள்'
என்று கோஷமிடுவது எதற்கு என்பது புரியும்
அதோடு திராவிட இந்துக்களின்
முன்னேற்றத்திலும் - வளர்ச்சியிலும்
எள்ளளவும் அக்கறை இல்லாதவர் என்பதும் தெரியும்

- திராவிட இனமக்கள்
அரசியல் விழிப்புணர்வு பெறுவதையும்
ஆட்சி அதிகாரத்தில் வருவதையும்
எள்ளளவும் விரும்பாதவர்கள் இவர்கள் என்றும்
திராவிட இனமக்களை அடிக்கடி

குழப்பங்களிலும் - மோதல்களிலும் சிக்கவைத்து
அவர்கள் பொருளாதார வளர்ச்சியையும்
பாழ்படுத்திவிடவே ஆங்காங்கு
ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டு நடத்தும்
சாதி-மத கலவரங்களும் -
இராமர்கோயில் கோஷமும் -
சிறுபான்மையினர் சலுகை பேச்சும் -
என்பதை மறந்துவிட வேண்டாம்.

- இந்த ஆர்.எஸ்.எஸ். எந்த அளவு
திட்டமிட்டு செயல்படுகிறார்களென்றால்
மத அடையாளங்கள் - மதவழிபாடுகள்
மதச் சடங்குகளில் சமஸ்கிருத ஆதிக்கத்தை
அறவேவிடாது உடும்புப்பிடியாய்
பிடித்துவைத்திருக்கும் இவர்கள் தற்பொழுது
அன்றாட வாழ்க்கையில் - அமைப்புகளில் -
சமஸ்கிருத சொற்களை - சுலோகங்களைப்
புகுத்திவருகின்றனர்.

- இந்தத் தாக்கத்தால் நம்மில் பலர்
இப்படிச் சமஸ்கிருத பெயர்களை வைப்பதும்
சமஸ்கிருதத்தில் பேசுவதும் - பயன்படுத்துவதும்
பெருமை என நம்மில் பலப் படித்தவர்களே
தவறாக நினைத்து யானை தன்தலையில்
தானே மண்ணை வாரி போடுவதுபோல்
போட்டுக் கொள்கின்றனர்.

- இதைப் போன்றுதான்
பல ஆண்டுகளுக்குமுன் தமிழ்மொழியை அழிக்க
வடமொழி ஆதிக்கத்தைத் தமிழகத்தில் புகுத்தினர்.
அப்போது தமிழ் மேடைப் பேச்சாளர் கூட மேடைகளில்
வடமொழி கலந்துபேசுவது பெருமை எனக் கொண்டனர்.
அது எந்த அளவு அன்றாட வாழ்க்கையைக்கூட
பாதித்தது என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு

- ஓர் தமிழ்க்குடியானவன் வீடு
வீட்டுத் தோட்டத்து வேலியில்
வேட்டியொன்று காயப் போடப்பட்டிருந்தது.

குடியானவனோ தன் வீட்டுத் திண்ணையில்
குறுங்கட்டி ஒன்றில் அமர்ந்துகொண்டு
கூடை ஒன்றை முடைந்து கொண்டிருக்கிறார்.
அப்போது அங்குவந்த ஆட்டுக்குட்டி ஒன்று
அங்கே காயப்போட்டிருந்த வேட்டியைக் கடிக்க முனைந்தது.
கடிக்க முயன்ற ஆட்டுக்குட்டியை
விரட்டநினைத்த குடியானவன் தன் மனைவியை அழைத்து
"ஆஸ்டு குட்டி வேஷ்டியைக் கடிக்குது
ஓஸ்டு ஓஸ்டு" என்று கூறினாராம்

- இந்த அளவு தமிழக சாமானியர்களையே தாக்கிய
வடமொழி ஆதிக்கத்தை விரட்ட
'தனித் தமிழ் இயக்கம்' ஆரம்பமானது.
மத இன வேறுபாடின்றி ஒன்றிணைந்து
வடமொழி ஆதிக்கத்தை தடுத்தனர் அன்று.
இந்தத் தமிழர்கள் தமிழால்தான்
ஒன்றாகின்றனர் என்பதைப் புரிந்த வடவர்
மதத்தால் இவர்களைப் பிரித்து தங்கள்
வடமொழி ஆதிக்கத்தை நிலைநாட்ட
தமிழ்மொழி தாக்கம் பெற்ற இடங்களில்
திட்டமிட்டு சமஸ்கிருதத்தைப் புகுத்துகின்றனர் இன்று.
இந்தக் கொடுமை நீண்டால் அழிவது
தமிழ்மட்டுமல்ல - தமிழராகிய நாமும்தான்
இதுதான் உலக வரலாறு காட்டும் பாடம்.

- "ஆட்சிவிசயத்தில்
"இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன? என இருப்பதுபோல்
'மொழி' விசயத்திலும்
வடமொழியென்ன? தமிழ்மொழியென்ன?
என்று வாழாதிருப்பதற்கு இரு காரணங்கள்
ஒன்று தமிழின் பெருமையும் ஆற்றலும்
அன்னிய மொழியினருக்கும் - அயல் நாட்டினருக்கும்
தெரிந்திருக்கும் அளவு தமிழராகிய நமக்குத் தெரியாதது.
மற்றொன்று உருவமற்ற கடவுளுக்கு உருவம் அமைத்து
ஊட்டப்படும் மத உணர்வுகளால் பிரிந்துகிடப்பது.

- தற்பொழுது உலகிலுள்ள மொழிகளுள்
  மிகப் பழமையானது தமிழ்மொழி
  இந்தத் தமிழ் உருவாகி ஒரு இலட்சம் ஆண்டுகள்
  ஆகியிருக்கும் என்று அமெரிக்க மொழியறிஞர்
  'ஸ்வாடேஷ்' என்பவர் கூறுகிறார்.
  மேலும் அவர் தமிழில் சித்திர எழுத்துக்கள் தோன்றி
  50,000 வருடங்கள் ஆகிவிட்டன என்பதைக்
  கார்பன் அணுஆய்வு மூலம் உறுதிபடுத்தினார்.

- கி.மு. 15 ஆண்டுகளில்
  பாதி சித்திரவடிவம் - பாதி எழுத்துவடிவம்
  அமைந்ததாய்த் தமிழைப் பயன்படுத்தினர் தமிழர்.
  இலக்கிய சான்றுபடி பார்த்தால்
  தமிழ் 5000 ஆண்டுகளுக்கு முந்தியது.
  அன்றே இன்றைய ஆங்கில அளவுக்குக்
  கட்டமைப்பு உடையதாய் தமிழ் விளங்கியது.

- தமிழுக்கு இணையாக விளங்கிய
  இலத்தீன் - கிரேக்கம் - ஹிப்ரூ - சமஸ்கிருதம்
  ஆகிய தொன்மொழிகள் வழக்கொழிந்தன.
  ஹிப்ரூ இயேசு கிறிஸ்துபேசிய மொழி
  இலத்தீன் - சமஸ்கிருதம் இன்று வழிபாட்டு மொழியாக
  சுருங்கி ஒருசிலரால் பேசப்பட்டுவருகிறது.
  ஆனால் தமிழ்மொழியோ உயர்தனி செம்மொழியாய்
  கணிப்பொறிக்கு ஏற்றமொழியாய்
  மலேசியா - இலங்கை போன்ற நாடுகளில்
  ஆட்சி மொழியாய் அமைந்திருப்பது நம் தமிழ்மொழி.

- வரிவடிவம், ஒலிவடிவம் மூலமாகவும் -
  வாக்கிய அமைப்பு மூலமாகவும் -
  கல்லெழுத்துக்கள் மூலமாகவும் -
  ஆய்வு செய்த பேரறிஞர்
  சுப்பிரமணிய மலையாண்டி கருத்துபடியும் -
  சமஸ்கிருதத்தில் 60% தமிழ்சொற்களும்
  20% வடதிராவிடமாகிய பாலி - பிரகிருத மொழிச்சொற்களும்
  10% வேதமொழிச் சொற்களும்
  10% இடுகுறி சொற்களும் உள்ளன
  என்ற தேவநேய பாவணனார் ஆய்வின் படியும் -

வடநாட்டில் வழங்கிய தமிழாகிய
பிராகிருதம் தான் சமஸ்கிருதத்தின் தாய் என்று
சமஸ்கிருதச் சொற்களைப் பகுப்பாய்வு செய்த
சாத்தூர் சேகரன் கூற்றுபடியும் -
தமிழ்மொழியே சமஸ்கிருதத்திலும்
முந்தியது - பெருமைமிக்கது என அறியலாம்.

✪ இத்தகு பெருமைமிகு தமிழை
உயர்தனி செம்மொழியாக அறிவிக்க தயங்கும்
மத்திய அரசு வழக்கொழிந்து நிற்கும்
வடமொழியான சமஸ்கிருதத்தை
உயர்தனி செம்மொழியாக அறிவித்திருப்பது
அவர்கள் மொழிப்பற்றை நன்கு காட்டுகிறது.
ஆனால் மொழியை வைத்தே ஆட்சிக்குவரும்
நம் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும்
தமிழை உயர்தனி செம்மொழியாக
அறிவிக்கச் செய்வதில் அடங்கி இருக்கின்றனர்
என்னே இவர்கள் தமிழ்ப்பற்று.

✪ உயர்தனி செம்மொழி என்று
தமிழை அறிவித்தால் தமிழுக்கும்
தமிழ் நாட்டுக்கும் என்ன பயன்? என
நீங்கள் நினைப்பதற்கு இதோ பதில்
தமிழ் உயர்தனி செம்மொழி என
மத்திய அரசு அறிவித்தால்
மானியகுழு அதை ஏற்கும்-
அதனைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள
அனைத்து பல்கலைக் கழகங்களிலும்
தமிழுக்கென தனித் துறைகள் அமைத்து
தமிழ் ஆய்வுகள் நடைபெறும்.

✪ இந்திய பல்கலை மாநியக்குழு ஏற்கும்போது
உலகிலுள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும்
தமிழை உயர்தனி செம்மொழியாக ஏற்கும்
மத்திய அரசு சமஸ்கிருத ஆண்டு என
அறிவித்தது போல் -
'தமிழ் ஆண்டு' என அறிவிக்கும் வாய்ப்பு
தமிழுக்கும் கிடைக்கும்.

சமஸ்கிருத ஆண்டைக் கொண்டாட
15 கோடி ரூபாய் ஒதுக்கியதுபோல்
தமிழுக்கும் பணம் ஒதுக்கப்படும்.
கலைக்களஞ்சியம் - மொழி அகராதிகள்
வெளியாவதற்கான முழுசெலவையும்
மத்திய அரசே ஏற்கும். எனவேதான்
தமிழர்களாகிய நாம் ஒற்றுமையோடு
எல்லா தகுதியும் பெற்ற தமிழ்மொழியை
உயர்தனி செம்மொழியாக அறிவிக்க
மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

- ஆர்.எஸ்.எஸ். சார்பரசான மத்திய அரசின்
துணையோடு சமஸ்கிருதத்தை
உயர்தனி செம்மொழியாக அறிவித்த ஆர்.எஸ்.எஸ்.
மராத்திய மொழியில் சொல்லிவந்த
அவர்கள் பிரார்த்தனைப் பாடலைக்கூட
சமஸ்கிருத மொழியில் மாற்றியுள்ளார்கள்.

- ஆர்.எஸ்.எஸ். அமைப்பு
தன் அமைப்பின் பெயர்கள் -
அமைப்பின் பொறுப்பாளர் பெயர்கள்
துணை அமைப்புக்களின் பெயர்கள்
அனைத்தும் 'சமஸ்கிருதமொழி' பெயர்களே.
அதுபோல் உறுப்பினரின் பயிற்சிவகுப்பை
நடத்தும் அதிகாரி "ஷிக்ஷன் வர்கா" என்றும்
அணிவகுப்பு ஊர்வலத்தை "பாதஞ்சலன்" என்றும்
இவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு "வியாஸ் பூர்ணிமா"என்றும்
தினசரி நடத்தும் பயிற்சிக்கு 'ஷாகா' 'சமஸ்கார்' என்றும்
சமஸ்கிருத பெயர்களையே கொடுத்துள்ளனர்.

- சமஸ்கிருத வெறித்தனத்தைக் காட்டும்
அவர்கள் சட்டதிட்டங்களின் 8-வது பிரிவு
இவ்வமைப்பின் உள்பிரிவுகள் என்னவென்பதையும்
அவற்றின் சமஸ்கிருத பெயர்களையும் கூறிவிட்டு
இந்தியா முழுமைக்கும் அது எந்த மொழிபேசும்
மாநிலமாக இருந்தாலும் அந்த அமைப்புகள்
இந்த சமஸ்கிருத மொழியிலேயே
அமைக்கப்பட வேண்டும் என்கிறது.

- அதுபோல் ஆர்.எஸ்.எஸ்.இன்
  கொள்கைப் பிரகடனமே
  பார்ப்பனீய சமஸ்கிருத வெறியைத்
  தெளிவாக பிரகடணப்படுத்துகிறது.
  "இந்து சமாஜத்தில் பல்வேறு வகையில்
  பிரிந்து கிடக்கும் குழுக்களை ஒன்றுசேர்த்து
  அவர்களுக்கு எழுச்சியூட்டி
  இளமை ரத்தம் பாயச்செய்யவேண்டும்
  இந்து தர்மம் மற்றும் சமஸ்கிருத
  அடிப்படையில் இதைச் செய்யவேண்டும்"

- இவ்வாறு இந்துத்துவாவைச்
  சமஸ்கிருத கலாச்சார அடிப்படையில்
  இந்துக்களை ஒன்று திரட்டி சாதிக்க நினைக்கும்
  மொழி வெறி கொண்ட வகுப்புவாத
  அமைப்புகளே ஆர்.எஸ்.எஸ்.-ம் அதன் துணை அமைப்புகளும்

6 இந்தியக் கலாச்சாரம்

எக்காலத்திலும் இந்தியா முழுதும்
ஒரே மொழி ஒரே கலாச்சாரம்
ஆட்கொண்டதும் ஆட்சி செலுத்தியதுமில்லை.
இந்தியாவில் நான்கு மாபெரும் கலாச்சாரங்கள் உண்டு
அவற்றிலிருந்து 40 பெரிய கலாச்சாரங்களும்
1200 சிறிய கலாச்சாரங்களும் உருவாகியுள்ளன.
இத்தனை கலாச்சாரங்கள் கொண்ட இந்தியாவில்
'இந்திய கலாச்சாரம்' என்ற பெயரில்
பார்ப்பன கலாச்சாரத்தைப் பல்வேறு
இன மொழி சமய மக்கள் மீது திணிக்கத்
திட்டமிட்டு செயல்படும் ஒரு வன்முறை
பார்ப்பன அமைப்பே ஆர்.எஸ்.எஸ். -ம் அதன் துணை அமைப்புகளும்.

- ஒரு பிரிவு இரத்தம் உடைய ஒருவன் உடம்பில்
வேறொரு பிரிவு இரத்தத்தைச் செலுத்தினால்
அவனது வாழ்வு பாழ்பட்டு போவதுபோல்
ஒரு கலாச்சாரத்தை
மற்றொரு கலாச்சாரத்தின் மேல்
திணிக்கும் போது பெருந்தீங்கே ஏற்படும்.

- அதே வேளையில்
ஒவ்வொரு கலாச்சாரமும்
தன்னிடமுள்ள நல்லப்பண்புகளை
மற்ற கலாச்சாரங்களுக்குக் கொடுப்பதும் -
மற்ற கலாச்சாரப் பண்புகளை ஏற்பதும் -
வேண்டாதவற்றைத் தள்ளிவிடுவதும்
கலாச்சார வாழ்வுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும்
இதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

- இந்தியாவில் வாழும்
ஆயரில்லாத மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத்
தங்கள் கலாச்சாரத்தில் கொண்டிருப்பவர்.
புத்தர் இந்தியாவில் தோன்றும்வரை
அனைவரும் - குறிப்பாக பிராமணரும்
மாட்டிறைச்சி உண்டவர்கள் என்பதற்கு
ஏராளம் சான்றுகள் உண்டு.
(Hiudu Dharma - M.K. Gandi;
Rig Veda 1:167;
Mahabharata - Ch. 208;
Sat - patha Brahmana III)
அதுபோல்
அவர்களது 'யாக குண்டங்கள்'
மிருகங்களைப் பொரித்து உண்ண உதவியவை
அவர்கள் அருந்திய 'தேவபானம்' என்றது மதுவே

- இந்த மது அருந்தும் பழக்கத்தை ஒழிக்க
பெரும் முயற்சி எடுத்தவர்கள் கிறிஸ்தவர்களே.
வெள்ளை ஆட்சியாளர் மதுவுக்கு
அடிமைப் பட்டிருந்த போது
வெள்ளை மிசினரிகள் மதுவை ஒழிக்க
பெரும்முயற்சிகளை மேற்கொண்டனர்.
அதற்காக 1897இல் இவர்கள்
முயற்சி மூலம் 250க்கு மேற்பட்ட
மது ஒழிப்பு மையங்களைக்
கிறிஸ்தவர்கள் தோற்றுவித்தார்கள்.
(Social Protest in India - G.A. Oddie)

- அதுபோல் ஆரிய கலாச்சாரவாதிகள்
கைக்கொண்டிருந்த மனித நேயமற்ற
கலாச்சார கூறுகளான 'சதி' என்ற
உடன்கட்டை ஏறுதல் - சிசுகொலை - தீண்டாமை -
அடிமைவியாபாரம் ஆகியவற்றை ஒழிக்க
மக்களின் மழுங்கிய மனசாட்சிகளைத்
தட்டி எழுப்பி பணிபுரிந்தவர்கள் கிறிஸ்தவர்களே.
(Wanderings - Fanny Parkas; Slevary in the Tamil country - Manikam)

- எந்த வேளையிலும் கிறிஸ்தவர்களாக மாறிய திராவிடர்களாயினும் பழங்குடிகளாயினும் சரி அவர்கள் கைக்கொண்டிருந்த பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள வற்புறுத்தியதில்லை.
அவர்களிடம் பில்லிசூன்யம் - பேய்பிசாசுக்கள் போன்ற பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடநம்பிக்கைகளைக் கைவிட வற்புறுத்தினார்கள்.
இதற்கு சாட்சியம் கூறுவதுபோல் ஆதிவாசிகள் தலைவரான டாக்டர் பாரே என்பவர் "மற்றவர் குற்றம் சாட்டுவதுபோல் எங்கள் கலாச்சாரத்தின் தனித்தன்மையை கிறிஸ்தவம் அழித்துவிடவில்லை மாறாக எங்கள் கலாச்சாரத்தைப் பல்வேறு வழிகளில் வளர்த்துள்ளது" என்கிறார்.
இவரைப்போல சோட்டா நாக்பூரிலுள்ள மனித இயல் வல்லுநர் சரத்சுந்திரரே "ஓரான் பழங்குடிமக்கள் கிறிஸ்தவத்துக்கு மாறினபோது கிறிஸ்தவ கோட்பாட்டிற்கு முரண்பாடற்ற எல்லா பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து கைக்கொண்டார்கள்" என்கிறார்.

- உண்மை இவ்வாறிருக்க கலாச்சாரத்தைக் களங்கப்படுத்துவது கிறிஸ்தவம் என்று கூறும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ரிக்வேதம் கூறும் 'புரம்தரா' என்ற பெயரில் (புரம்-நகர்; தரா - இடி) திராவிட பண்பாட்டை அழித்திட இந்து சமவெளி பட்டணங்களை அழித்த ஆரியர்களின் செயலை என்னச் சொல்லப்போகிறது.

- அதுபோல் இன்றும்.
பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட பாரதத்தில் 'இந்தியகலாச்சாரம்' என்றபெயரில் ஆரிய கலாச்சாரத்தை அனைத்து நிலைகளிலும் புகுத்தி ஏனைய கலாச்சாரங்களை அழித்துவரும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் எப்படிக் கலாச்சார காவலர்களாக முடியும்?

- இவற்றின் படிநிலையாக்கத்திற்குத் திராவிட இந்துக்களிடம்

சமஸ்கிருத சுலோகங்களை
மனப்பாடம் செய்ய வற்புறுத்துவதும் -
பார்ப்பன புராணங்கள் -
வேதபாடல்களைப் பாடவைப்பதும் -
ஆரிய கலாச்சாரப் புகுத்தல் என்ற
வன்முறை ஆகாதா?

✪ பாரத தேசத்தின்
பல்வேறு கலாச்சாரக்கூறுகளில்
பல்வேறு மகான்கள் - மகா புருஷர்கள் வாழ்ந்திருந்தும்
அவர்களது சிறப்பு வெளிவராமலிருக்க
"இராமர் ஒருவரே பாரதத்தின்
தேசியத் தலைவன் -
வரலாற்றுப் புருஷன் -
தேசிய ஒருமைப்பாட்டு நாயகன் -
என்ற கருத்தை மாணவரிடம் மக்களிடம் திணித்து
திராவிடக்கலாச்சார புருஷர்களைத்
திராவிட இந்துக்கள் நினைத்து பார்க்கவிடாது
செய்து வருவது கலாச்சார சிதைப்பும் - திணிப்பும் ஆகாதா?

✪ மதவிழாக்கள் என்ற பெயரில்
பல்வேறு ஆரிய விழாக்களை உருவாக்கி
அடிக்கடி தேவையற்ற ஊர்வலங்களையும்
சடங்கு சம்பிரதாயங்களைப் புகுத்தி
திராவிட இந்துக்கள் தங்கள் உழைப்பால்
உருவாக்கிய செல்வத்தைச் செலவு செய்யவைத்து
வாழ்வில் உயரவிடாததோடு
அவர்கள் கொண்டாடி வந்த கார்த்திகை தீபம்போன்ற
அர்த்தமுள்ள விழாக்களையும்
அழித்து வரும் இந்துத்துவவாதிகளே
நீங்கள் எப்படி கலாச்சார காவலர்கள் ஆவீர்கள்?

✪ திராவிட இந்துக்கள் தொட்டால்
தெய்வமும் தீட்டுபடும் எனக்கூறி
திராவிட இந்துக்களை அர்ச்சகர்களாக்காத
இந்துத்துவவாதிகளே காஞ்சிகாமகோடி
சங்கராச்சாரியாரைப்போன்ற
ஆரிய மடாதிபதிகளையும் அர்ச்சகர்களையும்

கொண்டு குட முழுக்கு நடத்தினால் தான்
கோவில் தூய்மை அடையுமா?
அங்கே ஆண்டவன் குடியிருப்பாரா?
குன்றக்குடி மடாதிபதிகள் போன்ற
திராவிட இந்து மடாதிபதிகளும் அர்ச்சகர்களும்
இணைந்து குடமுழுக்கு நடத்தினால்
கோவில் தூய்மை அடையாதா? ஆண்டவன் குடியிருக்கமாட்டானா?
இப்படிச் செய்யாமலிருப்பது ஆரிய ஆதிக்க வெறிதானே!

- "நாம் இந்துக்கள்" என்ற போர்வையில்
திராவிட இந்துக்களையும் அடிமையாக்கும்
இந்துத்துவ வாதிகளே 'நந்தனைச்'
சிதம்பரம் கோவிலுக்குள் அனுமதிக்க மறுத்து -
பூணூல் அணுவித்த பிராமணன் ஆக்கியபின்
உள்ளே அழைத்து எரியூட்டிவிட்டு
சிவஒளியில் சங்கமித்து விட்டதாக
புராணம் எழுதியவர்கள் உங்கள் வம்சத்தார்கள்தானே.

- கடவுள் என்பவர்
மொழிகள் - கலாச்சாரங்களைக் கடந்தவர்
இப்படிப்பட்ட கடவுளைச்
சமஸ்கிருத மொழிக்குள்ளும் -
ஆரிய கலாச்சாரத்துக்குள்ளுந்தான்
தங்கி இருப்பதாக கூறுவது மடமையிலும் மடமை
அதுபோல் திராவிட மொழியும் கலாச்சாரமும்
கடவுள் அருளைத் தராதென தடுப்பதால்தான்
அப்படி ஒரு மொழிக்குள்ளும் ஒரு கலாச்சாரத்துக்குள்ளும்தான்
கடவுள் இருக்கிறாரென்றால் அப்படிப்பட்ட
"கடவுள் இல்லவே இல்லை
கடவுளைச் சொல்பவன் முட்டாள்" என்றார் பெரியார்.
இப்படி அகத்திலும் புறத்திலும்
ஆதிக்க எண்ணத்தோடு ஒருபெரும் பகுதி மக்களை
ஒதுக்கி - ஒடுக்கி வைக்கும் உங்கள் செயல்கண்டு
மனம் வெதும்பியே வெண்தாடிவேந்தர்
"பாம்பையும் பார்ப்பானையும் கண்டால்
பார்ப்பனை அடி" என வேதனையுடன் கூறினாரோ?

✪ கடவுள் என்பவர்
இவர்கள்தான் 'என்னை அர்ச்சிப்பவர்'
என்று எந்த இனத்தவரையும் நியமிக்கவில்லை.
அந்த மொழியில்தான் அர்ச்சனை செய்யவேண்டும்
என்றோ - இப்படித்தான் அர்ச்சனைச்
செய்யவேண்டும் என்றோ சொல்லவில்லை.
இதற்கான ஆகமங்களை - சாத்திரங்களை
ஆதியில் ஆலய ஆக்கிரமிப்பைச் செய்துகொண்ட
ஆதிக்க வர்க்கமான ஆரியவர்க்கத்தினரின் படைப்புகளே.

✪ இப்படிப்பட்ட நடைமுறைகளையும்
செயல்பாடுகளையும் வைத்துப் பார்க்கும்போது
'இந்துக்கள்' எனச் சொல்லத்தகுந்தவர் பிராமண இந்துக்கள் மட்டுமே.
இதனை மெய்ப்பிக்கும் விதத்தில்
1910-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்புக்குழு
இந்துக்கள் யார்? எனக் கண்டறிய
ஒரு விளக்கத்தைக் கொடுத்துள்ளது. அதில்
"பிராமணர் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டவர் –
மந்திரத்தைப் பெற்றுக் கொண்டவர் –
வேதங்கள் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டவர் –
ஆரியக் கடவுள்களான பிரமன், விஷ்ணவை
வணங்குபவர்கள் தொட்டால் தீட்டுபடாதவர் –
மாட்டிறைச்சி உண்ணாதவர்.
இவர்களே இந்துக்கள்" எனக்கூறப்பட்டுள்ளது.

✪ இந்த விதிப்படி பார்த்தால் -
திராவிட இந்துக்கள் எவரும்
பிராமண ஆதிக்கத்தை ஏற்க தயாரில்லை.
அவர்கள் ஓதும் அனைத்து மந்திரங்களையும்
ஓதக்கூடியவர்களுமல்லர் -
வேதங்கள் சொல்லும் வர்ணாசிரதர்மத்தை
ஏற்றுக்கொள்பவர்களுமல்லர் -
தொட்டால் தீட்டு என ஒதுக்கிவைக்கப்பட்டவர் -
பலர் மாமிசம் உண்பவர்கள்
இப்படி இருக்க திராவிட இந்துக்கள்
எப்படி இந்துக்களாக இருக்கமுடியும்?

✪ ஆகவே
இன்று இந்துக்களே ஒன்று படுங்கள் என்ற கோஷம்
திராவிட இந்துக்களுக்குச் சமய விடுதலை கொடுக்கவோ
சமுதாய அந்தஸ்தோ - அரசியல் அந்தஸ்தோ
கொடுத்து உயர்த்துவதற்கல்ல
உயர் சாதி இந்துக்கள் என்ற பெயரால்
தாங்கள் இழந்து வரும்
ஆட்சி - அதிகாரம் - அந்தஸ்து ஆகியவற்றைத்
தக்கவைத்துக்கொள்ளவும் -
மறுபடியும் அவர்களைத் தங்கள்
அடிமைகளாகவும் - அடிகோலிகளாகவும் -
பயன்படுத்தவுமே அன்றி வேறில்லை.

✪ இப்படி மனிநேயம் மறுக்கப்பட்டு
சடங்கு சம்பிரதாயங்களுக்கு மட்டும்
முக்கியத்துவம் கொடுத்து இவர்கள் வாழ்ந்ததால்தான்
1867-இல் 'பிரர்தன சமாஜ்'
என்ற இயக்கத்தை 'அட்மாரம் பாண்டுரங்கன்'
என்பவர் உருவாக்கினார்.
1875-இல் இந்துவம்சத்தின்
மார்ட்டீன் லூத்தர்கிங் - எனப் பாராட்டப்பட்ட
சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவர்
'ஆரிய சமாஜம்' என்பதைத் தொடங்கினார்.

✪ சுவாமி இராமகிருஷ்ண பரமகம்சர்
உருவ வழிபாட்டை ஆதரித்தபோதும்
சமயச் சடங்குகளைக் கண்டித்தார்.
சுவாமி விவேகானந்தரும்
இறைவழிபாடு சடங்குகளைச் சார்ந்ததல்ல.
"பகவான் ஏழைகளுக்கு
ரொட்டித்துண்டு வடிவிலிருக்கிறார்
எனவே ஏழைகளுக்கும் நலிந்தவர்களுக்கும்
சேவை செய்வதே இறைவழிபாடு" என்றார்.

✪ இதே கருத்தைத் திருமூலரும்
மக்கள் தொண்டே மகேசன் தொண்டென்று
"படமாடக்கோயில் பகவற்கொன்றீயில்
நடமாடக்கோயில் நம்பர்க் காக
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்

படமாடக் கோயில் பகவற்க தாமே"
என வலியுறுத்திக் கூறியிருப்பதைப் பார்க்கலாம்.

✪ இவ்வாறு சமயச்சடங்குச் சம்பிரதாயங்களைக்கடந்து மனித நேயத்தோடு மக்களுக்குப் பணிபுரிவதற்குப்பதில் எதற்கெடுத்தாலும் சடங்கு சம்பிரதாயங்களுக்கும் விழாக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வறியோர்கள் உழைத்து சேர்த்த செல்வங்களைச் செலவழிக்க வைத்து அவர்களை மேலும் மேலும் ஓட்டாண்டிகளாக்குவதை எந்தக்கடவுளும் விரும்பமாட்டார். இப்படிப்பட்டவர் சமயத்தின் பெயரால் பணம்சேர்த்து பயனடைபவர்கள்.

✪ இதற்கு 'இந்துராஜ்யம்' எப்படி இருக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டும் மகாபுருஷர் சிவாஜியை இப்படிப்பட்டக் கூட்டம் எப்படி ஓட்டாண்டி ஆக்கியது என்பதைப் பாருங்கள் அப்போது புரியும் அதன்பின் ஒரு முடிவுக்கு வாருங்கள் இங்கே நான் சொல்வது கல்கத்தா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசியரும் சரித்திர ஆராட்சியாளருமான ஜதுநாத் சர்கார் எழுதிய புத்தகத்தில் கூறப்பட்டிருப்பதை 30-3-1940 அன்று 'விடுதலை' பத்திரிகை தலையங்கமாக வெளியிட்டுள்ளதுதான்.

✪ சிவாஜி அந்தண குடும்பத்தைச் சார்ந்தவரல்ல அவருடைய பாட்டனார் ஒரு சாதாரண உழவர். சிவாஜி எவ்வளவு வீரராக இருந்தாலும் அவர் சூத்திரர். எனவே சத்திரியரல்லாத சூத்திரர் அரசராக வேண்டுமானால் சூத்திரர் சத்திரியர் ஆக்கப்படவேண்டும். அப்படி ஆக்கப்பட்டால்தான் அரசராக முடிசூட்டப்படலாம் என்பது இந்துமதக் கோட்பாடு.

✪ எதிரியை வென்றால் மட்டும் போதாது ஆரியரின் தயவையும் பெற்றால்தான் முடிசூட்டமுடியும் என்ற நிலை வந்ததால் சிவாஜி நான்குவேதம் ஆறுசாஸ்திரங்கள் கற்ற

காசிநகர் காகபட்டரை அணுகி
அவருக்கு 7000 நாணயங்கள் கொடுக்க
ஸ்ரீராமச்சந்திரர் தோன்றிய ஆரிய குலத்து
வழிவந்த சத்திரியர் சிவாஜி எனக்
கருணையுடன் காகப்பட்டர் அறிவித்தார்.

- அதோடு முடியவில்லை ஆரியர் சூழ்ச்சி
அவர் முடிசூட்ட 'திவ்ய ஸ்தல யாத்திரை' செய்யவேண்டும்.
அதற்காக பிராமணர்க்குத் தானம் செய்யவேண்டும்.
அவர்களுக்கு உணவூட்டவேண்டும் என்றனர்.
அதன்படி ராஜகிரிக்கு 11000 பிராமணர் அழைக்கப்பட்டு
நான்கு மாதங்கள் அறுசுவை உணவு கொடுக்கப்பட்டு
தானங்களும் வழங்கப்பட்டன.

  - அதனைத் தொடர்ந்து 1674ஆம் ஆண்டு மே மாதம்
  சத்திரியராகப் பிறக்காத தோசத்திற்கான
  பாவ நிவர்த்திசெய்ய 'பூசை புனஸ்காராதிகள்'
  செய்து காகபட்டர் சிவாஜி மார்பில் பூணூல் பூட்டினார்.
  'காயத்திரி' கற்றுக்கொடுக்கப்பட்டு
  வேதமந்திரம் கூறி முடிசூட்டப்பட்டது.

- மறுதினம் தெரிந்தோ தெரியாமலோ
அதுவரை அவர்செய்த பாவம் நீங்க
அவரது எடைக்கு எடை தங்கம், வெள்ளி
முதலிய உலோகங்களையும் -
பட்டு, பட்டாடை, உண்டி, நாட்டுச்சாராயம்
ஆகியவற்றைப் பிராமணருக்குத் தானம் செய்யச்
சொன்னார்கள். சிவாஜியும் செய்தார்.
அப்படியும் அவர்களின் ஆசை அடங்கவில்லை.

  - மேலும் அவர் போரில் பசு, குழந்தை,
  பெண், பார்பனர் போன்றோரைக்கொலைசெய்த
  பாவத்துக்காக தட்சிணைக் கொடுத்து
  ஆரியரைச் சரிகட்ட செலவு செய்த பணம்
  அன்று ஒரு கோடியே 47 இலட்சம் மராட்டிய நாணயம்.
  இவ்வாறு சிவாஜியின் பாவம் துடைக்கப்பட்டதோ
  துடைக்கப்படவில்லையோ தெரியாது
  ஆனால் சிவாஜியின் கஜானா மட்டும் துடைக்கப்பட்டது உண்மை.

✪ இப்படித்தான் அன்றும் இன்றும்
சடங்கு சம்பிரதாயங்களையும் -
பாவபரிகார தோசங்களையும் -
விழா விருந்துக்களையும் சொல்லி
சூத்திரர் கைப்பணத்தையும் பைபணத்தையும்
பறித்து அவர்களை ஓட்டாண்டி ஆக்குகின்றனர்.

✪ இதற்காக திராவிட இந்துக்களைக் கூட்டி
மதஉணர்வுகளைத் தூண்டி
மாற்று மதத்தினர் மனம் நோகும்படி
பேசுவதும் - அவர்களைத் துன்பப்படுத்தவைப்பதும்
அவர்கள் வழிபாட்டுத் தலங்களை அழிக்க வைப்பதும்
இவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது.

✪ இவர்களின் இச்செயல்களால்
ஏற்பட்ட கலவரங்களால்
இதுவரையிலும் எந்த ஆரிய இந்துக்களின்
சொத்துக்களுக்கோ உயிர்களுக்கோ
இழப்பு ஏற்பட்டிருக்கிறதா?
அத்தனை இழப்புக்களும் - உயிர்சேதங்களும்
திராவிட இனத்தவருக்கே.
அதனால்தான் இதனைப்பார்த்து
மனம் நொந்தக் கவிஞன்

✪ "பக்தியைக் காட்டினால்
பரமன் மகிழ்வான்
நீங்களோ உங்கள் சக்தியைக் காட்டுகிறீர்கள்
ஆண்டவன் சங்கடப்படுகிறான்".

✪ "தீபங்களே!
நீங்கள்
தெரிந்துகொள்ளுங்கள்
திரிகள் மட்டுமே
கருகிக்கொண்டிருக்கின்றன
தூண்டுகோல்கள்
சுகமாகத் தூங்குகின்றன"
என்று இழப்பின்றி சுகமாகத் தூங்கும்
ஆரிய இந்துக்களைச் சுட்டிக்காட்டி
தீபங்களாகிய திராவிட இந்துக்களே
கருகியதுபோதும் இனியும் கருகாதீர்கள் என்கிறார்.

7 திரைமறைவு தீவிரவாதம்

ஒரு தனி மனிதனோ-
குழுவோ - கூட்டமோ -
இயக்கமோ - நாடோ -
தனியாகவோ கூட்டாகவோ
தங்கள் எண்ணத்தைக்
கொள்கையைக் கோட்பாட்டை
சாதிக்க - நிலைநாட்டும் பொருட்டு
இன்னொரு தனிமனிதன் மீதோ -
குழுவின்மீதோ - கூட்டத்தின் மீதோ -
இயக்கத்தின் மீதோ - நாட்டின் மீதோ -
மனிதநேயமற்ற முறையில்
மேற்கொள்ளும் அனைத்து
செயல்பாடுகளும் தீவிரவாதங்களே!

- இப்படிப்பட்ட மனித நேயத்துக்கு
முரண்பாடாகச் செயல்படுபவர்கள்
நமக்குப் பிடிக்காதவர்களாக இருந்தால்
அவர்கள் செயல்களைத் 'தீவிரவாதம்' என்கிறோம்
அவர்கள் நம்மவராக நமக்கு வேண்டியவராக
இருந்தால் அவர்கள் செயல்கள்
'தேசப்பற்று செயல்கள்' "தியாகச் செயல்கள்"
என்று புகழாரம் சூட்டப்படும்போதுதான்
தீவிரவாதம் வளர்த்தப்படுகிறது.
தீவிரவாதிகள் உருவாக்கப்படுகிறார்கள்.

- வன்முறையும் - தீவிரவாதமும்
ஒன்றுபோல் தோன்றினாலும்
இரண்டுக்கும் பெரும் வேறுபாடு உண்டு

வன்முறை என்பது திடீர் உணர்வுகள் மேலிட
அதனைச் சாதிக்க வலுக்கட்டாயப்படுத்தி
மேற்கொள்ளும் செயல்பாடுகள்.
தீவிரவாதம் என்பது எண்ணங்களைக்
கொள்கைகளைச் சாதிக்க திட்டமிட்டு
தொடர்ந்து செய்யும் மனிதநேயமற்ற செயல்கள்

- மக்களைப் பாதிக்கும் அன்றாடப் பிரச்சனைகளாலும்
  அரசின் தவறான கொள்கை முடிவுகளாலும்
  அணுகுமுறைகளாலும் - சார்பு நிலையாலும்
  ஜனநாயக அடக்குமுறைகளாலும்
  பாதிக்கப்படுவோர் வெகுண்டெழுந்து
  வன்முறையில் பெரும்பாலும் ஈடுபடுகின்றனர்.

- அதுபோல்
  தாங்கள் வாழும் ஜனநாயக நாட்டில்
  தங்கள் உரிமை இழக்கும்போது -
  தாங்கள் ஒடுக்கவும் ஒதுக்கவும் படுகிறோம் என உணரும்போது -
  தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட நினைக்கும்போது -
  ஜனநாயகத்தில்நம்பிக்கை இழந்து
  தீவிரவாதத்தினைத் தங்கள் வழிமுறையாக ஏற்கின்றனர்.

- இன்று இப்படிப்பட்ட நடைமுறைகளும்
  செயல்பாடுகளும் தனிமனிதர்கள் -
  குழுக்கள் - கூட்டங்கள் - இயக்கங்கள் -
  ஆகியவற்றிடமும் - ஆட்சியாளர்களிடமும்
  நாடுகளிடையேயும் - நாட்டுத் தலைவர்களிடையேயும்
  இருப்பதால் தீவிரவாதத்தை ஒழிக்கமுடிவதில்லை.

- சுருங்கச் சொன்னால்
  மதஉணர்வை - இனஉணர்வை -
  கொள்கை உணர்வை - மொழியுணர்வை -
  பேச்சால் - எழுத்தால் ஒருவனுக்கோ
  ஒரு குழுவுக்கோ பயிற்சி வழிஊட்டி
  அதனைச் சாதிக்க தீவிரவாதியாய்
  செயல்பட்டால் தவறில்லை -
  அதற்காக உயிரிழப்பது தியாகம் -
  இதையே இறைவன் அல்லது தலைவன் விரும்புகிறார்
  எனச்சொல்லி வெறியூட்டி ஈடுபடுத்துகின்றனர்.

✪ இப்படி எவனொருவன் தன்பேச்சால்
தீவிரவாத உணர்வு ஊட்டுகிறானோ
அவன் தீவிரவாத பேச்சாளன்
எழுத்தால் இவ்வுணர்வை ஊட்டுபவன்
தீவிரவாத எழுத்தாளன்.
இந்த உணர்வுகளோடு தீவிரவாத
செயல்களில் ஈடுபடும்போது
அவன் தீவிரவாதி ஆகிறான்
அவன் சேர்ந்துள்ள குழு தீவிரவாத குழு ஆகிறது.

✪ அதே வேளையில் தீவிரவாத செயல்புரிந்தாலும்
இக்குழுக்கள் அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும்
வேண்டியதென்றால் தீவிரவாத குழுக்களல்ல.
இக்குழுக்கள் அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும்
வேண்டாதவரென்றால் தீவிரவாத குழுக்களாகிவிடும்.

✪ இதுதானே இன்றைய
இந்தியாவிலும் நடைபெறுகிறது
மதத்தீவிரவாதம் ஒருசில
இந்துக்களிடமும் இந்து அமைப்புகளிடமும்
ஒருசில முஸ்லீம்களிடமும் முஸ்லீம் அமைப்புகளிடமும்
இருப்பது உண்மை.

✪ இருசாராரும் தீவிரவாத
செயல்பாடுகளில் ஈடுபட்டு
அப்பாவி மக்களைக் கொன்று
அவர்கள் உடைமைகளை அழிக்கின்றனர்.
ஆனால் முஸ்லீம்களையும் முஸ்லீம் அமைப்புகளையும்
தீவிரவாதிகள் என்று சித்தரிக்கும் அரசு
தீவிரவாத பேச்சையும் செயலையும்
செய்துவரும் இந்துக்களையும் இந்து அமைப்புகளையும்
தீவிரவாதிகள் என எடுத்துரைக்கத் தயங்குகின்றது.

✪ முஸ்லீம் தீவிரவாதிகளை
முஸ்லீம் அமைப்புகள் 'உரிமைப்போராளிகள்'
எனப் போற்றி பாதுகாப்பதுபோல்
இந்துத் தீவிரவாதிகள் செய்யும்
தீவிரவாதச் செயல்களை நியாயப்படுத்தி
அவர்களைத் "தேசபக்தர்கள்" எனப்போற்றி
பாதுகாக்கின்றது ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப. அமைப்புகள்.

- இந்த மதத்தீவிரவாத அமைப்புகள்
  இந்துக்களே திரண்டுவாருங்கள் என்றோ
  முஸ்லீம்களே திரண்டுவாருங்கள் என்றோ
  முழுக்கமிடுவதையும்
  கூட்டம் சேர்ப்பதையும் நிறுத்திவிட்டு
  என்று, மனிதர்களே! இணைந்து வாருங்கள் என முழங்கி
  மானிடத்தை மகத்துவப் படுத்தத் துணிகிறார்களோ
  அன்றே தீவிரவாதம் திசை தெரியாது போகும்.

  - பக்தியைக் காட்டி கட்டவேண்டிய
    பரமனின் ஆலயங்களும் -
    பள்ளிவாசல்களும் -
    பாமர மக்களின் கண்ணீரும்
    செந்நீரும் வடிந்தோட
    சக்தியைக்காட்டி கட்டப்படும்போது
    அங்கே ஆண்டவர் இருக்கமாட்டார்.
    ஏனெனில் மதவெறிவாளால் தன் மக்களைக்
    கொன்றொழிப்பதைப் பார்த்து பதைபதைத்து
    ஆண்டவர் அவ்விடம்விட்டு அகன்றோடிவிடுவார்.

- ஒரு மதத்தைச் சார்ந்த ஒரு சிலரோ
  ஒருசில அமைப்புகளோ தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற
  தீவிரவாதத்தைக் கையிலெடுத்திருக்கலாம்.
  அதற்காக அம்மதமும் அம்மதத்தைச் சார்ந்த அனைவரும்
  தீவிரவாதிகள் என்று முத்திரைக்குத்துவது முட்டாள்தனம்.

  - காஷ்மீரில் பத்து பதினைந்து இந்து சகோதரர்களை
    வீட்டுக்குள் சென்று கொன்றதை
    முஸ்லீம் தீவிரவாதசெயல் என்று
    முழக்கமிடும் அரசும் அதன் தலைவர்களும்
    குஜராத்தில் பூட்டியிருந்த கன்னியர்
    மடத்தினுள் சென்று கன்னியரைக் கற்பழித்ததையும் -
    1999 ஜனவரி 26 அதிகாலையில்
    ஹிரகாம் பெல்லையும் அவருடைய
    எட்டுவயது திமோத்தி
    பத்துவயது பிலிப்பு
    என்ற பச்சிளங்குழந்தைகளையும்
    உயிரோடு தீயிட்டுக் கொழுத்தியதையும் -
    ‘குஜராத்தில்’ பெஸ்ட் பேக்கறி-க்குள்

14 பேரை உயிருடன் போட்டு எரித்ததையும்
தீவிரவாத செயல் எனச்சொல்லாத
அரசையும் அதன் தலைவர்களையும் என்ன சொல்வது?

- கோத்திரா இரயில் நிலையத்தில்
பொருள்விற்று பிழைத்துக்கொண்டிருந்த
ஏழை முஸ்லீம்களிடம் பொருட்களை வாங்கிவிட்டு
காசு கொடுக்காது சென்ற ஒரு சில கரசேவகர்களைத்
தட்டிக்கேட்டு ஏற்பட்ட கலவரத்தால்
இரயில் பெட்டி கொழுத்தப்பட்டு அப்பாவிகள் பலர்
உயிரோடு எரிக்கப்பட்டனர். இது கண்டிக்கப்படவேண்டிய
மனிதநேயமற்ற மிருகச்செயல்தான்.
இதனைத் தீவிரவாதம் - தீவிரவாதிகள் செயல்
எனக்கூக்குரல் இடும் அரசும் அரசியல்வாதிகளும்
அதைத் தொடர்ந்து ஏதும் அறியாத அப்பாவி முஸ்லீம் மக்களைத்
தீயிலிட்டுக் கொழுத்தியதோடு, கற்பிணிப் பெண்ணின் வயிற்றைக்
கத்தியால் கீறி குழந்தையை எடுத்து தாயெதிரிலேயே
தீயிட்டுக் கொழுத்தியது போன்ற நூற்றுக்கு மேற்பட்ட
செயல்களை முன்னின்று நடத்திய
இந்துவெறி அமைப்புக்களைத் தீவிரவாத அமைப்புகளென்றோ
அவ்வமைப்பினரைத் தீவிரவாதிகள் என்றோ
சொல்லாத அரசையும் அரசியல்வாதிகளையும் என்ன சொல்வது?

  - இப்படியே ஒரே மாதிரிசெயலை
  ஒருவர் செய்தால் தீவிரவாதம் என்றும்
  இன்னொருவர் செய்தால் தீவிரவாதம் அல்லவென்றும்
  சொல்லி சார்பு அரசியல் நடத்திடும்
  அரசியல்வாதிகளால் தீவிரவாதம் வளருமேதவிர
  தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது.

- அதுபோல் இன்று
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்
தீவிரவாதம் வளர்ந்துவரக் காரணம்
நம்மை ஆளும் அரசுகளின் அணுகுமுறைகளும்
அவற்றின்பொருளாதார நெறிமுறைகளுமே.
உலகமயமாக்கல் -
தாராளமயமாக்கல் -
தனியார் மயமாக்கல் -
என்ற கொள்கைகளுக்குள் நம்மையும்
நம் நாட்டையும் அடகுவைத்துவிட்டனர்.

- இக்கொள்கைகள்
  நம்நாட்டு இளைஞர்களிடையே
  வேலைவாய்ப்பின்மையை அதிகப்படுத்திவிட்டது.
  இந்தவேலைவாய்ப்பின்மையைப் பயன்படுத்தி
  தீவிரவாத இயக்கங்கள் படித்த இளைஞர்களைத்
  தங்கள் வசம் இழுத்து மூளைச்சலவை செய்து
  கைநிறைய காசைக்கொடுத்து
  தங்கள் தீவிரவாதச் செயல்களினால் அவர்களைக்
  கைக்கூலிகளாகப் பயன்படுத்துகின்றனர்.

- உலகமயமாக்கலால் -
  இந்தியா உலக நாடுகளின் சந்தையாகிவிட்டது.
  தாராளமயமாக்கலால் -
  இந்தியத் தொழில்கள் அழியத் தொடங்கிவிட்டன.
  தனியார் மயமாக்கலால் -
  அரசுடமை தொழில்கள் அழிக்கப்பட்டு
  தனியுடமைத் தொழில்கள் வளர்க்கப்படுகின்றன.
  இவற்றால் வேலைவாய்ப்புகள் குறைகின்றன
  குறைவாக ஏற்படும் வேலைவாய்ப்புகளும்
  குறிப்பிட்டவரையே போய் சேருகிறது.

  - படிப்பும் வேலையும்
    பணமில்லாதோர்க்கு இல்லை என்றநிலை
    இந்திய மண்ணில் உருவாகியுள்ளது.
    14 வயது வரையினருக்கு
    கல்வி அடிப்படை உரிமை என்ற
    அரசியல் நிர்ணயச் சட்டம்
    காகிதப் புலியாய்த் தூங்குகிறது.

- ஆளும் அரசியல் வாதிகளின்
  கைகளும் பைகளும் நிறைந்திட
  இலாபத்தில் செயல்பட்டுவரும்
  அரசுடைமை தொழிற்சாலைகளை
  மாற்றான் மடியில் தாரைவார்த்திட
  பேரப் பேச்சுகள் தொடங்கிவிட்டன.

  - இந்திய நிறுவனங்களின் 75% பங்குகளை
    அந்திய நேரடி முதலீட்டாளர்களும் -
    இந்திய நிறுவனங்களும் -

100% பங்குகளை வெளிநாடுகளில்
வாழும் இந்தியர்களும் -
எந்தவித அனுமதியுமின்றி வாங்கிட
அனுமதி அளித்துவரும் மத்திய அரசு
நமது நாட்டின் அனைத்து துறைகளிலும்
அந்நிய முதலீடு ஊடுருவல்கள் நடைபெற ஏற்பாடுகள்
செய்து வருகின்றது.

✪ இதனால் இந்தியத் தொழில்கள்
நாசமாவதுடன் நமது செல்வ ஆதாரங்கள்
அந்நியர் கைக்குப் போய்விடும்
இயற்கனவே
இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் –
ஜெனரல் மோட்டார்ஸ் என்ற
அமெரிக்க நிறுவனத்துக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளது.
மகேந்திரா நிறுவனங்கள் -
அமெரிக்க போர்டு நிறுவனங்களின்
கைகளுக்குக் கைமாறிவிட்டன.
டாட்டாவின் டாம்கோ –
யூனிலெவர் வசமாக்கப்பட்டுள்ளது.
பர்லே – கோகோ கோலாவுக்கு
உரிமையாகிவிட்டது.

✪ இப்படியே இன்று இந்தியாவில்
1500 வெளிநாட்டுக் கம்பெனிகள்
75% நுகர்வு பொருள் சந்தையை
ஆக்கிரமித்துள்ளன.
நம்நாட்டு 70% மருந்துப் பொருட்களின்
உற்பத்திகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
வெளிநாட்டுக்கம்பெனிகள் 95%
தேவையற்ற மருந்துகளை
உற்பத்திசெய்கின்றன.
இவற்றிற்கு ஒரே காரணம் இலாப நோக்கமே.

✪ எனவேதான் கவிஞன் ஒருவன்
“வியாபாரம் செய்யவந்த வெள்ளையன்
நாட்டை ஆண்டான்
ஆனால் நடாளச் சென்ற நம்மவர்
வியாபாரம் செய்கின்றனர்” என்றான்

- ✪ இப்படிப்பட்ட பி.ஜே.பி. கூட்டணி அரசின் அணுகுமுறைகளால் - தெளிவற்ற - திட்டமில்லா பொருளாதாரத் திட்டங்களால் - சார்பான அரசியல் செயல்பாடுகளால் - வேலையின்மையும் விரக்தியும் கொண்டவர் தீவிர அமைப்புகளைத் தொடங்கவும் - தீவிரவாதிகளுமாய் செயல்படவும் செய்கின்றனர்.

- ✪ பி.ஜே.பி. கூட்டணி அரசின் அணுகுமுறைகள் மறைமுகமாக தீவிரவாதத்தை உருவாக்க வழிவகுப்பதுபோல் இதன்தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.இன் செயல்பாடுகள் தீவிரவாதம் என்று சொல்ல முடியாத அளவுக்கு அவற்றின் நடைமுறைகள் அமைந்துள்ளதாக கூறும் 'செக்யூலர் டெமாகிரசி' என்ற பத்திரிகையின் 1974 ஜனவரி இதழும் - அகமதாபாத், குஜராத் கலவரங்களை ஆய்ந்த ஜெகன் மோகன் ரெட்டி கமிஷனும் - 4 காரணங்களைக் கூறியுள்ளன.

  அவையாவன

  * தீவிரவாத செயல்களுக்குரிய சூழலை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பவர் ஆர்.எஸ்.எஸ்.காரர்களே.

  * இவர்களுக்கென உறுப்பினர் பதிவேடுகள் ஏதும் இல்லாததால் எந்தத் தீவிரவாத செயலும் இவர்கள்தான் செய்தனர் என்று சொல்ல சட்டபூர்வமான ஆதாரங்கள் இல்லாமல் போய்விடுகின்றன.

  * ஆர்.எஸ்.எஸ். தன் துணை அமைப்புகள் மூலமோ – இதற்காக அந்தந்த நேரங்களில் புதுப்புது பெயர்களில் புதுபுது அமைப்புகளை உருவாக்கி தீவிரவாத செயல்களைச் செய்கின்றன. (எடு)'இந்து தர்மராக்ஷா' – என்ற அமைப்பைத் தொடங்கி அகமதா பாத்திலும் – 'ராஷ்டிரிய உத்சவமண்டலம்' – என்ற புது அமைப்புவழி மராட்டிய மாநிலத்திலும் – 'ஸ்ரீராம்தாரூன் மண்டல்' – என்ற அமைப்புமூலம் மராட்டியமாநில ஜாஸ்கோவனிலும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

* இறுதியாக தீவிரவாத செயல்கள் செய்யும் இவ்வமைப்புகள் தீர்மானங்கள் எடுக்கவோ சுற்றறிக்கைகள் அனுப்பவோ செய்யாது.

✪ மேற்படிக் காரணங்களால்
ஆர்.எஸ்.எஸ்.கூட்டம்
விசாரணைக் கமிஷன்களால்
தங்கள் நேரடித் தொடர்பை
வெளிப்படுத்த முடியாதபடி மறைத்து விடுகின்றன.

✪ ஆனால் தீவிரவாத செயல்கள் நடந்த
பகுதிகளைப் பார்வையிட்டு
செய்திகளைச் சேகரித்த ஏடுகள் - குழுக்கள்
தந்த அறிக்கைகள் இவர்களின் சுயரூபத்தை
வெளிப்படுத்துகின்றன.
அவைகளில் சிலவே மேற்கூறியவை.

✪ இதே பாணியைப் பின்பற்றியே
1980 ஆகஸ்டு 13-இல் உ.பி., மொரதாபாத்திலும்
1981 ஏப்ரல் 30-இல் பீகாரில் 'செரிப்' என்ற ஊரில்
1997 முதல் இன்றுவரை பீகார், குஜராத், உ.பி.
மகாராஷ்டிரம் - கர்னாடகம் போன்ற இடங்களிலும்
உயிர்களைப் பறித்தும் - உடமைகளை அழித்தும் -
தங்கள் தீவிரவாத செயல்களை ஒரு தொடர்கதையாய்
செய்து வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ்.ம் அதன் துணை அமைப்புகளும்

✪ இவர்களைப் பின்பற்றியே
முஸ்லீம்களும் பலப்பல அமைப்புகள் பெயரில்
இடத்துக்கிடம் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.
ஆனால் பி.ஜே.பி. கூட்டணி அரசோ
ஆர்.எஸ்.எஸ்.இன் தீவிரவாதத்தை மறைத்து நியாயப்படுத்தி
முஸ்லீம் தீவிரவாதத்தை மட்டும் விளம்பரப்படுத்தி
வெறுப்பேற்றி அரசியல் இலாபம் பெறுகின்றது.

✪ தீவிரவாதம் மனித சமூகத்தின்
மன அமைதியையும் - மனிதநேயத்தையும் அழித்து
அப்பாவி மனித உயிர்களையும் உடமைகளையும் உருக்குலைக்கிறது.
இத்தகையோர் இந்து வாயினும் - முஸ்லீம்மாயினும் -
வேறு எந்த மதத்தவராயினும் - அமைப்பினுனராயினும்
மொத்தத்தில் "தீவிரவாதிகளே" -
இத்தகையோரை ஆதரிப்போரும்
ஆதரித்து பேசுவோரும் தீவிரவாதிகளே!

8 புதிய பாசிஸ்டுகள்

2003 ஏப்ரல் 16 அன்று
துவாரகா சாரதா பீடசங்கராச்சாரியர்
ராஜ்ராஜேஸ்வரானந்தா சுவாமிகள்
டில்லியில் நிருபர்கள் கூட்டமொன்றில்
"இந்தியா சந்திக்கும் அனைத்து
பிரச்சனைகளுக்கும் தீர்வுகாணவேண்டுமானால்
சிறுபான்மை முஸ்லீம்கள் – கிறிஸ்தவர்களுக்கு
வழங்கப்பட்டுள்ள வாக்குரிமைகளைப்
பறித்தால்போதும்" என்றார் (தினகரன் 17 ஏப். 2003)
இந்தப் பேச்சு பாசிச எண்ணத்தின் பிரதிபலிப்பே.

- "தேசிய வெறிபிடித்த
  ஏகாதிபத்திய வாதிகளான
  நிதி மூலதன சக்தியின்
  அப்பட்டமான – கொடூரமான
  சர்வாதிகரந்தான் பாசிசம்"
  இந்தப் பாசிசம் ஒவ்வொரு நாட்டிலும்
  அந்தந்த நாட்டின் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி
  மொழி - இனம் - மதம் - தேசியம்
  போன்றவற்றின் வெறியைத் தூண்டிவிட்டு
  தன்னை வளர்த்துக்கொள்ளும்.

- பாசிசமும் அதனுடைய மாற்றுவடிவங்களும்
  வர்க்க ஆதிக்கங்களே.
  இந்த ஆதிக்கவாதிகள் முதலாளித்துவ
  பிரிவுகளுக்கிடையில் நடைபெறும்
  மோதல்களுக்கிடையில் வளரவும் செய்யும்
  ஆட்சியைப் பிடிக்கவும் செய்யும்.

- இப்பாசிசம்
  மக்களைக் கவருவதற்காக பல்வேறு
  கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைக் கொடுக்கும்
  ஊழலுக்கும் - இலஞ்சத்துக்கும் எதிராக
  உரக்கப் பேசும். அதே வேளையில்
  மக்களிடமிருக்கும் உணர்வுகளைத் தூண்டிவிடும்.
  வித்தியாசமான ஆட்சி - நேர்மையான ஆட்சி
  தருவதாகத் தம்பட்டம் அடித்து மக்களைக் கவரும்.

- அதிகாரத்தைக் கைப்பற்றியதும்
  அதுதன் கோரமுகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் காட்டும்.
  நாட்டுப்பற்று - தேசியம் எனப்பேசிக்கொண்டே
  நாட்டை அடுத்தவருக்கு விலைபேசும் -
  கொள்ளை அடிக்கும் - கொலை செய்யும் -
  எதிர்ப்புக்களையும் எதிர்ப்பாளர்களையும் நசுக்கும் -
  சுருங்கச் சொன்னால் பாசிசமென்பது
  அதிகாரமுள்ள கொலைகாரக் கும்பல்.

- ஆரிய கிட்லர் செர்மனியை ஆரியரிடம் காட்டி
  "இந்தக் கட்டிடங்களும் அதற்கான திட்டங்களும்
  தீர்மானித்தவர்கள் ஆரியர்களே!" என்று தனது
  'மெயின் கேம்ப்' (Mein Kampf) நூலில் கூறியுள்ளார்.
  அந்த ஆரிய கிட்லரைப் பின்பற்றி
  இந்த ஆரிய கோல்வார்க்கரும் தனது
  'பஞ் ஆப் தாட்ஸ்' என்ற புத்தகத்தில்
  "நாம் நல்லவர்கள்; அறிவாளிகள்;
  இயற்கையின் விதிகளை அறிந்தவர்கள்;
  ஆன்மாவின் விதிகளை அறிந்தவரும் நாமே;
  மனிதனுக்கு எவைஎவை நன்மைபயக்குமோ
  அவை எல்லாவற்றையும் மனித சமூகம் நன்மைபெறக்
  கொண்டுவந்தவர்களும் நாமே.
  அப்போது மற்றவர்களெல்லாம் இரண்டு கால் பிராணிகளாய்
  அறிவற்றவர்களாய் இருந்தார்கள்.
  சில நேரங்களில் நமது மக்களை
  மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திகாட்ட
  நாம் ஆரியர் – அதாவது அறிவாளிகள்
  என அழைக்கப்பட்டோம்.
  நம்மைத் தவிர மற்றவரெல்லாம் மிலேச்சர்கள்" என்று
  கிட்லரைப்போல் பச்சையாக ஆரிய பெருமை பேசும்
  கோல்வாக்கர் பாசிச வாதியல்லாது யாராக இருக்க முடியும்?

✪ அன்று தன் பாசிச உணர்வை வலுப்படுத்த
கிட்லரின் நாசிசகட்சி
"தன் தேசிய இனமும் – தன் தேசமும்
உலகப் போரில் தோல்வியடையக் காரணம்
நம் தேசத்து யூதர்களும் கம்யூனிஸ்டுகளும்
முதுகில் குத்தியதுதான்" என்று பிரச்சாரம் செய்தது.
அதனைப் போன்றே இன்று ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரும்
தங்கள் எதிரிகளாக சிறுபான்மையினர்,
கம்யூனிஸ்டுகள், தாழ்த்தப்பட்டோர் ஆகிய மூவரையும்
அடையாளம் காட்டி அழிக்கின்றனர்

✪ செர்மனியில் நாசிசகட்சி எப்படியெல்லாம்
அந்த நாட்டுத் தலைவர்களையும்
60 இலட்சம் யூதர்களையும் கொன்று குவித்ததோ
அந்த வெறியாட்டத்தைப் பின்பற்றி
இந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்களும் செயல்படுகின்றன.

✪ 1976 நவம்பர் 7ஆம் நாள்
தமிழர்கள் இதயமெல்லாம் ஒருகணம் நின்று
மறுகணம் ஒலித்தது. காரணம்
தென்னாட்டைச் சார்ந்த பார்ப்பனரல்லாத
பச்சைத்தமிழன் காமராஜர்
அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவராய்
பொறுப்பேற்றதைப் பொறுக்காத இந்த
ஆர்.எஸ்.எஸ். கும்பல் 25 மதல் 30 பேர்
டில்லி 'ஜந்தர் மந்தர்' ரோட்டிலுள்ள காமராஜர் இல்லத்தை அடைந்து
காவலாளிகளை அடித்துக் கீழேதள்ளி
வீட்டிலுள் சென்று அறை அறையாகப் புகுந்து
பெட்ரோல் விட்டு தீவைத்துக்கொழுத்தினர்.
காமராஜரோ தூங்கிக் கொண்டிருந்தார்.
அவரை வேலைக்காரன் எழுப்பி விடுதிக்கு
அழைத்துச் சென்றதால் உயிர் தப்பினார்" என்று
இந்நிகழ்வுபற்றி 12-11-76 அன்று
'லிங்க்' ஏடு செய்தி வெளியிட்டது.

✪ அதுபோல் அம்பேத்காரைக் கொல்ல பலமுறை
முயன்று தோற்றிருக்கிறது இக்கூட்டம்
"தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவு போராட்டம்"
நடத்தியபோது சதிதிட்டம் தீட்டப்பட்டதாக

டி.எ. காட்டி (D.A. Katti) 2-2-80இல்
பெங்களூர் அம்பேத்கார் கல்லூரியில்
நடைபெற்ற கருத்தரங்கில் இதை தெரிவித்துள்ளார்.
மேலும் இவர்கள் அம்பேத்காரின் சமயல்காரருக்கு
இலஞ்சம் கொடுத்து அம்பேத்காரைக்
கொலை செய்ய முயன்றதாக 'மராத்தா' என்ற
மராட்டிய நாளேட்டின் ஆசிரியர் பி.கே. அட்ரி
என்பவர் எழுதியுள்ளார்.

✪ காந்தியின் உதவியாளராக இருந்து
காந்தியின் வாழ்க்கை சரித்திரம் எழுதிய
பியாரிலால் என்பவர் தன் நூலில் ஆர்.எஸ்.எஸ். தலைவர்
"அன்று காங்கிரஸ் கட்சியின் முன்னணியில் இருந்த
அனேகத் தலைவர்களின் படங்களைத்
தங்கள் பூட்ஸ் காலுகளுக்குள் மறைத்து வைத்து
அவ்வப்போது அவற்றை வெளியே எடுத்து
அப்படங்களைச் சுட்டுத் தங்கள் வெறியை
அடக்கிக்கொள்வர்" என எழுதியுள்ளார்.

✪ பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் கர்ப்பூரிதாகூர்
இவர் முடிதிருத்தும் சமுதாயத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்து
மாநில முதலமைச்சரானவர்
தான் கொடுத்தத் தேர்தல் வாக்குறுதிபடி
பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்ததைப்
பொறுக்காத இந்த இயக்கம்
இவரைத் தீர்த்துக்கட்ட
1979ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று
கல்கத்தாவுக்கு மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள
சென்றுகொண்டிருந்த வழியில்
முதலமைச்சர் காரை வழிமறித்து
கல்லால் அடித்து காயப்படுத்தினர்.
அதிஸ்டவசமாக உயிர்தப்பினார்.
இது சம்மந்தமாக கைது செய்யப்பட்ட 7 பேர்
அந்தப் பகுதியிலுள்ள தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்
என 28-10-79 சன்டே பத்திரிகைச்
செய்தி கூறுகிறது.

✪ இந்தப் பாசிச உணர்வுடையவர்களாகிய
இவர்களின் அன்றைய அரசியல்வடிவம்
'பாரதிய ஜனசங்கம்' அதுவே இன்று
பாரதிய ஜனதா கட்சி என்ற புதிய வடிவாகியுள்ளது.
அன்று அவர்கள்
"நாங்கள் ஆட்சிக்குவந்தால்
அரசியல் சட்டத்தைத் திருத்தி
கூட்டாட்சி முறையை ஒழித்து
இந்தியா ஒரே நாடு எனப்
பிரகடனப்படுத்துவோம்" என்று தங்கள்
1951, 1957 ஆகிய இரண்டு தேர்தல்
அறிக்கைகளிலும் கூறியுள்ளனர் (பக். 7)
அதோடு அவர்கள் வெளியிட்டுள்ள
ஒரு நூலில் (Its Cult) தனிமானிலங்கள் கூடாது.
மத்திய ஆட்சி மட்டுமே இருக்கவேண்டும்
என்று கூறியுள்ளனர்.
இவை அவர்களது பாசிச உணர்வின் வெளிப்பாடான
ஒரே ஆட்சி - ஒரே நாடு கொள்கை.

✪ இதுபோல் அவர்கள் 'ஒரேமொழி'
கொள்கை எப்படிப்பட்டது எனப் பாருங்கள்
"இந்தியமொழிப் பிரச்சனைத் தீர
ஒரேவழிதான் உண்டு
சமஸ்கிருதம் ஆட்சிமொழி ஆகவேண்டும்.
அதுவரை இந்தியவுக்கே முன்னுரிமை கொடுத்து
வசதியாக சமஸ்கிருதத்தை
ஆட்சிமொழியாக்க வேண்டும்" - என்று
'எண்ணக்குவியல்' (Bunch of thoughts)
என்ற புத்தகத்தில் அதிகாரம் 8 பக்கம் 113-இல்
கூறியுள்ளார் கோல்வார்க்கர்

✪ அதே நூலில் மேலும்
"சிலர் நீண்ட காலமாக சாதி அமைப்புமுறையினை
எதிர்த்துக்கொண்டே வருகின்றனர்.
பழக்கத்தில் சாதி அமைப்பு முறை இருந்தது.
நாம் அதன் உச்சியில் இருந்தோம்.
ஆனால் இந்த சாதி அமைப்புமுறை
நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தது

என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது
உண்மையில் இந்த சாதி அமைப்பு சமூகத்தில்
ஒற்றுமையைக் காக்கவே உதவுகிறது" - எனக்கூறி
சாதி அமைப்பையும் அவ்வமைப்பின் மூலம்
தங்கள் ஆதிக்கத்தையும் தக்கவைக்கவும்
கனவு காண்பதைப் பாருங்கள்.

- அதேபோல்
  இவர்கள் வலியுறுத்தும் 'இந்து தர்மம் எது
  என்பதை கோல்வார்க்கர்
  'எதற்கு இந்து ராஷ்டிரம்' என்றதன் நூலில்,
  "இந்து தர்மம் என்பதே பார்ப்பனதர்மம்;
  வருணாசிர தம்மம்; ஆரியதர்மம்;
  சமஸ்கிருத தர்மம்" என்கிறார்.
  இதற்கெல்லாம் மேலாக ஆர்.எஸ்.எஸ்.இல்
  சேரும் ஒவ்வொருவரும் எடுக்கும் உறுதிமொழியிலேயே
  இந்து தர்மம் என்பது சமஸ்கிருத தர்மம்
  என்பதைத் தெளிவுபடுத்துகின்றனர்
  இதுதான் அவர்கள் 'ஒரேமொழி' கோஷம்.

- இதுபோல் 13-2-1979 அன்று
  உபி மாநில முன்னாள் முதலமைச்சரான
  'ராம் நரேஷ் யாதவ்' பிற்படுத்தப்பட்டவர்க்கு
  இடஒதுக்கீடு செய்ததற்காகவும் -
  ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களைத் தடைவிதித்ததற்காகவும்
  35 வயதான கஜேந்திரநாத் மிஸ்ரா
  என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரால் ஏவப்பட்டு
  நரேஷ்யாதவ் கத்தியால் குத்தப்பட்டார்.
  கடவுள் அருளால் அவர் இடுப்பில் கட்டிய
  பெல்ட்டால் அவர் உயிர் காப்பாற்றப்பட்டது.

- சோசலிசவாதியும் - ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்குச்
  சிம்மசொற்பனமுமாய் விளங்கியவரும் -
  ஜனதா கட்சியில் வகுப்புவாதம் தலைதூக்கியபோது
  கட்சியைத் தூக்கி எறிந்து வெளியேறியவருமான
  ராஜ் நாராயணன் 20-10-1979 அன்று
  ராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டா என்ற ஊரில்
  பேசிக்கொண்டிருந்தபோது ஆர்.எஸ்.எஸ். காரர்களால்
  உயிருக்கு ஆபத்தான நிலையில்

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
அக்கூட்டத்தில் இன்றைய இராணுவமந்திரியான
ஜார்ஜ் பெர்னாண்டசும் உண்டு.
இதைக் கண்டித்து அன்றைய பிரதமர் சரண்சிங்
"இக்கோழைத்தனமான தாக்குதலைக்
கண்டனம் செய்ய வார்த்தைகளே இல்லை.
இந்திய மக்களும், ஜனநாயக நாட்டிலுள்ள
ஜனநாயகவாதிகளும், நாட்டின் அரசியல் முறையைப்
பாழாக்க முற்பட்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ்.
பாசிசத்திலிருந்து அனைவரும் படிப்பினைப்
பெறவேண்டும்" என்று அறிக்கைவிட்டார்.

- இந்த அளவு பாசிச எண்ணங்கொண்டு
அன்றும் இன்றும் ஏழைகள் - மலைவாழ்மக்கள் -
தாழ்த்தப்பட்டோர் - பின்தங்கியோர் -
மேம்பாடடைய வழிமுறைகாட்டி வாழவைப்பதைப் பொறுக்காது
இந்நாள் வரை இம்மக்களின் உழைப்பை - பொருளைச்
சுரண்டி வளம் சேர்த்து வந்தவர்கள் இவர்கள்.
அம்மக்கள் மேம்பாடும் விழிப்புணர்வும்
அடைந்து வருவதைப் பொறுக்காது
அவர்கள் மேம்பாட்டுக்கு - விழிப்புணர்வுக்குக்
காரணகர்த்தாக்கள் யாரெனப் பார்த்து
அப்பணியில் ஈடுபடும் குருக்கள் - கன்னியரை - சமூகத் தொண்டரைத்
திட்டம் போட்டுத் தீர்த்துகட்டுகின்றனர்.
இவற்றிலிருந்து தப்பிக்கவும்-ஆதரவு சேர்க்கவும்
மதப் போர்வையைப் போர்த்திக்கொள்கின்றனர்.

- இவர்கள்
இலவசக்கல்விக்கும் - இடஒதுக்கீட்டுக்கும் எதிரிகள்
ஏனெனில் இந்திய மக்கள் தொகையில்
நான்கு விழுக்காடு இருந்து கொண்டு
அரசு உயர் பணிகளில் 90 விழுக்காடு
பணியிடங்களைக் காலாகாலமாக
அனுபவித்து வந்த இவர்கள் மக்கள் விகிதாரச்சாரப்படி
இடஒதுக்கீடு செய்தால் வெறும் 4 விழுக்காடு
அரசு பதவிகளைத்தானே பெறமுடியும்
அதனால் இவ்வளவு காலமும் தங்களால்
அடிமைப்படுத்தி வைக்கப்பட்டவர்

தங்களை ஆளும் பொறுப்பில் வந்துவிடுவார்களே
என்ற அச்சமும் - ஆத்திரமும்தவிர
வேறு எதாக இருக்கமுடியும்.

- எனவேதான்
இந்துத்துவ வாதிகளான ஆரிய இந்துக்கள்
ஒரேமதம் - ஒரேமொழி - ஒரேநாடு
என்ற மாயையைக் காட்டி
சிறுபான்மையினர் என்ற கோஷத்தை எழுப்பி
திராவிட இந்துக்களைப் படிக்கற்களாக்கி
தங்களுக்கு அரசியல் பலம் சேர்க்க
'இந்து' என்றபோர்வையில் வாக்குகளைப்பெற்று
ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க நினைக்கின்றனர்.
இதே வழிமுறைகளைத்தான் உலகில் உள்ள
பாசிச வாதிகளும் பின்பற்றினர்.

  - இவர்களின் அடக்குமுறை - அடிமைத்தனம் - அச்சுறுத்தல்
இம்மண்ணில் பெருவாரியாக இருந்தத் திராவிடர்களைக்
கிறிஸ்தவர்களாக - இஸ்லாமியராக - புத்தர்களாக மாற்றியது
எஞ்சியிருந்தவர்களையும் திராவிட இனத்துதித்த
சமய சமூகப் பெரியவர் காத்தனர்
இல்லை என்றால் இன்றும் நமது மூதாதையரைப்போல்
முட்டுக்குக்கீழ ஆடை உடுக்காது-
மரத்தாலி கட்டி - மார்ப்பு சீலை இன்றி -
மீசைவரி-முலைவரி போன்ற வரிகளைச் செலுத்தி
இன்றும் நமது திராவிட சகோதரர்களின் ஒரு பிரிவினர்
தனிகப்புகளில் காப்பி அருந்துவதுபோலவும் -
உயர்ந்தவர் தெருக்களில் செருப்புக்களைக்
கையில் எடுத்து நடப்பது போலவும் -
மேளதாளங்களுடன் தெருக்களைக் கடக்க முடியாதது போலவும் -
திராவிடர் அனைவரும் இன்றும் இருக்க வேண்டியதிருந்திருக்கும்.

- சட்டமும் அரசும் தங்கள் கைகளில் இருந்தும்
இந்த மனிதநேயமற்ற செயல்களை
இம்மண்ணிலிருப்பது தெரிந்தும் தடுக்கமுடியாத அரசு
எங்கே நம்மை வாழவைக்கும்?
இத்தகைய அரசுகள் இருப்பதுவரை
நம்மை பிச்சைப்பாத்திரம் ஏந்திய

பிச்சைக்காரர்களாய் நினைத்து
இலவசங்களைத் தந்து
தங்கள் ஆட்சியைத்தக்க வைப்பார்கள்.
இப்படிப்பட்டோர் இருப்பது வரை
நாடு விடுதலைபெற்றாலும் நமக்கு விலங்குகள் தான்.

✪ சோசலிசவாதிகள் ஆட்சியில்
இடஒதுக்கீடு என்ற பெயரில் அரசு பணிகள்
ஒருசில வற்றையாவது பார்த்தோம்.
அதையும் பொறுக்காத பாசிசக்கூட்டம்
ஆட்குறைப்பு என்ற பெயரிலும் -
பொருளாதார நெருக்கடி என்ற பெயரிலும் -
நமது பணியிடங்கள் பாழாக்கப்படுகின்றன.
அரசுடைமை ஆக்கப்பட்டவை
தனியாருக்குத் தாரைவார்க்கப்படுகின்றன.
எனவே இனி அரசுவேலை காலியில்லை
தனி உடைமையாக தாரைவார்க்கப்பட்ட
ஆரிய இந்துக்களின் பட்டறைகளிலும்
பங்களாக்களிலும் தான் நாம் கைகட்டி நிற்போம்.
கூழுக்கும் - குப்பைக்காய்ச்சிக்குமே வேலை காலியிருக்கும்
நமக்கும் நம் சந்ததிகளுக்கும்.

✪ வைகுண்டர்களும் - நாராயணக்குருக்களும்
"தாழக்கிடப்போரைத் தர்க்காப்பதே தர்மம்" – என்றும்
"மதம் ஏதாகிலும் மனிதன் நன்னாயிருக்கணும்" என்றும்
தாழ்ந்திருந்தோரை ஒன்றுதிரட்டி சமூக விடுதலை பெறவைத்தனர்.
ஆனால் இந்த விடுதலை உணர்வைப்புரியாத நம்மில் பலர்
'இந்துத்துவா' - 'இந்துராஷ்டிரம்' என்ற
அடிமை விலங்கை ஆசையோடு
அணியத் துடிக்கிறோம்
நாம் அணியத்துடிப்பது திராவிடகலாச்சார விலங்கல்ல
பிராமணியக் கலாச்சார விலங்கு
இது ஓர் அடிமைவிலங்கு
அன்று அகற்ற காந்தியடிகள் இருந்தார்கள்
இன்று இருப்பவர்களோ கோட்சேக்கள்
எனவே மிஞ்சுவது குண்டுகள் தான்.

- நாட்டின் குறிப்பிட்டப் பகுதிமக்களைத்
தேச விரோதிகள் எனப் பொய்பிரச்சாரம் செய்யும்
சமூக விரோதிகளையும் - கலகக்காரர்களையும்
கையிலே வைத்து கொண்டு மக்களை மிரட்டவும்
எதிர்பவர்களைக் கொலை செய்யவும் செய்யும்.

- எனவேதான் ஆன்றனியோ கிராம்சி என்பவர்
"பாசிசம் என்பது அதிகாரமுள்ள
கொலைகாரக்கூட்டம்
அதுமதம், இனம், பாரம்பரியம் போன்ற
முகமூடிகளை அணிந்துகொள்ளும்" என்றார்.

- இந்தப் பாசிஸ்டுகளுக்கு எதிர்க்க ஓர் எதிரிவேண்டும்
அந்த எதிரி தன் எல்லைக்குள் இருக்கவேண்டும்
அப்படி ஒரு எதிரியைக் காட்டினால்தான்
தனக்கும் சமூகத்துக்கும் ஏற்படும் எல்லாத்
துயருக்கும் அவ்வெதிரியே காரணம் என கைகாட்டுவர்.
அவ்வெதிரி அழிக்கப்படவேண்டும்
அவன் மழியாது நமக்கு ஈடேற்றம்இல்லை எனவும்
அவனை அழிப்பதே முதற்கடமை எனவும் கூறி
மக்களை நம்பவைப்பர்.
இதற்காக மக்களுக்கு மிகவும் அறிமுகமான
அவர்கள் கலாச்சாரத்தோடு தொடர்புடைய
சின்னங்களைக் கைப்பற்றிக்கொள்வர்.

- இந்த வழிமுறைகளைப் பயன்படுத்திதான்
1933 ஜனவரி 30-இல்
செர்மனி பாசிஸ்டு தலைவன் கிட்லர்
ஜனாதிபதி ஆனான்
1922 அக்டோபர் 30-இல்
இத்தாலி பாசிஸ்டு முசோலினி
இத்தாலி ஆட்சியைக் கைப்பற்றினான்

- இந்தியாவில் சுதந்திரத்துக்கு முன் 500க்கு மேற்பட்ட
சிறிய பெரிய சமஸ்தானங்கள் இருந்தன
அதில் ஓர் ஏக்கர் பரப்புள்ள கத்தியவார் சமஸ்தானமும் அடங்கும்
இந்தச் சமஸ்தான மன்னர்களுக்கு
ஆலோசனை கூறும் மதிமந்திரிகளாகவும்,

திவான்களாகவும், இராஜகுருக்களாகவும் இருந்து
மன்னன் செல்வத்தின் பெரும்பகுதியையும்
அதிகாரத்தையும் அனுபவித்து வந்தவர் பிராமணர்கள்.

✪ அதனால்தான் நாடு சுதந்திரம் பெற்றபின்பும்
இந்த சமஸ்தான மன்னர்களைச்
சுதந்திர இந்தியாவுடன் தங்கள் சமஸ்தானங்களை
இணைக்கவிடாது தடுத்தார்கள் இந்தப் பிரமணர்கள்.
ஏனெனில் தங்கள் அதிகாரங்கள் பறிபோய்விடும் என்ற பயமே.
அது முடியாது போகவே! அவ்வதிகாரத்தைத்
தக்கவைக்க 'இந்துராஷ்டிரம்' என்ற முழக்கத்துடன்
பாசிசத்தின் கருவியாக பயணிக்கத் தொடங்கினர்
இந்த பயண வெற்றிக்குப் பாசிச ஹிட்லரைப்
பின்பற்றவேண்டுமெனக் கூறினர்
அந்த இந்து ராஷ்டிரத்தில்

பிராமணர்	-	தலையாகவும்
சத்திரியர்	-	தோளாகவும்
வைசியர்	-	கையாகவும்
சூத்திரர்	-	பாதமாகவும்

இருப்பார்கள் என்று இந்து ராஷ்டிரத்தத்துவத்தைக்
கோல்வார்க்கர் கூறுகிறார்.

✪ அன்று 'ஜெர்மனிமக்களே ஒன்றுபடுங்கள்'
என்று ஒன்றுதிரட்டிய ஆரிய கிட்லரின் பாசிச ஆட்சி
ஜெர்மனியைக் கிழக்கு மேற்காக பிளந்தது.
அதுபோல் வேற்றுமையில் ஒற்றுமையோடு வாழும்
இந்தப் பாரத பூமியும் 'இந்துத்துவா'
என்றகோஷத்தால் எத்தனைத்துண்டுகளாக போகின்றவோ?
ஹிட்லரின் பாசிசத்திற்குத் தப்பிய யூதர்களைப்
பங்குபோட்டு அதை யூதர்களின் மூளையால் வளர்ந்தவர்கள் தான்
ரஷ்யர்களும், அமெரிக்கர்களும்.
இது வரலாறு தந்த பாடம்.

✪ எங்களால்தான் எல்லாம் செய்யமுடியும்
மற்றவர்கள் கொள்ளையர்கள் - லஞ்சலாவண்யக்காரர் என்று
ஜனநாயக முறையில் மக்களை வெறியூட்டி
சர்வாதிகாரத்திற்கு வருபவர் - வரநினைப்பவர்
அனைவருமே பாசிஸ்டுகள்தான்

இவர்கள் ஆட்சிக்குவந்தபின்
எல்லாவித ஜனநாயக செயல்முறைகளையும்
படிப்படியாக அழித்துவிடுவார்கள்.

- சமூகச் சுரண்டலுக்கெதிரான
  எந்தப் போராட்டங்களையும் மழுங்கடிக்கவும் -
  சமூக விரோதிகளையும் பாலூட்டி வளர்க்கவும் -
  இந்தப் பாசிஸ்டுகள் காரணமாக இருப்பர்
  என்பதே வரலாற்று உண்மை.

- செர்மனியில் பாசிச ஆட்சி புரிந்த
  ஹிட்லர் ஆயிரம் ஆண்டுகள்
  நான்தான் ஆளுவேன் என ஆர்ப்பரித்தான்.
  ஆண்டதோ பன்னிரண்டு ஆண்டுகள்.
  அழிந்ததோ தற்கொலைசெய்து.
  இவனைப்போன்ற இத்தாலிய பாசிசவாதியான முசோலினி
  வெளிநாட்டிற்குத் தப்பியோட முயன்றபோது
  மக்களால் அவன் அடித்துக்கொல்லப்பட்டு.
  அனைவரும் பார்க்க விளக்குக் கம்பத்தில்
  தூக்கிலிடப்பட்டான்.
  இதுதான் பாசிசவாதிகளின் முடிவு.

9 மதமாற்ற விடுதலை

சித்தார்தனன் கயாவிலுள்ள
போதிமரத்தடியில்
புத்தராய் மாறியபோது
அவரது புத்தமதத்தால் இந்தியாவில்
பெரும்புரட்சி ஏற்பட்டது.
மிருகபலிகள் – பானபலிகள் –
பிராமணக் குருக்களுக்குத் தட்சிணைகொடுப்பது –
போன்றவற்றிற்கு விடுதலை கிடைத்தது.
அது பிராமணரின் ஆதிக்கத்தை அகற்றியது.
தீண்டப்படாத திராவிட அடிமைகளின்
நுகத்தடிகளை முறித்திட ஜாதிபிரிவற்ற
புத்தமதத்தினைத் திரளானோர் தழுவினர்.

- தங்கள் பிழைப்பும் ஆதிக்கமும்
  அகன்றுபோவதை அறிந்து ஆத்திரமடைந்த
  பிராமணர்களால் அரசு ஆதரவு பெற்ற
  மக்கள் இயக்கத்தை அவர்களால்
  அழிக்க இயலவில்லை.

- பிராமணரின் கொள்கைகளுக்கும்
  பழக்கவழக்கங்களுக்கும் எதிராக
  அரசனொருவனால் உருவாக்கப்பட்ட
  இந்த விடுதலையைக் குறித்து
  அம்பேத்கார் எழுதும்போது
  "மௌரிய அரசரின் காலந்தான்
  தீண்டபடாதவர்களுக்கு விடுதலை அளித்த
  ஒரே காலம்" என்கிறார் (எழுத்தும் - பேச்சும்)
  ஏனெனில் அதற்கு முன்னர்

"தீண்டப்படாதவர்
முதலாளிகளின் பிரம்படியோடு
கண்ணீரில் உழைத்த அடிமைகள்" (Bonded Labour)
என அழைக்கப்பட்டனர்.

✪ இந்த எழுச்சிகளுக்கும் விடுதலைக்கும்
முற்றுப்புள்ளி வைத்திடும் விதத்தில்
கி.மு. 184இல் நடைபெற்ற
புஷ்பமித்திராவின் ஆட்சிக்கவிழ்ப்புத்திட்டம்
பிராமணருக்கு ஒரு மாபெரும்
மறுமலர்ச்சியாய் அமைந்தது.

✪ இதனால் புத்தமதம்
இந்தியாவை விட்டு துரத்தப்படவும்
இங்குள்ளவர் துன்புறுத்தவும் பட்டனர்.
இக்கால கட்டத்தில் தான் தீண்டதகாதோர்
கபீர் – தூர்தான் – துளசிதாஸ் – குருநானக்
ஆகியோரால் கவரப்பட்டு
கபீர்பந்திலும், நானக்பந்திலும் சேர்ந்தனர்.

✪ 1901இல் கபீர்பந்தில் 850000 பேர் சேர்ந்தனர்.
இவர்களில் 500000 பேர் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர்.
1911-இல் மத்திய பிரதேச லக்னோவை சேர்ந்த
'ஜகஜீவன்தாஸ்' என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட
'சந்தாமி' இயக்கத்தில் 4,60,000 பேர் இருந்தனர்.
ஆனால் முகமதிய ஆட்சி வந்ததும்
தீண்டதகாதவர் பலர் தாங்களாக விரும்பி
இஸ்லாம் மதத்தில் சேர்ந்ததாக ராம்தாரி டிங்கார்
தன் நூலில் குறிப்பிடுகிறார்.
(Hindu Sanskrit Kechar Adhyay).

✪ இதுபோல் இந்தியாவிலுள்ள
திராவிடரும் - ஆரியரல்லாத மதங்களைச்
சேர்ந்தவர்களுமானத் தீண்டப்படாத மக்கள்பலர்
2500 வருடங்களாக தங்களுக்குச்
சமயநிலையிலும் - சமூக நிலையிலும்
சமத்துவம் போதித்த பல்வேறு மதங்களில்
தாங்களாகவே இணைந்தனர்.

✪ சோட்டா நாக்பூரிலுள்ள
நன்கு படித்த பழங்குடி தலைவரான டாக்டர் பாரே
தன் இளைமையைப் பற்றிக்கூறும்போது
"கிறிஸ்தவ தொடர்பு கிடைப்பதற்கு முன்பு
சமூக பொருளாதார சமய நிலையில்
பழங்குடியினராய் பாழ்பட்டிருந்த நாங்கள்
கிறிஸ்தவ தொடர்பால் ஆன்மவிடுதலையோடு
சமூக பொருளாதார விடுதலையையும்
கல்வியையும் கிறிஸ்தவம்தர
அதை எங்கள் மக்கள் ஏற்றுக்கொண்டனர்"
எனக் கூறுகிறார்.

✪ இதனை மேலும் உறுதிபடுத்தும் விதத்தில்
நமது முதல் குடியரசு தலைவர் பாபு ராஜேந்திரபிரசாத்
"கிறிஸ்தவ மிசினரியினர் பழங்குடியினர் மத்தியில்
அதிகமாக பணிபுரிந்துள்ளனர். எவ்வளவோ
தியாகம் செய்து கல்வியைப் பரவச்செய்து
அவர்கள் வாழ்வை மேம்படுத்தியுள்ளனர்" என்று
(Tribal Awakening) 'பழங்குடியினர் எழுச்சி' என்ற
தன்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

✪ இவர்களுக்குக் கல்வி கிடைப்பதைப் பார்த்து
வட்டிக்காரர்களும் - பெரிய நில பிரபுகளும் -
ஆர்.எஸ்.எஸ். காரர்களும் பயந்தனர்.
இவற்றின் வெளிப்பாடே கிறிஸ்தவ
கல்வி நிலையங்கள் தீக்கிரையாக்கப்படுவது.

✪ காந்தியடிகள் கூறுவதுபோல்
"கிறிஸ்தவ ஊழியர்
அதிக மென்மையுள்ளமும்
பக்தியுள்ளமும் கொண்டவர்
சமுதாயத்தில் தாழ்ந்து கிடந்தவர் மத்தியில்
இவர்கள் பணி அன்புப் பணியாய் அமைந்துள்ளது.
அனேகரின் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது"
(Hindu Dharma, the Glory and Abuses)

✪ விவேகானந்தரும்
"தாழ்ந்தசாதி பங்கி ஒருவன்
உயர்சாதி இந்துவிடம் வந்தால் தொற்றுநோய்போல்

அவனை ஒண்டவிடாமல் விரட்டுவார்கள்
ஆனால் அவன் ஞான தீட்சைபெற்றால்
வைதீக இந்துக்களும் அவனுடன் கைகுலுக்குவார்கள்
இதனாலன்றோ திருவிதாங்கூரில் கிட்டத்தட்ட
நாலில் ஒரு பங்கினர் கிறிஸ்தவர்களாகி விட்டனர்
நான் அவர்களைக் குறைகூறமாட்டேன்" என்று
கூறியதாக புரோ ஜெந்திராநாத் பானர்ஜி
தன் நூலில் குறிப்பிடுகிறார் (Religious Conversions in India)

- இதனைக் குறித்து
கோபாலகிருஷ்ண கோகலே
1903இல் "நம்மைப்போன்ற உடலமைப்பு –
சிந்திக்கும் மூளை – உணரக்கூடிய உள்ளம்
கொண்ட மனிதர்களைத் தீண்டத்தகாதவரென
காலாகாலமாக விலக்கி வைத்திருப்பது
கடிந்து கொள்ளவேண்டியது" என
தார்வாரில் பேசினார்.

  - இதே மனவேதனையில்
"நாம் தீண்டதகாதவர்களை நம்முடைய கிணறுகளில்
தண்ணீர் எடுக்க அனுமதிக்கவில்லை
நம்முடைய எச்சில் சோறை உண்ணச் சொல்கிறோம்.
நம்மீது அவர்கள் நிழல் பட்டாலே தீட்டு என்கிறோம்.
ஆங்கிலேயரை நாம் குற்றப்படுத்திகூறும்
ஒவ்வொரு குற்றச்சாட்டையும்
நம்மவர் மீதும் நாம் கூறமுடியும்"
என்கிறார் மகாத்மா காந்தி.

- 1871ஆம் ஆண்டு
மக்கள் கணக்கெடுப்பு அதிகாரி ஒருவர்
"காலாகாலமாக பறையர்களைத் தீண்டதகாதவரென்று
நாம் விலக்கி வைத்திருக்க
கிறிஸ்தவ மிசினரிகள் நம் பாரம்பரியங்களை
உடைத்தெறிந்து அவர்களுக்குச் சம உரிமையையும்
வாய்ப்பையும் வழங்கிவிட்டனர்" என்கிறார்.
(Madras Census Report 1871)

  - அதுபோல் 1890இல் தொடங்கப்பட்ட
"இந்திய சமூக சீர்திருத்தவாதி" என்ற பத்திரிகை

"ஒரு நல்ல காரியத்தைக் கிறிஸ்தவ மிசினரிகள் செய்துள்ளனர்.
அதற்காக அவர்களுக்கு நாம் நன்றி சொல்லவேண்டும்
தீண்டா சாதி இவர்கள் –
இவர்கள் தொட்டுவிட்டால் தீட்டு என்று
நாம் விலக்கிவைத்த மக்களைச்
சமுதாய அந்தஸ்திலே உயர்த்திவிட்டனர்"
என எழுதியுள்ளது.

- ராஜாராம் மேகன்ராய்
"கிறிஸ்தவ மதத்தின் உபதேசங்களும்
கற்பனைகளும் அற்புதமானவை
ஒரே கடவுள் என்ற உயர்ந்த எண்ணத்திற்கு
மனிதர் கருத்தை உயரச்செய்கிறது
எல்லா மனிதரையும் சாதி – அந்தஸ்து
ஏழை – பணக்காரன் என்ற வித்தியாசமின்றி
படைத்தவர் கடவுளே எனப்போதிக்கிறது"
என்கிறார் (Precepts of Jesus)

  - 1901ஆம் ஆண்டு திருவிதாங்கூர் மக்கள் தொகை
  கணக்கெடுப்பு அறிக்கையில்
  பிரசித்திபெற்ற பிராமணர் ஒருவர்
  "கிறிஸ்தவ மிசினரிகள் வந்திராவிடில்
  தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் தாழ்ந்தே போயிருப்பர்
  இவர்களின் எளிய மண்வீட்டிற்குள் நுழைந்து
  அவர்களோடு பேசி உலகத்தில் உயர்ந்து வாழும் எண்ணத்தை
  அவர்களுக்கு ஊட்டிய பெருமை மிசினரிகளைச்சாரும்"
  (The Untouchables) எனக்கூறியுள்ளார்.

- இப்படித் தீண்டதகாதவர்
கிறிஸ்தவத்தைத் தேடிவந்ததற்கு
முதற்காரணம் மதத்தின் பெயரைச்சொல்லி -
மனுதர்மம் கூறிய வர்ணாசிரத்தைச் சொல்லி
பிராமண இந்துக்கள் திராவிட இந்துக்களுக்கு
சமஉரிமையும் சம அந்தஸ்தும் கொடுக்காததே.
இரண்டாவதாக அவர்கள் பெற்ற சமூகவிடுதலையும்
திருச்சபையின் மனித அபிமான சேவைகளும் ஆகும்.

  - வங்க தேசத்தில் தீண்டப்படாதவருக்குக்
  கல்வி கற்றுக்கொடுத்த ஜேம்ஸ்லாஸ்

என்ற கிறிஸ்தவ ஆசிரியர்,
"நான் எளிய மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதை
உயர்சாதியினர் எதிர்த்தனர்.
சாதாரண மக்கள் கல்வி கற்று கண்திறந்தால்
இனி ஜமீன்தார் கொடுமைப்படுத்தி
வேலை வாங்கமுடியாது என்பதே காரணம்" என்கிறார்.

- இந்தக் கொத்தடிமை பற்றி பேசிய பானர்ஜி
"நிலமற்ற ஓர் ஏழை விவசாய குழந்தை ஒன்று பிறந்தால்
இரண்டுமடங்கு நெல் தானமாக
அந்தப் பண்ணையின் சொந்தக்காரர் கொடுப்பார்.
அதன் பொருள் அந்தக் குழந்தையும்
அந்தப் பண்ணையாரின் கொத்தடிமை என்பது அதற்குபொருள்" என்கிறார்

- மார்புக்கு மேல் துணியணியமுடியாத
திருவிதாங்கூர் திராவிட மக்களுக்குக்
'குப்பாயம்' என்ற மேலாடையை அணிவித்து -
கல்வி அறிவு கொடுத்து சமூக அந்தஸ்தோடு
வாழவைத்தவர்கள் கிறிஸ்தவ அடியவரே
அதனைப் பொறுக்காத மேல் சாதியினர் வன்முறையால்
"தோள் சீலை போராட்டம்" நடந்தது வரலாறு.
1822-இல் நடந்த இந்தப் போராட்டத்தின் வழி
சாணார், ஈழவ மக்களைச் சாதி இந்துக்களிடமிருந்து மீட்டதாக
'தாஸ்டன்' என்ற இனவியல் ஆராட்சியாளர் கூறுகிறார்.
30 ஆண்டுகளுக்குப்பின் அதாவது 1859இல்
சென்னை மாகாண கவர்னரின் தலையீட்டில்
தாழ்ந்த வகுப்புப் பெண்கள் மார்பில்
துணிபோடலாம் என்ற அனுமதி பெற்றனர்.

- தமிழகத்தில்
தீண்டப்படாத அடிமைகளுக்குக்
'படியாள் முறைக் கொடுமை' இருந்தது
இதனை எதிர்த்து 1891இல் கிறிஸ்தவ மிசினரிகளின்
இடைவிடா முயற்சியாலும் போராட்டத்தாலும்
"படியாள் பாதுகாப்புச்சட்டம்" கொண்டுவரப்பட்டது.
அதுபோல் வங்காளத்தில்
"பண்ணையாட்கள் பாதுகாப்புச்சட்டம்"
"இண்டிகோ பயிரிடுவோர் சட்டம்"
"அடிமை ஒழிப்புச் சட்டம்"

ஆகிய அனைத்தும் கிறிஸ்தவர்களின்
இடைவிடா முயற்சியின் பயனே.

- கிறிஸ்தவர்களாக மாறியபின்னர்
பல்வேறு பழங்குடியினர் - மலைவாழ்மக்கள்
தங்களிடமிருந்த பலதீய குணங்களை
மூடைகட்டி மூலையிலே தூக்கி எறிந்துவிட்டனர்.
1911 வரை விதைப்புக் காலத்தில் ‘மெரியா’ என்ற
நரபலியைக் கொடுத்துவந்த ‘குயி’ பழங்குடியினர்
கிறிஸ்தவர்கள் ஆனதும் இதனைக் கைவிட்டனர்.

- அதுபோல்
1983 வரை நரபலியை மேற்கொண்டு வாழ்ந்த
பாஸ்தாரில் உள்ள ‘கோண்டாக்கள்’
நரபலியை விடுத்து நாகரிகத்தில் இணைய
கிறிஸ்தவ மதமாற்றமே வழிவகுத்தது.

- 1858 வரை தலைகளை வெட்டுவதே பெருமை
என்ற கொலை வெறியோடு வாழ்ந்துவந்த
இந்த மலைவாழ்மக்கள் கிறிஸ்தவத்தை
அண்டியதிலிருந்து இந்த அநீத செயலுக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர்.

- இவற்றிற்கெல்லாம் மேலாக
1959ஆம் ஆண்டு வெளியான ‘தேபர்கமிஷன்’
“கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தால்தான்
நிலப்பிரப்புக்களின் கொடுமைகளிலிருந்து
தங்களைக் காத்துக்கொள்ளமுடியும்” என்று
பழங்குடி மக்கள் கருதுகிறார்கள் என்கிறது என்றால்
கிறிஸ்தவர்களின் சமூக மாற்றப்பணி
எந்த அளவு அம்மக்களுக்கு விடுதலை வழங்கியுள்ளது
என்பதை எண்ணிப்பாருங்கள்.

- ஆயினும் இன்று அரசுகள் நடத்தும்
முன்னேற்ற திட்டங்கள் ஆதிவாசிகளின் நிலையில்
முன்னேற்றம் உண்டாக்குவதற்குப்பதில்
அணைகள் - சுரங்கங்கள் - தொழிற்சாலைகள்
தொடங்குவதன் மூலம் அரசியல்தலைவர்கள்,
காண்டிராக்டர்கள், தரகர்கள் ஆகியோர்

தங்கள் வாழ்க்கையில் புகுந்து தங்கள் நிலங்களை
அபகரிக்கவும் - தங்களைச் சுரண்டிவாழவுமே
இத்திட்டங்கள் அமைந்திருப்பதாய் அவர்கள் வேதனைப்படுகின்றனர்.

- மலைவாழ் மக்களின் நிலை இது என்றால்
உள்நாடுகளில் வாழும் தலித் மக்களுக்கென்று
ஒதுக்கிய பஞ்சாயத்துக்களில் போட்டியிட முடியாதிருக்கும்
மேல் சாதி ஆதிக்கத்திலிருந்து அரசுகள்
என்று விடுதலை கொடுக்கப் போகின்றனவோ?
நாயும் மாடும் செல்லும் வீதிகளில் மனிதன் செல்லவும்
டீகடைகளில் தனிக்கப்பு முறைகளும் நீங்க என்று வழிபிறக்குமோ?
இவற்றைப் போக்க முடியாத அரசுகள்
மதமாற்றச் சட்டம் போடுவது இவர்களுக்கு விடுதலை அளிக்குமா?

  - இப்படிப்பட்ட நிலைகள் இந்தியா முழுதும் இன்றும் மறையாததால்
14-3-03 அன்று உத்தரபிரதேச மாநில தலைநகர்
லக்னோவில் நடைபெற்ற பேரணியில்
அம்மாநில அன்றைய முதல்வர் மாயாவதி
"சில பின் தங்கிய பகுதிகளில் இன்னும் தலித் இனமக்கள்
இந்து கோவில்களில் அனுமதிக்கப்படுவதில்லை
இப்படிப்பட்ட அநீதிகள் நீடித்தால் இலட்சக்கணக்கான
தலீத் மக்களுடன் நானும் புத்த மதத்தில் சேரவேண்டிய
நிலை உருவாகும்" என மனவேதனையுடன் கூறுகிறார்.
(தினத்தந்தி ஏப் 15/03)

- இப்படிப்பட்ட நிலை இன்னும் இந்திய மண்ணில்
ஒரு தொடர்கதையாவதால்தான் தங்கள் மனிதமாண்பைக்
காத்து சமூக அந்தஸ்துபெற மதம் மாறுகிறார்கள்.
இதைச் சட்டம் போட்டு தடுப்பதால் அவர்களுக்கு
மனித மாண்பும் சமூக அந்தஸ்தும் வந்துவிடாது.
மாறாக இச்சட்டங்கள்
சாதீய இந்துக்களிடம் இவர்களை
மேலும் மேலும் அடிமைப்படுத்தும்

  - பிராமணீயமல்லா மதத்தைச் சேர்ந்தோரும்
ஆரியரல்லாத இனத்தைச் சேர்ந்தோரும்
முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து
இழந்துபோன மனித அந்தஸ்தை
மீண்டும் பெற்று -

சமூக பொருளாதார அடிமைதனத்திலிருந்து விடுதலைபெற்று -
சமூகசேவை - நன்னெறி உபதேசம் மூலம்
கிறிஸ்தவத்தைத் தெரிந்துகொண்டனர் - தேர்ந்தெடுத்தனர்.

✪ எந்த அளவு சமூக அந்தஸ்தை
அவர்கள் பெற்றனர் என்பதற்கு
இதோ ஓர் எடுத்துக்காட்டு
1981 பெப்ருவரி 19ஆம் நாள்
தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில்
மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில்
தங்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட
சாதிக்கொடுமைகளிலிருந்து விடுபட
1000 தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்
இந்து மதத்திற்கு முழுக்குப்போட்டு
முஸ்லீம் மதத்துக்குப் போன செய்தி கேட்டு
இந்திய நாடே அதிர்ந்தது

✪ அங்கே சென்ற பத்திரிகை நிருபரிடம்
மதம்மாறிய ஒரு தாழ்த்தப்பட்டவன்
“நேற்று குப்பா வா போ என்றவர்கள்
இன்று வாங்க போங்க என்கிறான்.
நேற்று வரை காப்பிக்கடையில்
தனி கப்பில் – தனி இடத்தைத்
தந்தவர்கள் இன்று பொது இடத்தில் அமர்த்தி
பாய் டீ சாப்பிடுறீங்களா?
என்று கேட்கும் அளவுக்கு
எங்கள் அந்தஸ்து ஒரே நாளில்
உயர்ந்தது மதமாற்றத்தினால்தானே” என்றான்.

✪ இப்படி
சமூக அந்தஸ்தை - மனிதமாண்பை - மரியாதையை
ஒரு மதமாற்றம் கொடுக்கிறதென்றால்
அவர்கள் மதம் மாறாமல் என்ன செய்வார்கள்.
“கட்டாய மதமாற்ற தடைசட்டம்” போடும் அரசுகள்
இந்த மக்களின் சமூக அந்தஸ்தை -
மரியாதையை - மனிதமாண்பை
மதத்திலும் - சமூகத்திலும்
எப்படிப் பெற்றுக்கொடுக்கப்போகின்றன?
இவற்றை இவர்கள் பெறாததுவரை
இவர்களின் விடுதலைக்கு
விலங்குகள்தான் இச்சட்டங்கள்

10 விலங்கொடிப்போம்

பத்திரிகை ஒன்றில்
இப்படி ஒரு கார்ட்டூன் -
மூன்று மண்டை ஓடுகள்
அவற்றின் கீழே
மாண்ட இம்மூவரில்
யார் இந்து?
யார் முஸ்லீம்?
யார் கிறிஸ்தவன்?

- ஒரு குழந்தைகள் காப்பகம்
  பச்சிளம் குழந்தைகள் பலரை
  அங்கே வரிசையாய் கிடத்தியிருக்கின்றனர்.
  அங்கே ஒரு வாக்கியம்
  "இதோ இறைவன் பிள்ளைகள்"
  விரும்புவோர் எடுத்துக்கொள்க.

- இவ்வாறு பிறப்பிலும் இறப்பிலும்
  எந்த மதம்? எந்த சாதி? எனப்
  பேதமறிய முடியாத மனித இனத்தை
  இடைப்பட்டக் காலத்தில் சாதிமதபேதங்களால்
  பிரித்திட்டவன் மனிதனா? தெய்வமா?
  மனதால் சிந்தி - மனுவை நிந்தி

- ஆலயம் எழுப்பவும் -
  அதிலே ஆடம்பர விழாக்கள் எடுக்கவும் -
  சடங்கு சம்பிரதாயங்கள் செய்யவும் -
  குறிப்பிட்டவரே பூசை செய்யவும் -
  எந்த ஆண்டவர்? எங்கே? கட்டளையிட்டார்?

இவை எல்லாம் ஆண்டவர் பெயரால்
ஆசார பிழைப்பு நடத்தும்
அர்ச்சகர்கள் ஆக்கிக்கொண்ட
ஆசார நெறிமுறைகள்.
மனித இனத்துக்கு மதமென்ற பெயரில்
மாட்டிவிட்ட விலங்குகளே இவைகள்.

✪ விபத்தொன்றிலே
தனித்துவிடப்பட்ட தலித் குழந்தையொன்று
அந்தணர் குடும்பமொன்றில் குடிபுகுகிறது.
மற்றொன்று கிறிஸ்தவ தம்பதியரால்
தத்தெடுக்கப்படுகிறது.
இப்போது சொல்லுங்கள்
அக்குழந்தைகள்
சேரிவாழ் அரிசனக் குழந்தையென்றா
அழைக்கப்படும்

✪ எனவே
மதங்களும் சாதிகளும்
மனிதர்களுக்கு வர்ணம் அடிப்பதைவிட
மனித மனங்களுக்கு வர்ணம் அடிக்கட்டும்.

✪ ஒருகவிஞன்
நம் நாட்டுத் திட்டங்களைப் பற்றி குறிப்பிடும்போது
“பள்ளத்தை நோக்கி பாயவேண்டிய நதிகள்
மேட்டை நோக்கியல்லவா பாய்கின்றன” எனவருந்தினான்.
உண்மைதான் நம்நாட்டுத்திட்டங்கள்
பாமர மக்களுக்குப் பயன்படுகிறதோ இல்லையோ
நமது அரசியல்வாதிகள் - காண்டிராக்டர்கள் - பணமுதலைகள்
பைகளும், பாங்குகணக்குகளும் நிறைகின்றன.

✪ கட்டாயக்கல்வி - இலவசக்கல்வி - முதியோர் கல்வி -
முறைசாராக் கல்வி என எத்தனையோ
கல்விமுறைகளைக் காட்டியும் இன்னும்
38 விழுக்காட்டினர் எழுத்தறிவை
எட்டிப்பார்க்காமல் இருக்கின்றனர்.

✪ முன்னூறுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள்
மூடிக்கிடக்கின்றன -
மூடியவற்றைத் திறக்கவோ
நட்டத்தில் நடப்பதை இலாபப்படுத்தவோ
முயற்சி எடுக்கவோ செய்யாது
இலாபத்தில் இயங்கும் தொழிற்சாலைகளையும்
அன்னியருக்கு விற்கும் அலங்கோலங்கள்
அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

✪ ஒருபுறம் விலைவாசி உயர்வு
மறுபுறம் வேலையில்லா திண்டாட்டம்
இருக்கிற வேலையும் ஆட்குறைப்புப் பெயரில்
அன்றாடம் பறிக்கப்படுகிறது
இலவசங்கள் எடுக்கப்படுகின்றன.

✪ இவ்வாறு
சமூக பொருளாதார சிக்கலில் சிக்கித்தவிப்போர்
கூடிசிந்தித்துவிடக்கூடாது -
சிந்தனை அரசுக்கெதிராக வந்துவிடக்கூடாது -
என்பதற்காய்
கோவில் கட்டுவதாக கூறி
மாதம் மூன்று விழாக்கள் நடத்தி
மக்களைத் திசை திருப்புகிறார்கள்.

✪ கோவில் கட்டுவதாலோ –
அணுக்குண்டு வெடித்து வல்லரசாவதாலோ –
அகண்ட பாரதம் அமைப்பதாலோ –
உரோட்ரோர வாசிகளுக்குக்
குந்தக் குடிசையும் – குடிக்கக் கூழும் –
குறையின்றி கிடைத்துவிடுமென்றால்
வறுமைகோட்டினர் வாழ்வு பெறுவாரென்றால்
வாரமொரு கோவில் கட்டுவோம்.

✪ 1897 ஆம் ஆண்டு
கிறிஸ்துமஸ் நாளுக்கு முந்தியநாள் இரவு
ஒரு சுவாமிஜி தன்னைச் சுற்றியிருந்த
இளைஞர்களைப் பார்த்து

“இன்றைய இரவு ஓர் அமைதியான இரவு”
என இயேசுவின் திருச்சபையினர் கொண்டாடுகின்றனர்.
ஆனால் அவர்களைப்போல்
அவர் பிறப்பைக் கொண்டாடநான் சொல்லவில்லை
அவரது பிறப்பை ஏற்கச் சொல்லுகிறேன்.
2000 ஆண்டுகளுக்கு முன்
இதயத்தில் வீரமும் - கரங்களில் வேகமும்
கொண்டவராய் இயேசு பிறந்தார் என்பதைவிட
அவரைப்போல் நீங்கள் பிறப்பெடுக்கவேண்டும்
“இன்றைய இயேசுக்களாய்” என்றார்.

✪ அப்படி சொன்ன சுவாமிஜி வேறுயாருமல்ல
இந்தியாவின் நாலாபக்கமும் சென்று
சத்தியமும் - சமத்துவமும் - சகோதரத்துவமும் பெற்ற
சுவாமி விவேகானந்தரே.
அந்தச் சத்தியத்தையும் சமத்துவத்துவத்தையும்
சகோதரத்துவத்தையும் உருவாக்க
வெறிகொண்ட இயேசுக்களாய்
ஏறுநடைபோட எழுப்பிவிட்ட இளைஞர்களை
இணைத்து உருவானது “இராமகிருஷ்ணமிசன்”
இதுபோன்ற மதங்களைக் கடந்த
மனித நேயத்தால் மதவெறியில்லா
மகத்தான மனிதர்கள் மலர்வார்கள்

✪ பழிக்குப்பழி தீர்ப்பது மிருகசாதி
பகைவனை மன்னிப்பது மனிதசாதி
எனவே வெறியர்களை வேரறுக்க
அந்த ஒருசில விழுக்காட்டினரைத்
தனிமைப்படுத்துவோம் -
ஒதுக்குவோம் - ஓரங்கட்டுவோம்.

✪ மிகுதியானோர் - மனிதர்களாக
மகிழ்வோடு - அமைதியாக வாழ ஆசிப்பவர்கள்.
அவர்களோடு கைகோர்ப்போம் -
உறவுகளை வளர்ப்போம்.
மத நல்லிணக்க விழாக்களை நடத்துவோம்.
சமூகசேவை மன்றங்கள் படிப்பகங்கள்
விளையாட்டுக் குழுக்கள் - எழுத்தாளர் அமைப்புகள் -

கலாச்சார குழுக்கள் ஆகியவற்றை
அனைவரையும் இணைத்து நடத்துவோம்.
வேற்றுமையிலும் ஒற்றுமையாய் வாழ்வோம்.

- சமயம் என்பது ‘சமையம்’ என்ற
சொல்லிலிருந்து தோற்றியது
சமைத்தல், பக்குவப்படுத்தல் என்பதே இதன் பொருள்
பச்சை அரிசியையும், காய்கறிகளையும்
உண்பதற்கேற்ப பக்குவப்படுத்துவதே சமைத்தல்
அதுபோல் செருக்குடைய - மிருகப்பண்புடைய மனிதர்களை
மாண்புடைய, மனிநேயமுடைய மனிதர்களாய்
சமைத்து பக்குவப்படுத்துவதே சமயம்

  - இத்தகைய சமயம் ‘மதம்’ என்றசொல்லால் எப்பொழுது
  அழைக்கப்பட்டதோ அப்போதே அந்த சமயத்திலுள்ள
  இளக்கம் போய் இறுக்கம் ஏற்படலாயிற்று.
  வாதத்துக்கும் மோதலுக்கும் வழிகோலியதோடு
  மதம் பிடிக்கவும் தொடங்கிவிட்டது.
  இந்த மதவாத கருத்தியலை எதிர்க்கும்
  மனிதநேய சமூக ஆவலர்களையும் -
  மானிடப் பிரியர்களையும் -
  பாட்டாளி அறிவு ஜீவிகளையும் -
  இந்துத்துவ வாதிகள் எதிரிகளாய்ப்பார்க்கின்றனர்.

- அதேவேளையில்
இந்தியாவில் வாழும் இந்துக்கள் எல்லோரும்
இந்துத்துவாக்களுமல்லர் - இந்து ராஷ்டிரவாதிகளுமல்லர்.
எனவே இவர்களை இனங்கண்டு
இந்துத்துவாவையும் இந்துராஷ்டிரத்தையும் விரும்புபவரையும்
அன்பு கரம் கொண்டு அரவணைத்து
மதவெறி விலங்கொடித்து
மனிதநேய இந்தியாவை மலரவைப்போம்.

  - மதம் அரசியலில் கலக்காதிருக்கட்டும்.
  மதவாதிகள் ஆட்சியாளரை
  ஆட்டிப் படைப்பவராக இல்லாதிருக்கட்டும்.
  இல்லையென்றால் 2000 ஆண்டுகளுக்கு முன்
  குற்றமற்ற இயேசு சிலுவையில் அறையப்பட்டு

குற்றவாளி பரபாஸ் விடுதலையானது போல்
இந்திய மண்ணிலும் கொலையாளிகளும் கொள்ளையரும்
தீவிரவாதிகளும் தெருவிலே வலம்வர
நீதியையும் - நேர்மையையும் நேசிக்கும்
மனித நேய வாதிகள் மாயநேரிடும்.

✪ அப்போது இந்திய மண்ணில்
மக்களாட்சியோ - மதவாதிகள் ஆட்சியோ நடக்காது.
ஹிட்லர் - முசோலினி - சதாம் உசேன் போன்றவரின்
ஜனநாயகப் போர்வையிலான
பாசிச ஆட்சி நடைபெறும்.
அன்று அந்தப் பாசிச ஆட்சியிலிருந்து விடுதலைபெற
விடுதலை போராட்டம் நடத்த இம்மண்ணில்
காந்திகளோ - ஆபிரகாம் லிங்கன்களோ
இருக்கமாட்டார்கள். இந்துத்துவாவும் இராது.
ஒருவேளை அவர்களைத் தட்டிகேட்க - விரட்டி அடிக்க
சட்டாம் பிள்ளைகள் வருவார்கள்
இப்படியொரு நிலை இந்தியாவுக்கு வராமலிருக்க
இன்றே "எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்"என வாழ்வோம்.
மதவெறிவிலங்கை உடைப்போம்.

✪ மதம் என்பது
நம்மை நாகரிகம் பெற்ற திருந்திய வாழ்வுடையவராகவும்
பண்பாடு என்ற திருந்திய ஒழுக்கம் உடையவராகவும்
படைக்க வேண்டும் - பண்படுத்தவேண்டும்.
மதம் என்பது உள்ளத்துக்குப்புறம்பான
உணவு - உடை - உறையுள் முதலியவற்றின்
செம்மையான நாகரிகக் கூறுகளையும் -
எளியோரிடம் இனிதாக பேசுதல்,
அயலாரையும் அன்பு செய்தல்,
இரப்போர்க்கு ஈதல், இயன்ற வரைப் பிறருக்குதவுதல்
போன்ற பண்பாட்டுக் கூறுகளையும்
வளரச் செய்யவேண்டும்.

✪ இப்படி ஒருவனைச் சமைக்கவேண்டிய சமயம்
மதமாகி மோதலுக்கு இடமளித்தால்
அப்போது அழிவது அச்சமயம் மட்டுமல்ல
அச்சமையத்தைச் சார்ந்த மக்களும்
அம்மக்கள் சார்ந்த நாடும்தான் என்பதை உணருவோம்.

✪ அதற்காக மதத்தை ஒதுக்கிவைத்து
மனித மனத்தை வளர்ப்போம்.
மனிதாபிமானம் மலர்ந்திட
இந்தத் தன்னல முட்களை
முளையிலேயே கிள்ளி எறிவோம்.

✪ "எந்தமதக் கொடியையும்
ஏற்றிக் கொள்ளுங்கள்
ஆனால் அதை
இரத்தத்தில் கழுவி
அழுக்காக்காதீர்"

✪ "மதயானைகள் மோதும் போது
நடுவில் அகப்பட்டு நசுங்குவது
மதவெறியர்களல்ல
எளியவராகிய நாமும்
எளியவராகிய நம் வாழ்வும்".

✪ இவ்வுண்மைகளை அறிந்து
பல்வேறு வடிவங்களில்
பாமர மக்களின் உணர்வுகளைத்
தூண்டிவிடும் இந்துத்துவாக்களை
இனங்காட்டி விழிப்புணர்வு கொடுப்போம்.
ஒத்த உணர்வுடைய சிந்தனையாளரை
ஒருங்கிணைப்போம்.
மதவெறி நிகழ்வுகள் நடத்தினால்
எதிர்த்து பிரச்சாரம் செய்வோம்.
போராடும் இயக்கங்களின் போராட்டங்களில்
ஈடுபடுவோம் - ஆதரவளிப்போம்.
அப்போதுதான் அடிமை விலங்குகள்

அறுத் தெறியப்பட்டு அமைதி வாழ்வு வாழலாம்.
அந்தச் சுதந்திர இந்தியாவில் இருப்பவர்
இந்துக்களோ - கிறிஸ்தவர்களோ - இஸ்லாமியரோ அல்ல.
மனிதர்கள். அந்த மகத்தான பாரதத்தின்
விடியலுக்காய் அடியெடுத்து வைப்போம்.

Assisi Offset Press, Ph: 231085